நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
மே 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி
மா. தேன்ராஜ்

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363

# வடநாட்டார் ஆதிக்கம்

தமிழகத்தில் நடுவண் அரசுப் பணிகளிலும் பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு பிற மாநிலத்தவர் குறிப்பாக வடநாட்டுக்காரர்கள் ஏராளமாகக் குவிக்கபட்டு வருவதற்கு தமிழ்நாட்டில் வலிமையான போராட்டங்கள் கண்டனங்கள் எழுந்து வருகின்றன. பல்வேறு மொழி பண்பாடு இனங்களின் கூட்டமைப்பான இந்திய துணைக் கண்டத்தில் மொழி வழி மாநிலப் பிரிவினருக்குப் பிறகு அரசுகளின் இறையாண்மை காக்கப்படவேண்டும். அரசியல் சட்டமே இந்தியாவை அரசுகளில் ஒன்றியம் என்று தான் (Union of States) வரையறுக்கிறது. அதன் காரணமாகவே நடுவண் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அரசு நிறுவனங்கள் மண்டலவாரியாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் நோக்கத்தோடு வேலைவாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தன. 145 மத்திய அரசு நிறுவனங்களுக்கான பதவிகள் மத்திய தேர்வாணை யத்தால் 7 மண்டலங்கள் 2 துணை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு தனித்தனியாக தேர்வுகள் நடத்தப்பட்ட முறைகளை மாற்றி அகில இந்தியத் தேர்வுகள் வழியாக தோந்தெடுக்கப்படும் முறைக்கு மாற்றப்பட்டதால் மாநில பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டு வடநாட்டுக்காரர் திணிப்புக்கு வழி திறந்து விடப்பட்டது.

இந்தி பேசும் மக்களை அதிகமாகக் கொண்ட மாநிலங்கள் எண்ணிக்கையில் அதிகம் இருப்பதால் அவர்கள் தேர்வுகளில் முறைகேடுகள் மோசடிகள் செய்து கூடுதல் இடங்களைப் பிடித்து விடுகிறார்கள். இந்த மோசடிகள் கண்டறியப்பட்டு நீதிமன்றங்களால் தேர்வுகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் தேர்வுகள் இந்தி, ஆங்கில மொழியில் மட்டுமே நடத்தப்படுகின்றன. தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளில் நடத்தப்படுவது இல்லை. அய்.ஏ.எஸ். போன்ற அகில இந்திய சர்வீசுகளுக்கு தமிழில் தேர்வு எழுத அனுமதி இருக்கும்போது மத்திய அரசு தேர்வாணையம் மட்டும் ஏன் இந்த உரிமையை வழங்க மறுக்கிறது என்ற கேள்வியில் உள்ள நியாயத்தை மறுக்க முடியாது.

மூன்றாவதாக அதிகாரிகள் அல்லாத பணியாளர்கள் தேர்வுகள் மாநில அளவிலே நடத்தப்பட்டு அந்தந்த மாநில மக்களுக்கு முன்னுரிமை வழங்கிய உரிமையும் மாற்றப்பட்டு அகில இந்திய தேர்வு முறையைக் கொண்டு வந்து விட்டார்கள்.

மாநில மொழியில் தேர்வு எழுதுவோருக்கு பணியாளர்கள் வேலைக்கு முன்னுரிமை என்ற விதியை 'பாரதஸ்டேட் வங்கி' மாற்றி ஆங்கில மொழி மட்டும் தெரிந்தால் போதும் என்று அறிவித்து தமிழர்கள் வேலை வாய்ப்புகளைப் பறித்துவிட்டது.

பொன்மலை இரயில்வே பணிமனையில் சமீபத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட 325 பேர்களில் ஒருவர்கூட தமிழர் இல்லை. கடந்த செப்டம்பர் மாதம் தென்னக தொடர்வண்டித்துறை 4429 பயிற்சியாளர்களுக்கு (அப்ரண்டிஸ்) அழைப்பு விடுத்தது. 'ஆன்லைனில்' விண்ணப்பிக்க வேண்டும். தமிழகத்திலிருந்து விண்ணப்பித்தவர் களுக்கு இணைய தளம் 'ஹேக்' ஆகி, விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டது. வந்த 1765 விண்ணப்பங்களை சரி பார்த்து, அதில் 1600 வட மாநிலத்தவர்களை தேர்வு செய்துள்ளனர். ஏற்கனவே 'அப்ரன்டிஸ்' பயிற்சி எடுத்து 10 ஆண்டுகளுக்குப் பிறகும் 'பணி ஆணை' கிடைக்கப் பெறாததால் மனமுடைந்து பெரம்பூர் இணைப்புப் பெட்டி தொழிற்சாலை முன்பு ஹேமந்த் குமார் என்ற இளைஞர் தீக்குளித்து மாண்டார். இந்த நிலையை தமிழர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

தமிழர்களின் வேலை வாய்ப்புகள் உரிமைகளைப் பெற மாநில வாரியாக மாநில மொழிகளில் தேர்வு எழுதும் உரிமையையும் பணியாளர்களை மாநிலங்களிலிருந்து மட்டுமே தேர்வு செய்யும் உரிமையையும் மீட்டெடுக்கும் இயக்கங்களைத் தமிழர்கள் கட்சி வேறுபாடின்றி நடத்த முன் வரவேண்டும்.


# பெரியார் தமிழ்நாட்டுக்கு எதிரியா?

தமிழ்நாட்டிலே ஒரு உரையாடல் தொடங்கியிருக்கிறது. பெரியார் தமிழுக்கு எதிரி, தமிழருக்கு எதிரி, தமிழ்நாட்டுக்கு எதிரி போன்ற கருத்துகள் பேசு பொருளாகி இருக்கின்றன. அதாவது ஒரு நாடு என்றால் என்ன? தேசமென்றால் என்ன? அந்த தேசத்திற்கு அடிப்படையாக இருக்கின்ற பொது மொழி என்றால் என்ன? இவையெல்லாம் தமிழர்களுடைய சங்க இலக்கியங்களிலிருந்து தேடிப் பிடிக்கக் கூடியவை அல்ல. அல்லது தமிழர்களுடைய பழையப் புராணங்களிலிருந்தும் பழைய இலக்கியங்களிலிருந்தும் பெறக்கூடிய செய்திகள் அல்ல. அவை மனிதர்களுடைய நவீன கால போராட்டங்களிலிருந்து, கடந்த முன்னூறு ஆண்டுகளில் நடந்தேறிய போராட்டங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துகளும் நடைமுறைகளும் சனநாயக பொறிமுறைகளுமாகும். அந்த வகையிலே இவற்றுக்கெல்லாம் எந்த பொருளும் தெரியாதவர்கள் தான் பெரியாரைத் தமிழ்நாட்டுக்கு எதிரியென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

வள்ளுவர்கூட ஒரு நாடு என்றால்,

*உறுபசியும் ஓவாப் பிணியும்*
*செறுபகையும்*
*சேரா தியல்வது நாடு*

என்கிறார். செறுபகையென்று பார்த்தால் ஒரு நாட்டுக்கு உட்பகை உண்டு; வெளிப்பகை உண்டு. தமிழ்ச் சமூகத்துக்கு உட்பகையென்பது சாதி. வெளிப்பகையென்பது தமிழருடைய தேசிய அடையாளத்தை




**தமிழருடைய இனமானம் காக்கப்படவேண்டும் என்று போராடிய பெரியார், நவீன கருத்துகளுடைய ஒரு சிந்தனைத் தொகுப்பாக விளங்கினார். அவர் பழம் பெருமைக்குள் தன்னை அடைத்துக் கொள்ளவில்லை.**

**செ. கார்க்கி**

மறுக்கக் கூடிய இன்றைக்கிருக்கும் இந்துத்துவ சக்திகளை சொல்லலாம். இந்த இரண்டுக்கும் எதிராக பெரியார் தமது போராட்டத்தை நடத்தியவர். சாதி என்ற உட்பகைக்கு எதிராக சாதி ஒழிப்பு என்ற இலட்சியத்தை உயர்த்திப் பிடித்தவராக பெரியார் இருந்தார்.

தமிழருடைய இனமானம் காக்கப்படவேண்டும் என்று போராடிய பெரியார், நவீன கருத்துகளுடைய ஒரு சிந்தனைத் தொகுப்பாக விளங்கினார். அவர் பழம் பெருமைக்குள் தன்னை அடைத்துக் கொள்ளவில்லை. “உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்” என்று பெரிய புராணத்தில் சேக்கிழார் சொல்கிறார். “உலகம் யாவையும் தாமுளவாக்கலும்” என்று கம்பன் சொல்கிறார். ”உலகத்தோடு ஒட்ட ஒழுகல்” என்று வள்ளுவர் சொல்கிறார். வள்ளுவர் பல இடங்களில் உலகம் பற்றி பேசுகிறார். இப்படி உலகம் தழுவிய சிந்தனையும், உரையாடலும் நமக்கு உண்டு. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்பதுகூட நம்மிடையே நிலவிய பரந்த சிந்தனை மரபுக்கு ஒரு சான்று. அந்த மரபின் தொடர்ச்சியாக புதுமைக்கான ஆளுமையாகத்தான் பெரியார் விளங்கினார். தமிழ்ச் சமூகத்திற்கு புதிய கருத்துகள் வர வேண்டுமென்று அதை அறிமுகப்படுத்தியதில் ஒரு முன்னோடியாக பெரியார் திகழ்ந்தார். ஏன் இதை சொல்கிறேனென்றால், கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையாகட்டும் அல்லது பகத் சிங்கின் ‘நான் ஏன் நாத்திகன்?’ என்கிற நூலா

கட்டும் அல்லது அம்பேத்கரின் 'சாதியை அழித்தொழித்தல்' நூலாகட்டும் இவற்றையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கச் செய்து தமிழுக்குக் கொண்டு வந்தவர் பெரியார். அது மட்டுமல்ல இந்திய மொழிகளிலெல்லாம் முதன் முதலில் இவை தமிழில்தான் மொழிபெயர்க்கப் பட்டன என்ற சிறப்பும் பெரியாருக்குரியது.

அவர் இனமானம் பேசினாலும், தமிழருடைய வாழ்வுரிமைக்காகவும் சுயமரியாதைக்காகவும் நின்றவராக இருந்தாலும்கூட, "நான் மொழிப்பற்றோ இனப்பற்றோ நாட்டுப் பற்றோ அற்றவன், எனக்கு மாந்தப்பற்று ஒன்று தான் உண்டு" என்றார். அவர் வளர்த்தெடுத்த இந்த பரந்த அரசியல் கண்ணோட்டத்தினால்தான், பசுவுக்காக மனிதனைக் கொல்லும் அரசியல் தமிழ்நாட்டில் வளரவில்லை. இன்றைக்கும் டிசம்பர் 6 என்றால் இந்தியாவில் பிற பகுதிகளிலே பதட்டம் உண்டு. தமிழ்நாட்டிலே அத்தகைய பதட்டம் இல்லை என்பது பிற பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருகிறவர்களுக்குத்தான் தெரியும் அதற்கு காரணமென்னவென்றால் சுயமரியாதை இயக்கத்தினால் கடந்த 1925லிருந்து இன்றைக்கு வரை வளர்த்தெடுக்கப்பட்ட அரசியல். மரபுதான். ஒருமுறை பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சையத் அன்வர், "இந்தியாவில் விளையாட எனக்கு மிகவும் பிடித்தமான இடம் சென்னை" என்றார். அதற்கு அவர் சொன்ன காரணம், "சென்னையில் விளையாடும்போது, நான் செஞ்சுரி அடித்தால் கூட அங்குள்ள பார்வையாளர்கள் (மதம் என்ற உணர்வுகளைக் கடந்து) கைத்தட்டுவார்கள். இந்தியாவில் வேறெங்கும் அது நடக்காது' என்றார். இப்படி பரந்த மனப்பான்மைக்கு உரியவர்களாக நாம் இருப்பதற்கான காரணம், நவீனத்துவ அரசியலில் நடந்த சுயமரியாதை இயக்கம் ஆகும். நமது கடந்த கால நல்மரபுகளின் தொடர்ச்சியாக நம்முடைய நவீனத்துவ அரசியலில் உருப்பெற்ற ஆளுமையாக பெரியார் நின்று கொண்டிருக்கிறார்.

'திராவிடர்' என்ற சொல்லைப் பிடித்துக் கொண்டு திராவிட இனக்குழுக்களை சேர்ந்த, தெலுங்கர்கள் மலையாளிகள், கன்னடர்கள், தமிழர்கள் என அனைவருக்கும் பெரியார் பாடுபட்டவர் போலவும் அவர் தமிழர்களுக்கு எதிராக செயல்பட்டவர் போலவும் சிலர் திரித்து பேசிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். அவர் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றோ 'திராவிட நாடு' கோரிக்கை என்றோ 1956 லிருந்து 1973 வரை ஒருபோதும் முன் வைத்ததில்லை. 1956 லிருந்து 73 வரை 'தமிழ்நாடு தமிழருக்கே', 'சுதந்திர தமிழ்நாடு' என்ற முழக்கத்தைத்தான் வலியுறுத்திக் கொண்டிருந்தார். 1956 லே மொழிவாரி மாநிலம் என்கின்ற இன்றைய தமிழ்நாடு அமையப் பெற்றது. அப்போதுகூட 'தக்தசின பாரத்' என்று தென்னிந்தியப் பகுதிகளை இணைத்து ஒரு மாகாணமாக உருவாக்கும் கருத்து நேருவிடம் இருந்து எழுந்தபோது அதற்கு எதிராக போராடியவர்களோடு பெரியார் இணைந்து நின்றார். "இந்திய தேசிய எதிர்ப்பு இல்லாதவர்களாய், வடவர் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்கிறவர்களாய் இருக்கக்கூடிய எல்லையோரத்தில் இருக்கும் தெலுங்கர்கள், கன்னடர்கள், மலையாளிகள் எல்லாம் நம்மைவிட்டு போய் விட்டார்கள். இனி நம் மாநிலத்தை தமிழ்நாடு என்றே அழைக்க வேண்டும். இனியும் தமிழ் நாடென்று அழைக்காமல் சென்னை மாநிலமென்று சொன்னால், யார் இதை பொறுத்துக் கொள்கிறார்களோ இல்லையோ திராவிடர் கழகத்தாராகிய நாங்கள் இதை பொறுத்துக் கொள்ள மாட்டோம். மிகப்பெரிய போராட்டத்தை முன்னெடுப்போம்" என்று 1955இலே பெரியார் எழுதுகிறார். அதாவது 1956லே மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்படும் முன்பே பெரியார் இப்படி எச்சரிக்கை விடுக்கிறார். அவர் தனது வாழ்நாள் முழுவதும் தமிழரின் சாதி இழிவு போக வேண்டும் என்கின்ற இலட்சியத்தில் ஊன்றி நின்று, முழுக்க முழுக்க தமிழில் பேசி, தமிழிலேயே பல ஆயிரம் பக்கங்கள் எழுதி, தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டார்.


**'திராவிடர்' என்கின்ற சொல் சில விழுமியங்களை உள்ளடக்கமாக கொண்டச் சொல்லாக பயன்படுத்தப்பட்டது. அது இனக் குழுக்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் பட்டதல்ல.**

அதுவும் தனது இறுதி மூச்சுவரை தமிழர்களுக்காகப் பாடுபட்டு மறைந்தார். அந்த வகையிலே அவரை அயலாரென்றோ அவர் தமிழர்களுக்காக அன்றி வேறு யாருக்கோ பாடுபட்டாரென்றோ சொல்வது பெரியாருடைய வாழ்வையோ அவருடைய எழுத்துக்களையோ அறியாமலும் உலகளாவிய அர்த்தத்தில் வழங்கப் படும் தேசம், தேசியம், நாடு பற்றிய அறிவியல் கண்ணோட்டம் இல்லாமலும் நடத்தப்படும் உரையாடல் ஆகும். அத்தகையோர்தான் பெரியாரை தமிழ்த் தேசியத்திற்கோ தமிழ்நாட்டிற்கோ எதிரானவரென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் ‘திராவிடர்’ என்கிற சொல்லை ஆரியப் பண்பாட்டுக்கும், பார்ப்பனீயத்திற்கும், சாதிய மேலாதிக்கத்திற்கும் எதிரான சுயமரியாதைக்கான, சமூக நீதிக்கான, புதுமைக்கான குறியீட்டுச் சொல்லாகப் பயன்படுத்தினார். ‘திராவிடர்’ என்கின்ற சொல் சில விழுமியங்களை உள்ளடக்கமாக கொண்டச் சொல்லாக பயன்படுத்தப்பட்டது. அது இனக்குழுக்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டதல்ல என்பதைத்தான் ’திராவிடர்’ என்கிறச் சொல்லை பிடித்துக் கொண்டு பெரியார் தமிழரல்ல என்று சொல்லுகிறவர்கள் கற்றுத் தெளிய வேண்டியாகும்.

பெரியாரின் இலட்சியமென்பது சாதி ஒழிப்புதான். அவர் இடைநிலைச்சாதியினரைப் பார்த்து, “பறையன் பட்டம் போகாமல் உன்னுடைய சூத்திரப்பட்டம் போகாது” என்று சொன்னார். அதனால்தான் இன்றைக்கும் சாதி ஆதிக்கச்சக்திகளாய் இருக்கக்கூடியவர்கள், சாதி அரசியலை செய்யக்கூடியவர்கள் பெரியாரை ஏற்கவில்லை. நில அதிகாரத்திலோ அல்லது பெரும் பணக்காரர்களாகவோ இருக்கக் கூடியவர்களுக்காகத்தான் பெரியார் பாடுபட்டாரென்றால் அவர்களெல்லாம் பெரியாரைக் கொண்டாடியிருக்கவேண்டும். ஆனால், சாதியைப் பாதுகாக்க வேண்டும், சாதி ஆதிக்கத்தைப் பாதுகாக்க வேண்டும், சாதி அதிகாரத்தை நிலை நிறுத்த வேண்டுமென்று பேசக்கூடிய, பாடுபடக்கூடிய கட்சிகள் பெரியாரை எதிரியாகத்தான் இன்றும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலிருந்துதான் பெரியார் எதற்காக நின்றார், யாருக்காக நின்றார், எந்த இலட்சியத்திற்காகப் பாடுபட்டார் என்பதை நன்றாக விளங்கிக்கொள்ளமுடியும்.

அந்த வகையில் பார்த்தால், பெரியார் தமிழ்நாட்டுக்கு எதிரியா? என்றால் .ஆம், பெரியார் தமிழ்நாட்டுக்கு எதிரிதான். சாதி ஆதிக்கம் நீடிக்கவேண்டும் என்று கருதக்கூடிய பழைய தமிழகத்திற்கு அன்றிலிருந்து இன்றைக்கு வரை பெரியாரும் அவரது கருத்துகளும் எதிரிதான். ஆணாதிக்கம் நீடிக்கவேண்டும், பெண்களை அடக்கி ஆளவேண்டும் என்கிற ஆணாதிக்க தமிழகத்திற்கு பெரியார் அன்றைக்கும் இன்றைக்கும் எதிரிதான். “தமிழ்நாட்டை அடக்கி ஆளவேண்டும். இங்குள்ள வளங்களை சுரண்ட வேண்டும்” என்று கருதக் கூடிய, அதற்கு துணை புரியக்கூடிய தமிழகத்தின் ஒரு சிறு பிரிவினருக்கு பெரியார் அன்றைக்கும் இன்றைக்கும் எதிரிதான். மறு பக்கமாக, பிற்போக்குத்தனத்திற்கு, சாதி ஆதிக்கத்திற்கு, ஆணாதிக்கத்திற்கு, வெளிநாட்டார் ஆதிக்கத்திற்கு எதிரியாக இருந்து புதுமையை, சுதந்திரத்தை, சமூக நீதியை விரும்பக்கூடிய, சாதி ஒழிப்புக்காகப் பாடுபடக் கூடிய தமிழகத்திற்கு பெரியார் என்றும் தோழராக விளங்கிக் கொண்டிருக்கிறார். ●


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org

ஆண்டுக் கட்டணம் ரூ.200

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 9841489896 – periyarmuzhakkam@gmail.com




# இஸ்லாம் அறிவியல் மதமா?

– சையத் ஃபியுல்லா

## ஃபாருக் நினைவு நாள் சிந்தனை

மதவெறிக்கு உயிர்ப் பலியான கழகத் தோழர் ஃபாருக் நினைவு நாளில் நிகழ்த்தப்பட்ட உரை இது:

மறைந்த தோழர் பற்றி சில தகவல்களை கூற வேண்டும். எனக்கு முன்னால் பேசியவர்கள் ஃபாருக் கொல்லப்பட்டது மற்றும் குற்றவாளிகளினுடைய மனநிலை பற்றியெல்லாம் கூறினார்கள். எனக்கு ஆரம்பத்திலிருந்தே ஒரு சந்தேகம் இருந்தது, ஃபாருக்கை வெறும் நான்கு அல்லது பத்து நபர்கள் மட்டும் கொன்றிருக்க முடியாது, இதற்கு பின்னால் ஒரு மிகப்பெரிய இயக்கத்தின் தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்ற சந்தேகத்தை நான் ஆரம்பத்திலிருந்தே எழுப்பி வந்துள்ளேன். நீண்ட நாட்களுக்கு பின் தான் அது உண்மை எனத் தெரிந்தது. எனக்கு கிடைத்த தகவல்படி அதற்கு பின்னால் எந்த அமைப்பு இருந்தது என்பதை கண்டுபிடித்து விட்டோம். காரணம் ஊழல் செய்தவனை தகுந்த ஆதாரத்துடன் சொன்னால்தான் உண்மை வெளியே வரும் இல்லாவிட்டால் ஊழல் செய்தவன், செய்யாதவன் என்றாகிவிடுவான் அது போல வெளிப்படையான ரகசியம் என்ற அடிப்படையில்தான் இன்றைக்கு இஸ்லாமிய அமைப்புகளின் செயல்பாடுகள் இருக்கின்றன. சமீபத்தில் நடைபெற்ற ராகுல்ஹேங்கியா கொலையாக இருந்தாலும் சரி , ஃபாருக் கொலைக்கு பின் இஸ்லாமிய இயக்கங்களைக் கூர்ந்து கவனித்தேன், பலரிடம் நான் உரையாடியும் இருக்கிறேன் அப்போதுதான் தெரிந்தது அவர்களுடைய (இஸ்லாமிய அமைப்புகள்) இரட்டை வேடம் என்னவென்று. அனைவருமே அந்தக் கொலையை மறைமுகமாக ஆதரிக்கத்தான் செய்கிறார்கள். காரணம், கேரளா மாதிரியான சூழல் இங்கு உருவாகி விடக்கூடாது.

தமிழ்நாடு என்பது வறட்டுத்தனமான மாநிலம், பெரியார் தோன்றினாலும் கூட பகுத்தறிவு பூமியாக இருந்தாலும் கூட இஸ்லாம் என்பது பாதுகாக்கப்பட்டுத்தான் வந்துள்ளது என்பது வரலாற்றைப் பார்த்தோமானால் தெரிகிறது. பெரியாரைக்கூட இழுத்தார்கள்,

பெரியார் ஆரம்பத்தில் இஸ்லாத்துக்கு ஆதரவாகப் பேசியதை வைத்துக்கொண்டு பெரியாரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டார் என்று பிரச்சாரம் செய்தார்கள். பெரியார்தாசனை வைத்து காணொளியையும் வெளியிட்டார்கள். பெரியார் இஸ்லாத்தை விமர்சனம் செய்ததெல்லாம் மறைக்கப்பட்டு விட்டது. இன்னொரு முக்கியமான விசயம் பெரியாரைப் பற்றி ஆராயும்போது, அவர் காலத்தில் இஸ்லாமிய அடிப்படை பிரதிகள் பெரிய அளவில் மொழிபெயர்க்கப்படவில்லை, குர்ஆன் மட்டும் தான் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. அதிலும் ஒரு பகுதி தான் மொழி பெயர்க்கப்பட்டிருந்தது. அதுவும் அவருக்கு சரியான முறையில் சென்று சேரவில்லை, பெரியாருக்கு முன் இருந்த முஸ்லிம் இயக்கத் தலைவர்கள் சொன்னதைத்தான் பெரியார் கேட்டிருக்கிறார் என்றுதான் வரலாற்றை ஆராயும்போது தெரிகிறது.

ஆனால் இன்றைய சூழ்நிலையில், நவீன காலகட்டத்தில், இணையதளம் பெருகிய காலகட்டத்தில், அனைத்து அரபி நூல்களும் ஆங்கிலம் உட்பட அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படக் கூடிய இந்த காலத்தில் இஸ்லாத்தைப் பற்றி அனைவரும் படிக்கலாம். அதற்கான சூழல் தற்போது உருவாகிவிட்டது. இணையதளத்திலும் சரி, ஆங்கிலத்தில் கிட்டத்தட்ட 70% நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுவிட்டது. எளிமையாக இஸ்லாத்தைப் பற்றி தற்போது படிக்கலாம். பெரியாருடைய காலகட்டத்திற்குப் பிறகு, இஸ்லாம், கிருத்துவ மத அடிப்படைவாதத்தைப் பற்றிய விமர்சனங்கள் திராவிடர் கழகத்தில் மௌனமாக்கப்பட்டு வருகிறது.

பதினைந்து வருடங்களுக்கு முன்னால் அபு அப்துல்லா என்பவர் நாத்திகர்களைக் கடுமையாக விமர்சித்து ஒரு கட்டுரை எழுதினார்; அதற்கு மறுப்பு திராவிடர் கழக ஏடான 'விடுதலை'யில் வெற்றியழகன் என்பவர் எழுதத் தொடங்கியவுடன் முஸ்லிம் இயக்கத்தைச் சேர்ந்த பெரியவர்கள் பெரியார் திடலுக்கு சென்று ஆசிரியர் வீரமணியிடம் முறையிட்டவுடன் அந்த மறுப்புத் தொடர் நிறுத்தப்பட்டது. இப்படியும் சில சம்பவங்கள் நடந்தது. ஆக, தமிழ்நாட்டில் இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பற்றி விமர்சனம் என்பது அறவே இல்லையென்றே சொல்லலாம். கேரளா மற்றும் மகராஷ்டிரா மாநிலங்களின் சூழல் இங்கே இல்லையென்றே சொல்லலாம்.

அறிவுப் பாரம்பரியமான மாநிலமாக இருந்தாலும் இஸ்லாமிய அடிப்படை வாதத்தை விமர்சிக்கும் இடம் இல்லாமல் போய்விட்டது. அதைத்தான் இங்கு சாதகமாக எடுத்துக் கொண்டு ஃபாருக் போன்ற தோழர் கொல்லப்படுவதற்கான மிக முக்கியமான காரணமாகவும் அமைந்தது. உலகம் முழுக்கவே இது போன்ற அச்சுறுத்தல் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் உரிய பாதுகாப்பு இருக்கும். ஆனால் இங்கே குற்றவாளிகள் எந்த பதற்றமும் இன்றி நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தைரியமாக நடக்கக்கூடிய சூழல் தமிழ்நாட்டில் இருக்கிறது என்பது வேதனைக்கும் அவலத்துக்கும் உரியதாகும்.

தலைப்புக்கு வருவோம்,

மதம் என்பது நம்பிக்கை சார்ந்த ஒன்று. அறிவியல் என்பது நம்பிக்கையை மட்டும் ஏற்காதது. விஞ்ஞானத்துக்கும் மதத்துக்கும் இடையில் பாரதூரமான இடைவெளி உள்ளது. எதிரானது, அறிவியல் என்பது மதங்களுடன் ஒத்துப் போகாது. மதங்கள் எப்போதும் விதிகளை நம்பும், அது எந்த மதமாக இருந்தாலும், விதிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆனால் அறிவியல் என்பதும் பகுத்தறிவு என்பதும் காலத்தின் இயக்கம் மார்க்சியத்தில் சொல்வார்கள், அது அதன் போக்கில் நடைபெறுகிறது, இயக்கவியல் விதி, இயக்கவியலின் விதிப்படிதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மதவாதிகளைப் பொறுத்த வரையில் அறிவியலை, அவர்கள் ஒரு கட்டத்தில் தன் பக்கம் இழுத்துக்கொள்ளப் பார்த்தார்கள். இதை கிருஸ்துவம்தான் முதன் முதலில் செய்தது.

அறிவியலை தன்பக்கம் இழுத்துக் கொள்வதின் மூலம் தன்னுடைய இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள அவை அறிவியலை எடுத்துக் கொள்கின்றன. வரலாறுகளில் கிருஸ்துவத்தை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு அறிவியல் விஞ்ஞானியையும் கொன்றார்கள். அய்ரோப்பியர் வரலாறுகளிலும், ப்ருனோவைக் கொன்றார்கள், கலிலியோவைச் சிறைபடுத்திக் கொடுமைபடுத்தினார்கள். இதில் நியூட்டன் தான் பைபிளையும் ஏற்றுக் கொண்டதால் விட்டுவிட்டார்கள். அதற்கு பிறகு 19-ஆம் நூற்றாண்டில் தான் அய்ரோப்பாவில் விஞ்ஞானிகள் சுதந்திரமாக செயல்படலாம் என்ற நிலை ஏற்பட்டது.

இஸ்லாத்தை எடுத்துக்கொண்டால் 20ஆம் நூற்றாண்டில்தான் அடிப்படைவாதம் மேலெழுந்து வருகிறது. காலனி ஆதிக்க விடுதலைக்குப் பிறகுதான் இஸ்லாமிய அடிப்படைவாதம் மேலெழுந்து வருகிறது. அதற்குப் பின்தான் அறிவியலோடு மதத்தை ஞாயப்படுத்த ஆரம்பிக்கிறார்கள். அதற்கு முன் 19-ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் இஸ்லாமிய நூல்கள் அதிகமாக மொழிபெயர்க்கபடாத காலகட்டத்தில் அறிவியல் என்றாலே என்னவென்று தெரியாத சூழல்தான் நிலவியது. அதற்கு முன் கிருஸ்துவம் அறிவியலை ஏற்றுக் கொள்ளும்முன் பைபிளோடு எல்லாவிதமான அறிவியலையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது. அதாவது, கோபர்நிகஸ், கலிலியோ போன்றவர் களின் அறிவியல் ஆய்வுகளை ஏற்றுக்கொள்ளாத கிருஸ்துவம், அதன்பின் அவர்களின் ஆய்வுகள் முன்னரே பைபிளில் கூறப்பட்டுள்ளது என்று அறிவியல் மூலமாக தங்களின் இருப்பை நிலைநிறுத்திக் கொண்டது. காலகட்டங்கள் வளர வளர அறிவியலோடு பைபிளை ஒப்பிட்டு ஞாயப்படுத்தி கதைகளைக் கிளப்புவது ஒரு போக்காக இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகட்டம் அதாவது 1950-களுக்குப் பிறகு இஸ்லாமிய நாடுகளிலிருந்தும், மேற்கத்திய நாடுகளிலிருந்தும் இஸ்லாத்தை அறிவியலோடு ஞாயப்படுத்தக்கூடிய ஒரு போக்கு உருவானது.

**‘ஹலால்’ அறிவியலா?**

தற்போதைய சூழலில் உங்களுக்கு தெரிந்த அறிவியல் “ஹலால்” அனைத்து கடைகளிலும் ஒரு BRAND போல உருவாக்கிட்டாங்க. ISO certificate போல இதையும் (ஹலால்) ஒரு சான்றிதழாக உருவாக்கிட்டாங்க. இணையத்தில் தற்போது HALAL certification.in என்ற பக்கம் இருக்கிறது. அதில் வரைமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கும். உணவுப் பொருட்களில் அதாவது மாட்டிறைச்சியில் ஹலால் என்பது எப்படி வரும் என்பது போன்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கும். அதை ஞாயப்படுத்துவதற்காக ‘வாட்ஸ் அப்’ அறிமுகமான இந்த அய்ந்து வருடங்களில் பரப்பிக்கொண்டே இருக்கிறார்கள். ஹலால் என்பது என்ன? “முறைப்படி அறுத்தல்” போன்ற அறிவியல்பூர்வமான தகவல்களைப் பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள். இதில் என்ன இருக்கிறதென்று பார்த்தோமானால், இஸ்லாம் தோன்றிய அந்த காலகட்டத்தில் புலால் உணவு முறை உலகம் முழுக்க இருந்துள்ளது. அந்த காலகட்டத்தில் நபிகளாரின் காலகட்டத்தில்

**‘ஹலால்’ அறிவியல் என்று கூறுகிறவர்கள் ஒரு முஸ்லிம் அல்லாதவர் இதே மந்திரத்தை (அல்லாஹ் அக்பர்) சொல்லி அறுத்தால் அதைச் சாப்பிடுவார்களா?**

அவர்களும் அறுத்திருக்கிறார்கள். கூர்மையான ஆயுதங்களைக் கொண்டு அறுத்திருக்கிறார்கள். அவர்களுடைய தெய்வங்களின் மந்திரங்களை சொல்லி அறுத்திருக்கிறார்கள். இவர்கள் என்ன சொல்கிறார்களென்றால், அல்லாவின் பெயரைச் சொல்லி அறுக்க வேண்டும் என்று மாற்று கிறார்கள். ஹலால் என்பது அவ்வளவுதான். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் அதை ஒரு BRAND ஆக மாற்றி, “முறைப்படி அறுத்தல்” என்று மாற்றுகிறார்கள். ஏனென்றால், மந்திரம் என்று சொன்னால் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உன் மந்திரம் உனக்கு என் மந்திரம் எனக்கு என்று புறக்கணித்துவிடுவார்கள் என்ற காரணத்தினால், முறைப்படி அறுத்தல் என்ற அறிவியல்பூர்வமான முறையாக ஞாயப்படுத்தி விட்டார்கள். தற்போது ஒரு சில மருத்துவர்கள் ஆய்வுகள் செய்து ஒரு சில தகவல்களை வெளியிட்டதாக சொல்கிறார்கள். என்னவென்றால், ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும் போது கழுத்திலுள்ள மூச்சுக்குழாயும், இரத்தக் குழாயும் ஒரே சமயத்தில் அறுக்கப்பட்டு கால்நடைகளை உயிரிழக்கச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது கால்நடைகளின் நரம்பு மண்டலம் துண்டிக்கப்படாமலிருக்க வேண்டும். அறுக்கப்பட்ட கால்நடைகளின் இரத்தம் முழுவதும் வழியும்படிச் செய்ய வேண்டும். “அல்லாஹ் அக்பர்” என்று சொல்லியும் இருக்க வேண்டும் என்பதும் பொருள். இரத்தம் முழுவதும் வழிவதன் நோக்கம், அறுக்கப்பட்ட கால்நடையின் இரத்தக்குழாயில் இரத்தம் தங்கி கிருமிகள் உருவாகாமல் தடுப்பதே ஆகும். கால்நடைகளை அறுக்கும் போது தண்டுவடம் துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும். தண்டுவடம் துண்டிக்கப்பட்டால் இதயத்திற்கு செல்லக்கூடிய ரத்தநாளங்கள் பாதிக்கப்பட்டு இதயம் நின்று போகக் கூடிய நிலை ஏற்படலாம். இதனால் இதயத்தில் உள்ள இரத்தநாளங்களில் இரத்தம் தங்கிவிடக்கூடும். இதன் காரணமாக

**அபு அப்துல்லா என்பவர் நாத்திகர்களைக் கடுமையாக விமர்சித்து ஒரு கட்டுரை எழுதினார்; அதற்கு மறுப்பை திராவிடர் கழக ஏடான 'உண்மை'யில் வெற்றியழகன் என்பவர் எழுதத் தொடங்கியவுடன் முஸ்லிம் இயக்கத்தைச் சேர்ந்த பெரியவர்கள் ஆசிரியர் வீரமணியிடம் முறையிட்டவுடன் அந்த மறுப்புத் தொடர் நிறுத்தப்பட்டது.**

நோய்க்கிருமிகள் உருவாக காரணமாக அமைவது இரத்தமே! ஹலால் முறையில் அறுக்கப்படும் இறைச்சி நீண்ட நேரம் கெட்டுப்போகாமல் இருக்கும். ஹலால் முறையில் அறுக்கப்படும் இறைச்சியில் இரத்தம் கலக்கப்படாமல் இருப்பதால், வேறு முறையில் அறுக்கப்படும் இறைச்சியை விட ஹலால் முறையில் அறுக்கப்படும் இறைச்சி நீண்ட நேரம் கெட்டுப் போகாமல் இருக்கும். 'ஹலால் முறையில் கால்நடைகளை அறுக்கும் போது கால்நடைகள் வலியை உணருவதில்லை'. இதன் மூலமாக கால் நடைகளை அறுக்கும்போது கால்நடைகளின் கழுத்து நரம்புகள் மிக வேகமாக அறுக்கப்பட்டு வலியை மூளைக்கு கடத்திச் செல்லும் நரம்பு மண்டலம் துண்டிக்கப்பட்டு விடுவதால் அறுக்கப்படும் கால்நடைகள் வலியை உணருவதில்லை. இரத்தம் உடலிலிருந்து வெளியேறுவதால் உடலிலுள்ள சதைப்பாகங்கள் இரத்தமின்றி சுருங்கிவிடுவதால் ஏற்படும் மாற்றத்தால் தான், அறுக்கப்பட்ட மிருகங்கள் துள்ளுவது போலவும் துடிப்பது போலவும் தெரிகிறதே தவிர ஏற்படுகின்ற வலியால் அல்ல. இவைகளை ஞாயப்படுத்த, இது போன்ற செய்திகளை தற்போது நிறைய WhatsApp இல் பரப்பி வருகிறார்கள். தற்போதுள்ள, அஞ்சப்பர், தலப்பாக்கட்டி போன்ற உணவகங்களில் நுழைவாயிலிலேயே, நான் முன் சொன்னது போல HALAL certification.in என்ற அமைப்பின் சான்றிதழ்களை வைத்துள்ளனர். அதை எப்படி கொடுக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இதில் முறைப்படி அறுத்தல் என்பது வெறும் கத்தியை வைத்து கழுத்தை அறுப்பதல்ல அந்த மந்திரங்கள் தான். நான் எனக்கு தெரிந்த மத அறிஞர்களிடம் நிறைய கேள்வி கேட்டுக்கொண்டே உள்ளேன். 'ஹலால்' அறிவியல் என்று தானே சொல்கிறீர்கள் ஒரு முஸ்லிம் அல்லாதவர் இதே மந்திரத்தை (அல்லாஹ் அக்பர்) சொல்லி அறுத்தால் அதைச் சாப்பிடுவீர்களா? என்று கேட்டேன். இதுவரை எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. அப்போ நீங்கள் ஹலால் என்று சொல்வதன் மோசடி என்ன? மற்றவர்களை ஏமாற்றுவதற்காக அறிவியல் ஞாயத்தைக் கொடுக்கிறீர்கள். இதை அய்ரோப்பிய ஒன்றியம் ஏற்றுக்கொண்டுள்ளதா? இன்றைய நவீன மருத்துவர்களாகட்டும், மானுட வியலாளர்களாகட்டும் இதை அங்கீகரித்திருக் கிறார்களா? இவர்கள், விஞ்ஞானிகள் என்று கூறுபவர்கள் அனைவருமே அரபு நாட்டை சேர்ந்தவர்கள். அவர்கள் அந் நாட்டின் இஸ்லாமிய அரசுக்காக நியமிக்கப்பட் டவர்கள். எப்படி இந்தியாவில், ஆதி காலத்தில் ராக்கெட், விமானம், கம்பியூட்டர் இருந்தது என்று அறிவியல் மாநாட்டில் விஞ்ஞானிகளை வைத்து மோடி சொல்ல வைத்தாரோ அதே போலத்தான் அரேபிய அறிவியலாளர்கள் என்று சொல்லப் பட்டவர்களும்.

## கடல்வாழ் உயிரினங்கள் அனைத்தும் ஹலாலா?

அடுத்தது மீன், குர்ஆனில் கடலில் வாழும் உயிரினங்கள் யாவும் ஹலால் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது கடலில் பல வகையான உயிரினங்கள் உள்ளது அனைத்தும் ஹலால் என்றால், கடலில் ஒரு சில வகை மீன்கள் விசமுடையதாக உள்ளது. அதை சாப்பிடலாமா.? பாம்பு இருக்கு, திமிங்கிலம் இருக்கு, கடல் நாய் உள்ளது அதை சாப்பிடலாமா.? இந்த நாயைப் பற்றி கூட இஸ்லாத்தில் ஒரு விவாதம் இருக்கு. இஸ்லாத்தில் ஒரு பிரிவில் நாய் இறைச்சியை சாப்பிடலாம். எகிப்து, தாய்லாந்து, வியட்னாமில் உள்ளவர்கள் நாய் இறைச்சியை சாப்பிடுவார்கள். இப்படியான ஒரு விவாதமும் உள்ளது. கடலில் உள்ள அனைத்தும் ஹலால் என்றால் விசமுடையதை சாப்பிடலாமா என்ற கேள்வி வருகிறது. மேலும் இறந்தவைகளை உண்ணக் கூடாது என்று உள்ளது. அப்படியென்றால் மீன்களை எப்படி உண்ணலாம்.? இவையெல்லாம் மாற்று சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகள்; இன்னமும் பதிலலிக்கப்படாத கேள்விகள். எனவே ஹலால் என்பது, இஸ்லாம் தன்னுடைய இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள ஏற்படுத்தப்பட்ட மதரீதியான BRAND தான் என்பதைத் தவிர அதில் வேறொன்றும் இல்லை. இறைச்சியை எப்படி சாப்பிடலாமென்று அறிவியல் பூர்வமான ஆய்வுகள் ஏற்கெனவே வந்துள்ளன. இஸ்லாமிய

நாடுகளுக்கு இந்தியா, அய்ரோப்பியா நாடுகளி லிருந்து இறைச்சி ஏற்றுமதியாகிறது. அரேபியாவில் ஆஸ்திரேலியா மட்டன்ஸ் ஏற்றுமதியாகும் அதில் ஹலால் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கும். எப்படியென்றால் இயந்திரங்களைப் பயன்படுத்தி அறுக்கப்படும் இறைச்சிக்கு மந்திரங்கள் சொல்லப்பட்டு அறுக்கப்படுகிறது. இதை யாரும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை, பொய்யான அறிவியல் விளக்கத்தை சாதாரண மக்களை ஏற்றுக்கொள்ள வைக்கத்தான் இது போன்ற செய்திகள் இணையதளங்களிலும், WhatsApp-களிலும் பரப்பிக் கொண்டுள்ளனர். கிருஸ்துவ மதத்தில் உள்ள பைபிளில் கூட, இரத்தத்தை முழுமையாக வெளியேற்றுங்கள் என்ற ஒரு வசனம் வரும். அதை தற்போது, இஸ்லாமிய கடைகளில் சாப்பிடுவதை ஒரு பிரிவினர் அதிகம் விரும்புகின்றனர். இதில் மந்திரம் தானே தவிர அறிவியல் என்ற எதுவும் இல்லை. இதோடு தொடர்புடைய இன்னொரு கேள்வி, வேட்டையாடுதல் இஸ்லாத்தில் உண்டு. அதிலும் மந்திரத்தை சொல்லி பறைவையையோ, விலங்கையோ வேட்டையாடி உண்டால் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால், அம்பினால் பறைவையின் உடல் கிழிக்கப்படும்போது, முறைப்படி அறுத்தல் அடிபட்டுப்போகிறதே.? ஆக அடிப்படையில் ஹலால் என்பது மந்திரம்தான். வரலாற்றுப்பூர்வமாக அது மந்திரம்தான் வேறொன்றுமில்லை. இருபதாம் நூற்றாண்டில், சவூதி அரசுதான் தன்னை உலகளவில் இஸ்லாமிய ஏகாதிபத்திய நாடாக நிலைநிறுத்திக் கொள்ள இஸ்லாமியர்களை தன் பக்கம் திருப்ப இது போல் செய்துவருகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

# முஸ்லிம்கள் நாம் சுயபரிசீலிப்போம்!



## பாத்திமா மாஜிதா

*இலங்கையில் 'அய்.எஸ்.' பயங்கரவாதம் நிகழ்த்திய குண்டுவெடிப்புக்கு எதிர் வினையாக இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் எழுதிய கட்டுரை.*

வெடிகுண்டுத் தாக்குதல்கள் அரச அதிகார சக்திகளின் துணையோடுதான் நடை பெற்றுள்ளன என்பதற்கு நிறைய சாட்சியங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. ஆனால், அரசை மட்டுமே நாங்கள் பொறுப்புக்கூறுவது ஒருவிதத் தப்பித்தல்தான். "தாக்குதல்களை நடத்தியவர்கள் முஸ்லிம்கள் அல்ல; அவர்கள் பயங்கரவாதிகள்; அவர்களுக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தமில்லை" என்று சப்பைக்கட்டுவதை நிறுத்துங்கள். இப்போதுகூட நம்மை நாமே சுயபரிசீலனை செய்து கொள்ளாவிட்டால் எங்கேயோ போய் முட்டி மோதிவிடுவோம்.

கிட்டத்தட்ட இரு தசாப்தங்கள் (20 ஆண்டுகள்) முன்னோக்கிப் பார்க்கிறேன். என்னையும் என்னைச் சுற்றி இருந்தவர்களும் படித்த பாடசாலை, பல்கலைக்கழகங்கள், வேலை செய்த இடங்கள் எல்லாவற்றிலும் மனிதம் இருந்தது. படிப்படியாக அரேபியக் கலாச்சாரம் தலைக்கு ஏறத் தொடங்கியது. முஸ்லிம், காபிர் என்ற பிரிவினைப் போக்கை இந்த ஒற்றைக் கலாச்சாரம் ஏற்படுத்திவிட்டது. அன்று நாம் சாப்பிட்ட நாரிசா சோறு, பராத் ரொட்டி போன்ற எல்லாவற்றையும் ஹராம் என்ற ஒற்றைக் கதவு போட்டு அடைத்துவிட்டார்கள். ஒவ்வொருவரும் அடுத்த சமூகத்திலிருந்து பிரித்துவிடப் பட்டுள்ளோம். நான் ஐந்து வயதாக இருக்கிறபோது எனது ஆடையைப் பற்றி கேள்வி எழுப்பாத மதரஸாக்கள் இன்று எனது எட்டு வயது மகள் கருப்பு ஹபாயாவை அணிந்துவந்தால்தான் ஓத முடியும் என்று சட்டம் வகுக்கின்றன. பாவாடை சட்டை தாவணி அணிந்து பாடசாலை சென்ற ராத்தா பல்கலைக்கழகம் செல்கிற அவளது மகளுக்குக் கண்கள் இரண்டு மட்டும் தெரியும் விதமாக ஹபாயாவைப் போர்த்தி அனுப்பி வைக்கும் சூழல் இலங்கையிலே நிலவுகிறது.

சகிப்புத்தன்மையற்ற வஹாபியிஸத்தின் கொடூரங்கள் எல்லாவற்றையும் நாங்கள் பார்த்தும் பார்க்காமலும் இருந்த இந்த நோய் முற்றித்தான் பயங்கரவாதமாக இன்று மாறி உயிர்களைப் பலிகொண்டு நிற்கும் நிலை உருவாகியிருக்கிறது. சில குறிப்பிட்ட தீவிரவாத அமைப்பின் நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் இக்கட்டான நிலையில் நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இனிமேலும் சவுதியின் கைக்கூலிகளாகச் செயல்படும் இத்தீவிரவாதப் போக்கைக் கண்டுகொள்ளாமல்விடுவது முஸ்லிம் சமூகத்துக்கு மிகவும் ஆபத்தானது. ஆகையால், நம்மைச் சுற்றி என்ன நடந்தது, எப்படியெல்லாம் நாம் மூளைச்சலவை செய்யப்படுகிறோம் என்பதை உணருங்கள்; நம் தலைமுறைகளைக் காப்பாற்ற முனையுங்கள்.

கட்டுரையாளர் : இலங்கை தமிழ் எழுத்தாளர், வழக்கறிஞர் (நன்றி : 'தமிழ் இந்து' நாளேடு)

# கள்ள மௌனத்திலிருந்தே உருவாகின்றன வெடிகுண்டுகள்



*ஸர்மிளா ஸெய்யித்*

## இலங்கை அய்.எஸ். குண்டுவெடிப்புப் பயங்கரவாதத்திலிருந்து பாடம் பெறுவார்களா?

*அது 2002 என்று நினைவு. எங்கள் ஊரில் திடீரென உருவெடுத்த ஒரு பெயர் தெரியாத அமைப்பு, பிரச்சாரம் செய்யத் தொடங்கியது. இந்தச் செயல்பாடு பிரச்சாரத்தோடு நின்றுவிட வில்லை. வீடு வீடாகச் சென்று ஆன்டனாக்களை உடைப்பது, சிடி விற்கும் கடை உரிமையாளர்களை எச்சரித்து, கடைகளை எரிப்பது என்று வன்முறையாக மாறியது.*

*அடுத்து, கறுப்பு ஹபாயாக்களையும் நீண்ட அங்கிகளையும் கொண்டு வந்து 'இதுதான் இஸ்லாமிய உடை' என்று யாரோ சில வியாபாரிகள் அறிமுகப் படுததினார்கள். 'எங்கள் இறுதித் தூதர் முஹம்மத் நபி அவர்கள் வாழ்ந்த மண்ணில் பெண்களெல்லாம் இதைத்தான் அணிகிறார்கள். இது எங்கள் கலாச்சாரம்' என்று ஏற்பதற்குப் பெண்களையும் பிள்ளைகளையும் பழக்கப்படுத்தினார்கள். இது பெண்களுக்குப் பாது காப்பான கவுரவமான உடை என்பதான உணர்வை வலிந்து உருவாக்கிப் பெண்கள் வாயாலேயே சொல்லும்படி மூளைச் சலவை நடந்தது. பாடசாலை மாணவிகளும், பல்கலைக் கழகம் செல்லும் மாணவி களும் கறுப்பு அங்கியை மட்டும்தான் கட்டாயமாக அணிய வேண்டும் என்று வெள்ளிக்கிழமை ஜும்மாக் களில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்துப் பிரச்சாரம் செய்யப்படலானாது. இது எங்கள் ஊரில் மட்டும் நிகழ்ந்த சம்பவமல்ல; இலங்கையில் பெரும்பாலாக முஸ்லிம்கள் வாழும் எல்லா ஊர்களிலும் இப்படித் தான் நடந்தது.*

*திடீரென்று முளைத்த சிந்தனைப் பள்ளிகளுக்கு அரபு நாடுகளிலிருந்து நிதி வசூலாகி வந்தது. வெறும் நூறு இருநூறோ ரூபாய்களை மட்டும் நன்கொடை யாகச் செலுத்தி நாங்கள் கற்ற குர்ஆனை மாதாந்திரம் மூவாயிரம் செலுத்திக் கற்கும் நிலை உருவாக்கப் பட்டது. மதக் கல்வி அவசியமேயின்றி முன்னிறுத்தப் பட்டது. வியாபாரமானது, சில உலமாக்கள் சொத்துக்கள் சேர்த்தார்கள். அவ்வப்போது ஆடு, மாடு அறுத்து விருந்துகள் நடத்தினார்கள். இவர்களுக்குள் இந்தச் சிந்தனை மாற்றங்கள் எப்படித் திடீரெனத் தோன்றின என்று சிந்திப்பதில் யாருக்கும் ஆர்வம் இருக்கவில்லை.*

*மதத்தின் பெயராலான இத்தகைய சின்னச் சின்ன அடிப்படைவாதச் செயல்பாடுகளின் ஊற்றுக் கண்களை ஆழமாக நோக்கத் தவறியதோடு, மத பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள், எழுதுகிறவர்களை 'மேலைத் தேயக் கைக்கூலிகள்' என்றவர்கள், உண்மையை உரக்கப் பேசியோர் - எழுதியோரின் கழுத்துகள் நெரிக்கப்பட்டபோதும், சமூக ஊடகங்களிலும் வாழ்விலும் அவர்கள் அவ மானப்படுத்தப்பட்ட போதும் மௌனித்திருந்தவர்கள் கூட இதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களே! இப்போது வெள்ளம் தலைக்கு மேல், நாடகங்களின் அரங்குகளை மாற்ற வேண்டிய தருணம்.*

*இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் தீவிர வாதத்துக்கு எதிராக இன்று அழத் தொடங்கியிருக் (கிறோம்)றார்கள். ஆனால், 'தீவிரவாதிகளுக்கு மத மில்லை, அவர்கள் யாராக இருந்தாலும் கொல்லப்பட வேண்டும்' என்பதோடு இனியும் தப்பிக்க முற்பட்டு விட முடியாது. இத்தகைய மதத் தீவிரவாதக் கருத்து களுக்கு எதிராகக் கடந்த காலங்களில் எதிர்வினை யாற்றி இருக்கிறோமா என்று நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைக் கேளுங்கள். மௌனமாக இருந்தவர்கள் கூடத் தீவிரவாதத்தை ஆதரித்தவர்கள் என்பேன்.*

*சமூக ஊடகங்களில் வெளியான மத தீவிரவாதக் கருத்துகளை 'நமக்கென்ன!' என்றும், 'யாரோ ஒருவன் உளறுகிறான்!' என்றும் பொறுப்பற்று இருந்த நீங்கள் இப்போது நல்லிணக்கம் பேசுகிறீர்கள்; தீவிர வாதிகளைக் கொல்ல வேண்டும் என்றால், முளை யிலேயே கிள்ளி எறிய வேண்டியதை, அதற்கான வாய்ப்புகள் இருந்தும் நீங்கள் செய்ய முன் வரவில்லை என்றுதானே பொருள்! தேவைக்கு அதிகமாகச் சிந்தனைப் பள்ளிகள் வந்தபோது ஹபாயா, முகமூடிகள் வந்தபோது அதைக் கலாச்சார மாற்றம் என்பதாக அங்கீகரித்தவர்கள், அவற்றையெல்லாம் நம் கைகளில் கொணர்ந்து சேர்த்த அதே மனிதர்களால் தீனுக்கான போர் நடத்தப்படும்போது தனித்து நிற்கப் பார்ப்பது அறிவு முரணில்லையா?*

*வழக்கம்போல அரசாங்கத்தின் சதி, மேலைத் தேய சதி என்றெல்லாம் புலனாய்வு விசாரணைகளை நமக்கு நாமே செய்து திருப்திப் பட்டுக் கொள்ள விளைவதால் எவ்வளவு தூரம் நம்மை நாம் நியாயப்படுத்திக் கொள்ள முடியும்?*

*இந்த உண்மைகள் கசப்பானவைதான்; மருந்துகள்போல, நோய் தீர விரும்பினால் நீங்கள் ஒவ்வொருவரும் சிகிச்சையளிக்கப்பட்டே ஆக வேண்டும். உங்கள் நோயைக் கண்டறிந்து குணப்படுத் துங்கள். நோய்க் கூறுகளுக்குச் சிகிச்சை யளிப்பதும், சுகதேகிபோல நடித்திருப்பதும் உங்கள் தெளிவு!*

கட்டுரையாளர் : இலங்கை தமிழ் எழுத்தாளர்,
'உம்மத்' நாவலாசிரியர்
நன்றி: 'தமிழ் இந்து'



# இந்தி எதிர்ப்புக்கு தமிழர் படை நடத்திய பட்டுக்கோட்டை அழகர்சாமி



க. திருநாவுக்கரசு

*பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தங்களை ஒப்படைத்து எதிர்நீச்சலில் வாழ்ந்து காட்டிய அஞ்சாநெஞ்சன் அழகிரி குறித்த வாழ்க்கைச் சுருக்கம்.*

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களின் வளர்ச்சிப் போக்கில், தம்மை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர் பட்டுக்கோட்டை அழகர்சாமி! இவரது பெயருக்கு முன்பு பட்டுக் கோட்டை என்று அடைமொழி இருந்தாலும், இவரது சொந்த ஊர் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள காருகுறிச்சி ஆகும். இவரது பெற்றோர் வாசுதேவ நாயுடு - கண்ணம்மாள், தந்தையார் வாசுதேவ நாயுடு பட்டாளத்தில் சுபேதாராகப் பணியாற்றி விட்டுப் பின்னர் காவல் நிலையத் தலைமைக் காவலராக (ஹெட் கான்ஸ்டபிள்) வேலை பார்த்தவர்.

அழகர்சாமி பசுமலையில் நான்காவது படிவம் (9ஆம் வகுப்பு) வரை படித்தவர். அதன் பிறகு, பட்டுக்கோட்டையில் அந்நாளில் நீதிக்கட்சியில் புகழ்பெற்ற வழக்கறிஞராய் இருந்த வேணுகோபால் நாயுடு என்பவரின் பரிந்துரையின் பெயரில் கூட்டுறவு வங்கியில் எழுத்தராகச் சில காலம் பணியாற்றினார். அந்த பாங்கியில் வேலை பார்த்த பார்ப்பன மேலாளர்க்கும் இவர்க்கும் ஏற்பட்ட சச்சரவு காரணமாக அப்பணியிலிருந்து விலகினார்.

பட்டுக்கோட்டை அழகர்சாமி 1898இல் பிறந்தவர் என்றும், 1900ஆம் ஆண்டில் பிறந்தவர் என்றும் இரு வேறு பதிவுகள் கூறுகின்றன. இவர் 12.3.1949இல் எலும்புருக்கி நோய் காரணமாக இறந்தார்.

அழகர்சாமி அய்ந்து வயதிலேயே தந்தையை இழந்தார். தாயாரின் ஊரான மதுரை - வாவிடை மருதூர் சென்று படிக்கத் தொடங்கினார். நாடகங்கள் எழுதுவதிலும், நடத்துவதிலுமே ஆர்வத்தைக் காட்டினார். முதல் உலகப் போர் (1914-18) சமயத்தில் பட்டாளத்தில் சேர்ந்தார். இவரது பரம்பரையினர் அனைவரும் இராணுவத்தில் பணியாற்றியவர்கள். அந்த மரபுப்படி அழகர்சாமியும் இராணுவத்தில் சேர்ந்து விட்டார். இதனால் அழகர்சாமி அவர்களது வீட்டை ஊரார் குறிப்பிடும்போது ‘பட்டாளத்து நாயக்கர் வீடு’ என்றே அழைப்பார்கள். அழகர்சாமி ஆறாண்டுகள்

பட்டாளத்தில் பணியாற்றிவிட்டுப் பட்டுக் கோட்டைக்குத் திரும்பினார்.

பட்டுக்கோட்டையில் அழகர்சாமியின் சிறிய தந்தையான வேணுகோபால் நாயுடு நீதிக்கட்சியையும் சுயமரியாதை இயக்கத்தையும் வளர்த்தெடுப்பதில் பெரும் அக்கறை காட்டி வந்தார். அழகர்சாமி தமது 27ஆம் வயதில் வழக்கறிஞர் வேணுகோபால் நாயுடு அவர்களின் தங்கை மகளான எத்திராசம்மாளை மணந்தார். அழகர்சாமியின் சிந்தனையைக் கிளறி விட்டவர், பட்டுக்கோட்டை சாமி முதலித் தெருவிலுள்ள மாரியம்மன் கோவில் பூசாரி - பக்கிரிச் சட்டாம்பிள்ளையாவார். இவர் முறையாகத் தமிழ் படித்து இசையறிவையும் வளர்த்துக் கொண்டவர். இயல்பாகவே அறிவுக் கூர்மை உடையவர். இவர் மூலமாகப் பூசாரித் தொழிலின் இரகசியங்கள் முதல் தமிழிசை வரை அறிந்து கொண்டார் அழகர்சாமி!

அழகர்சாமியைச் சேரன் மாதேவி குருகுலப் போராட்டம் வெகுவாகக் கவர்ந்தது. இது குறித்து வரதராசுலு நாயுடுவின் ‘தமிழ்நாடு’ இதழ் வெளியிட்ட செய்திகளைக் கட்டுரைகளை அழகர்சாமி ஒன்றுவிடாமல் படித்தார். கதராடை, கட்டுக் குடுமி, திருநீறு அணிந்திருந்த பட்டுக்கோட்டையார், மெல்ல இருள் நீங்கி வெளிச்சம் வருவதைப் போலச் சுயமரியாதை இயக்க வீரராக மாறலானார். இவரை முழுவதுமாக மாற்றிய பெருமை எஸ்.வி. லிங்கம் அவர்களையே சாரும். இயக்கத்தைக் குறித்துத் தம்மைக் கேள்விகளால் துளைத்தெடுத்து விட்டதாக எஸ்.வி. லிங்கம் குறிப்பிட்டுள்ளார். இவரது தலைமையில் நாகப்பட்டினத்தில் பேசத் தொடங்கிய - அழகர்சாமி, 1948 ஈரோடு மாநாடு முடியத் தொடர்ந்து கொள்கைக்கு வாதிடும் மிகப் பெரிய பேச்சாளராகவே திகழ்ந்தார்.

சுயமரியாதை இயக்கப் பேச்சாளர்களில் இவரது பேச்சு புதிய உத்தியைத் தழுவியதாக விளங்கியது. கேட்போரை வினயமாகவும், நகைச்சுவை உணர்வுடனும், ஈர்க்கும் தன்மையைக் கொண்டதாக அது விளங்கியது.

நமது தமிழ்நாட்டில் மிகப் பெரிய இழிவாகக் கருதப்படும் சாதிகளைப் பற்றி அவர் புதிய கோணத்துடன் பேசத் தலைப்படும்போது, மக்கள் அதிலுள்ள உண்மைகளை வாய்பிளந்து கேட்கக் கூடியவர்களாக விளங்கியிருக்கிறார்கள்.

அவர் எப்படிப் பேசினார் என்பதை அவரது பேச்சைக் கேட்ட பழம்பெரும் இயக்கத் தோழர் மயிலை பி.வி. ஆனந்தன் நம்மிடம் பேசிக் காட்டினார்.

‘நுட்பமான புத்தியினாலே, கூர்மையான கத்தியைக் கொண்டு முகத்திலே உள்ள உரோமங்களை முகத்திற்கும் ஒன்றும் ஆகாமல் உரோமங்களும் முகத்தில் தங்காமல் மழிக்கிறானே அந்தத் தொழிலாளியை அம்பட்டன் என்று இழிவாகக் கருதலாமா? நினைக்கலாமா? அவன் மனிதனை அழகுபடுத்தும் சிறந்தோன் அன்றோ’ என்று இப்படி தாழ்ந்த சாதிகள் குறித்த தொழில்களை வரிசைப்படுத்தி அவர் பேசுகிற பேச்சைச் சுவைத்துக் கேட்காத ஆட்களே இருக்க முடியாது.

மேலும் அவரது பேச்சில் ரத, கஜ, துரக, பதாதிகள், 33 கோடி தேவர்கள், கின்னரர், கிம்புருடர், வித்யாதரர் இன்னுமுள்ள தெய்வங்களின் பட்டியல் மேலேழு உலகங்களான புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், சத்தியலோகம் போன்றவற்றையும் கீழ் உலகம் என்று சொல்லப்படும் அதலம், விதலம், கதலம், தராதலம், மகாதலம், இரசாதலம், பாதாளம் ஆகிய இவற்றையும் இணைத்து அழகர்சாமி பேசுகிறபோது கேட்போர் கிறங்கிப் போவர்.

பொதுவாக, அக்காலக் கூட்டங்களில் (1926-32) நடைபெற்ற சுயமரியாதை இயக்கக் கூட்டங்கள் அமைதியாக நடைபெற்றன என்று சொல்ல முடியாது. அவற்றில் பெருங்கலவரங் களும், எதிர்ப்புகளும் உண்டாக்கப்பட்டன. கூட்டங்களில் வினாக்கள் கேட்கப்பட்டன. அதே மேடையில் அதற்குரிய ஆணித்தரமான பதில்கள் வழங்கப்பட்டன. ஊரிலுள்ள காங்கிரஸ் பெரிய மனிதர்கள் கூட்டத்தைக் கலைக்க ஏற்பாடு செய்திருப்பர். இல்லையெனில், செருப்போ, கல்லோ, சாணமோ, மலமோ, முட்டையோ பேச்சாளரின் மீது வீசப்பட்டுக் கூட்டத்தை நடத்த வொட்டாமல் ஆட்களை நியமித்துக் கலகம் விளைவிப்பர்.

இவற்றையெல்லாம் மேடையிலே வீராவேச மாகச் சந்தித்துக் கொண்டே பேசக் கூடியவராகத் திகழ்ந்தார் பட்டுக்கோட்டை அழகர்சாமி! இதேபோல் நீதிக்கட்சி அரசியலில் - உட்கட்சிப் போராட்டங்களில் - தந்தை பெரியாரின் தலைமையை நிலைநிறுத்துவதில் அவர் காட்டி வந்த ஈடுபாடு - வழிமுறைகள் - பணி களெல்லாம் நம்மை வியப்பிலேயே ஆழ்த்துகின்றன. அதனால்தான் இயக்கத் தோழர்கள் இவரை

‘அஞ்சாநெஞ்சன்’ என அழைத்தனர். அதுமட்டு மன்று; கலைஞர் மு.கருணாநிதி போன்றவர்களை, இவரது மேடைப் பேச்சும் - நெஞ்சுறுதியும் அந்நாட்களில் வெகுவாகக் கவர்ந்துள்ளன. கலைஞர் மு. கருணாநிதி அழகர்சாமி அவர்களைத் தமது முதல் வழிகாட்டியாக (முன் மாதிரியாக) கொண்டார். அதனால்தான் அவர் தம் புதல்வர்க்கு அழகர்சாமியின் பெயரை சூட்டினார். அவரது தொண்டுக்குப் பெருமை சேர்த்தார்.

பட்டுக்கோட்டை அழகர்சாமி அவர்களின் பேச்சுகளிலிருந்து சிலவற்றைப் பார்ப்போம்.

*“சகோதரர்களே,*

*நாம் பிறந்த நாள் முதலே சடங்குகளும் நம்முடன் பிறந்து விடுகின்றன. பிறந்த அன்றே ஒரு அருத்தமற்ற சடங்கைச் செய்கிறோம். எட்டாம் சடங்கு, முதல் வருடச் சடங்கு, பள்ளி செல்லும்போது ஒரு சடங்கு, கலியாணம் செய்யும்போது நூறு சடங்கு இப்படியாக நம் வாழ்நாளில் ஆயிரக்கணக்கான சடங்கை அர்த்தம் என்பதையே அறியாமல் செய்து வருகிறோம்.*

*அச்சடங்குகளின் மூலமாக, நம்மை அறியாமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழச் சம்பாதித்த பணம், பார்ப்பனர் வயிற்றில் விழுந்து கொண்டே இருக்கிறது. இதுவும் போதாது என்று, நாம் இறந்தவுடனும் பணம் பறிக்கப் பின் தொடர்ந்து விடுகின்றனர்.*

*சிரார்த்தம் என்பதின் பேரால், நம் மூதாதையர்களை மோட்சலோகத்திற்கு அனுப்பு வதாகச் சொல்லித் தங்களுக்குப் போதிய காய்கறி, அரிசி, சாமான் பெற்றுக் கொள் வதுடன், செருப்பு, வேட்டி உட்படக் குடும்பத்துக்கு வேண்டிய சாமான்களை நம் பிதுரர்கள் (இறந்து போனவர்கள்) ஏற்றுக் கொள்கிறார்கள் என்று நாமும் ஏமாந்து களிப்புற்று இருக்கிறோம். அந்தோ! நம் மடமைதான் என்னே!*

*தற்காலத்தில் இங்கிலாந்தில் உள்ள ஒருவர்க்கு ஒரு ரூபாய் மணியார்டரில் அனுப்பினால், அதைப் பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக ஓர் இரசீது நமக்குத் திரும்பி வருகிறது.*

*ஆனால், வருடந்தோறும் நம் பிதுரர் களுக்கு அனுப்பும் சாமான்களுக்கு ஏதாவது பதில் இரசீது வருகின்றதா என்பதை நம்மில் ஒருவராவது கவனிக்கிறோமா?”*

இப்பேச்சு 1929ஆம் ஆண்டு ‘திராவிடன்’ இதழில் வெளியாகியுள்ளது. விருதுநகரில் வி.வி. இராமசாமி அவர்கள் தலைமையில் சடங்குகள் என்ற தலைப்பில் அழகர்சாமி மூன்று மணி நேரம் பேசியதாகத் ‘திராவிடன்’ குறிப்பிட்டுள்ளது.

ஒரு முறை அழகர்சாமி தூத்துக்குடியில் பேசுகிற போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

*“.... தீண்டாமைக்குக் காரணம் பிராமணர் (முகத்திலிருந்து வந்தவர்) களுடைய தந்திரமே - பள்ளர், பறையர், சக்கிலியர் முதலியவர்களை நீங்கள் எப்படித் தீண்டப்படாதவர்கள் என்று தள்ளி வைக்கின்றீர்களோ, அதுபோல உங்களைத் தீண்டப்படாதவர்கள் - தொடப் படாதவர்கள் என்று ஒரு வகுப்பார் விலக்கி வைத்திருக்கின்றனர்.*

*ஆகையால், முதல் முதல் நீங்கள் அவர் களோடு ஒற்றுமையாய் சகோதரத்து வத்துடன், உண்மையான பாசத்தோடு அவர்களும் நம் சகோதரர்கள் என்று உறவாட வேண்டும். அவர்களைச் சுதந்திரத்துடன் இருக்க விடவேண்டும். அப்படியானால்தான் நமக்கும் சேமம் பிறக்கும் - பிராமணர்கள் உங்களை எப்படி நடத்துகின்றனர்? ‘சூத்திரன்’ என்று அழைக்கின்றனர். **சூத்திரனென்றால் வேசிமகன், விலைக்கு வாங்கப்பட்டவன், அடிமைத் தொழில் புரிகிறவன், மிலேச்சன், வைப்பாட்டி மகன் என்று அர்த்தம்**. ஒரு மனிதன் ஒரு மனிதனைத் தொடுவதால் என்ன கெட்டுப் போகிறது.*

*குதிரை, நாய் முதலியவைகளைத் தொட்டால் குளிக்கிறதில்லை. நம்மைப் போலிருக்கிற ஒரு மனிதனைத் தொட்ட வுடன் தீட்டுப்பட்டு விட்டதாம்; உடனே குளித்துத் தீட்டைப் போக்கிக் கொள் கின்றனர். இத் தீண்டாமையை ஒழித்தாக வேண்டும்” என இரண்டு மணி நேரம் பேசினார்.*

அடுத்து அழகர்சாமி சுயமரியாதைத் திருமணத்தில் பேசிய பேச்சைப் பார்ப்போம். அதில் அவர் எவ்வளவு சேதிகளைக் கூறுகிறார் பாருங்கள்:

"இன்று இங்கு நடைபெற்ற விவாகந் தான் போற்றத் தகுந்த விவாகமாகும். அநேக சீர்திருத்தக்காரர்கள், சுயமரியாதைக் கொள்கைகளை ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால், நாம் அதிவேகமாகவும் தீவிரமாகவும் செல்வதாகக் குற்றங் கூறுகிறார்கள். பழைய தமிழ்நாட்டில் புரோகிதர்கள் திருமணம் செய்து வைக்கும் வழக்கமே கிடையாது. இன்றும் நமது தமிழ்நாட்டில் கள்ளர், மறவர், அகம்படியர் (மதுரை) ஆகியவர்களிடை யிலும், மற்றும் வேடர், வில்லியர், தீண்டப் படாதார் ஆகிய சமூகங் களிலும், எவ்விதச் சடங்குகளும், புகைச்சலு மின்றியேதான் விவாகங்கள் நடைபெறுகின்றன. ஆதி காலத்தில், 'எடுத்தார் சங்கைப் பிடித்தார்' என்பதாகவேதான் நமது விவாகங்கள் நடை பெற்று வந்திருக்கின்றன. இவ்விஷயங்களை இன்றும் நீங்கள் நமது தமிழ் நூல்களில் காணலாம். ஆனால், ஆரியர்கள் நமது நாட்டில் குடியேறிய பிறகுதான் அநேக சடங்குகள் நாட்டில் தோன்ற ஆரம்பித்தன.

சாதாரணமாகச் செட்டி நாட்டில் நடைபெறும் விவாகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பெண்களுக்குப் பரியமென்பதாக ரூ.30,000மும் நகை களுக்கென ரூ.15,000மும், கலியாணச் செலவுக்கென ரூ.10,000மும், ஒதுக்கி வைத்துவிட்டுக் கலியாண வைபவத்தை ஒரு மாதம் வரையும் கொண்டாடு கிறார்கள். விவாகத்துக்கும் கடவுளுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கருதிக் கடவுள் அருள் கிடைக்க வேண்டுமெனப் பல சடங்குகளையும் செய்கிறார்கள். இவைகளால் என்ன பிரயோஜனமென்பதைச் சற்று யோசனை செய்து பாருங்கள்.

நமது வீடுகளிலோ, விவாகங்கள் மூன்று நாட்கள் முதற்கொண்டு அய்ந்து அல்லது ஏழு நாட்கள் வரையிலும் நடை பெறுகின்றன. இவ்வழக்கத்தையும் அறவே நாம் விட்டொழிக்க வேண்டும். விவாகத் துக்கும் கடவுளுக்கும் ஏதாகிலும் சம்பந்த மிருப்பது உண்மையாக இருக்குமானால், இவ்விதச் சடங்குகள் உலகத்திலுள்ள எல்லா ஊர்களிலுமன்றோ நடைபெற வேண்டும்? அவ்வாறு நடைபெறு கின்றதா? அப்படி யிருக்க நமது நாட்டில், ஒரு கூட்டத்தாரை மட்டும் நாம் வைத்துச் சடங்குகளை ஏன் செய்ய வேண்டும்?

இவைகளுக்கெல்லாம் காரணம், நமக்குப் போதிய அறிவில்லாததேயாகும். சடங்குகளின்றி நடைபெறும் விவாகங் களில் தம்பதிகள் இன்பமாயிருக்க முடியா தெனவும், குழந்தைகள் ஜனிக்காதெனவும் ஒரு குருட்டு நம்பிக்கை நம்மிடம் இருந்து கொண்டு வருகின்றது. இவ்வித வழக்கங்களை நாம் அடியோடு விட்டொழிக்க வேண்டும்."

பட்டுக்கோட்டைச் சுயமரியாதை மாநாட்டில் அழகர்சாமி பேசியபோது, மிகத் தெளிவாக இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

அது வருமாறு:

"நான் இளைஞர்களை இயக்கத்தில் ஈடுபடுத்தும் கருத்துடையோன். ஆஸ்திகத்தை நான் முழு மனத்துடன் எதிர்க்கிறேன். சுயமரியாதை இயக்கத்தைப் பூர்ணமாகத் தழுவுகிறேன். இவ்வியக்கம் எல்லா மனிதர்களும் சமம் என்னும் கொள்கையைக் கொண்டு ஜனங்களுக்குப் பொருளாதாரச் சமூக விஷயங்களில் சமத்துவம் எல்லாவற்றாலும் எய்தல் வேண்டும் என்னும் கருத்தை உறுதியாய்க் கொண்டது.

பலர் கூறுவது பணக்காரர்களை நாம் எதிர்த்தால் பயனற்றதாகுமென்பதே. இது கோழைத்தனமாகும். சத்தியத்திற்கே போராடு வோம். சத்தியமே ஜெயிக்கும். வீரர்களாகிய இளைஞர்களுடைய ஊக்கத்தை மாற்ற, எந்தப் பலத்தாலும் எந்தக் காலத்திலும் எதிர்க்க முடியாது. இந்த இயக்கத்தைச் சிலரே துவக்கினர். ஆனால், இவ்வியக்கத்தில் இப்பொழுது பல பெரியோர்களும், அளவற்ற ஜனங்களும் சேர்ந்திருக்கின்றனர். இவ்வியக்கத்தை இனி அசைத்தல் இயலாது."

இதுபோல, இவரது அறிவார்ந்த பல பேச்சுகள் 'திராவிடன்' (என்.வி.என். நடத்தியது அல்ல. நீதிக்கட்சியின் அதிகாரப்பூர்வமான தமிழ் ஏடு) 'குடிஅரசு' ஏடுகளில் காணக் கிடக்கின்றன.

இவர் எழுதியவை என நமக்குத் தெரிய இரண்டு கட்டுரைகளே தென்படுகின்றன. 'கடவுள் செயலும் கட்டுக் கதைகளும்' எனும் கட்டுரை புதுவை முரசிலும், 'திரு. காந்தியின் சாஸ்வதக் கொள்கை எது?' எனும் முடியாக் கட்டுரை ஒன்று

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அரசியலில் வளர்வதற்குக் காரணமாக இருந்தவர்களில் அழகர்சாமி அவர்களும் ஒருவராவார். இவரையே கலைஞர் தமது தொடக்கக்கால வழிகாட்டியாகவும் கொண்டிருக்கிறார்.**

குடிஅரசிலும் காண முடிந்தது. இந்த இரண்டு கட்டுரைகளிலும் பல ஆழமான சேதிகளை விவாதிக்கிறார். படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் ஏற்றனவாக அவை திகழுகின்றன. நாடகங்கள் எழுதப்பட்டனவாகப் பதிவுகள் இருந்தா லும், என்ன நாடகங்கள் என்றும் - அவற்றிற்கான புத்தகங்கள் இருக்கின்றனவா என்றும் தெரியவில்லை.

அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி, வெறும் பேச்சாளராக மட்டும் இருந்து காலத்தைக் கடத்தியவர் அல்லர். நீதிக்கட்சிக் காலத்தில் பல இராசதந்திர உத்திகளோடு செயலாற்றியிருக் கிறார் என்பதை ‘திராவிட நாடு’ ஏட்டில் எஸ்.வி. லிங்கம் அவர்களின் கட்டுரைத் தெரிவிக்கின்றது. சரியாகச் சொல்வதானால் அழகர்சாமி அவர்கள் தொண்டர் நிலையிலிருந்து தலைவர் நிலை வரை அனைத்து மட்டங்களிலும், அவரது பணியின் வேகத்தைக் காட்டியிருக்கிறார். எதற்கும் அவர் அச்சமோ, தயக்கமோ கொண்டதாகத் தெரிய வில்லை. அவரது அந்நாளைய அரசியலுக்கு அவரது வறுமை ஒரு தடையாகவே இல்லை. அவர் ஒரு சிறந்த இயக்கவாதியாக வார்ந்து காட்டியிருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

அந்நாட்களில் பட்டுக்கோட்டையில் புகழ் பெற்ற தலைவராக வி.நாடிமுத்துப் பிள்ளை என்பவர் இருந்தார். இவருக்கு அழகர்சாமி அவர்கள் பயங்கரவாதியாகத் தோன்றினார். இதற்குக் காரணம், ஆதிக்கக்காரர்களின் அட்டூழியங்களை அம்பலப் படுத்துவதில் அஞ்சாநெஞ்சுடன் அழகர்சாமி செயலாற்றியதே ஆகும். நாளை என்ன செய்வது என்பதைப் பற்றியே கவலை கொள்ளாமல் வாழ்ந்த அழகர்சாமி, பட்டுக்கோட்டையில் வரி கொடுப்போர் சங்கம் ஒன்றை நிறுவினார். அதன் சார்பில் மாபெரும் மாநாடு ஒன்றைக் கூட்டிப் பட்டுக்கோட்டை யூனியன் போர்டு இழைக்கும் அநீதிகளை அம்பலமாக்கினார். அப்பொழுது நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தல்களிலும், சட்டமன்றத் தேர்தல்களிலும் காங்கிரசை முறியடிப்பதில் கண்ணுங் கருத்துமாகப் பணியாற்றினார்.

நீதிக்கட்சி மாநாடு தஞ்சையில் நடந்த போது, பொப்பிலி அரசரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. பொப்பிலி அரசர்க்குப் பக்கலமாக இருந்து மாநாட்டில் ஏற்பட்ட குழப்பத்தைச் சமாளித்தார். பட்டுக்கோட்டை வேணுகோபால் நாயுடு மூலமாக சர். ஏ.டி. பன்னீர்ச்செல்வம் அவர்களின் நட்பைப் பெற்றார். இருவரும் கடைசி வரை ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு வாழ்ந்தனர்.

அழகர்சாமி எந்த மேடையையும் தன் வயப்படுத்தக் கூடிய ஆற்றல் மிக்கப் பேச்சாளராகத் திகழ்ந்தார். அவரது பேச்சு எவரையும் கவர்ந்துவிடும் தன்மையுடையதாக விளங்கியது. அதற்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

1927 ஆம் ஆண்டு அமெரிக்காவில் **சாக்கோ, வான்சிட்டி** எனும் இரண்டு பொதுவுடைமைத் தலைவர்களை மின்சார நாற்காலியில் அமர வைத்துக் கொன்றார்கள். இச்செயலைக் கண்டித்துச் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். இக்கூட்டத்தைப் பார்ப்பதற்காகச் சென்ற அழகர்சாமி அவர்களைச் சிங்காரவேலர் பேசுமாறு கேட்டுக் கொண்டார். அக்கூட்டத்தில் பேசுகிறபோது அழகர்சாமி, ஒரு செம்படவத் தொழிலாளியும் - ஒரு சக்கிலித் தொழிலாளியும் அமெரிக்காவில் கொலை செய்யப்பட்டார்கள். அதைக் கண்டிக்க நாம் இங்கே கூடியிருக்கிறோம். நமது செம்படவத் தொழிலாளியான சிங்காரவேலர் அவர்கள் தூக்கிலிடப்படும் காலம் வந்தாலும் வரலாம். அப்படி ஏற்பட்டால் அதுவே நாட்டின் விடுதலை நாள் என்று பேசினார். இப்பேச்சு சிந்தனையாளர் சிங்காரவேலரை வெகுவாகக் கவர்ந்தது. இதன் பிறகுதான், சிங்கார வேலர் சுயமரியாதை இயக்கத்தோடு தொடர்பு கொள்ளவும் தந்தை பெரியாரோடு நெருங்கிச் சிக்கல்களை விவாதிக்கவும் தொடங்கினார்.

பனகல் அரசர் நீதிக்கட்சியின் தலைவராகவும், சென்னை இராஜதானியின் முதல்வராகவும் விளங்கிய காலக்கட்டங்களில், அவரிடம் உட்கார்ந்து பேசக் கூடியவர்கள் இருவர் மட்டுமே! ஒருவர் தந்தை பெரியார், மற்றவர் அழகர்சாமி அவர்கள்! இப்படி

அச்சமின்றி, நடுங்குதல் இன்றி, அவை அஞ்சாமை யோடு செயல்பட்டவர் அழகர்சாமி!

தந்தை பெரியார், அய்ரோப்பியச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பொழுது (1932) சென்னையில் ஒரு சுயமரியாதை மாநாட்டைக் 'குத்தூசி' குருசாமி நடத்தினார். முதல் நாள் சுயமரியாதை மாநாடு. இரண்டாம் நாள் பெண்கள் மாநாடு. இச்சமயத்தில் கல்லூரி மாணவி ஒருத்தி கல்கத்தாவில் நீதிமன்ற நடுவரைச் சுட்டுவிட்ட நிகழ்ச்சி நடைபெற்றிருந்தது. இந்நிகழ்ச்சியைக் கண்டித்துப் பெண்கள் மாநாட்டில் ஒரு தீர்மானம் முன்மொழியப் பட்டது. தீர்மானத்தின் மீது இருவர் வழிமொழிந்து பேசி வாக்கெடுப்பு எடுக்கிற சமயத்தில், சிங்காரவேலர் எதிர்த்துப் பேசி - மாநாட்டினரைத் தம் பக்கம் ஈர்த்து விட்டார்.

இந்நிலையில், தீர்மானத்தை விட்டால் 'தோற்றுவிடும்'. பெரியார் ஊரிலில்லாத நேரத்தில் இப்படி ஏற்படுவது சரியன்று என்ற முடிவை எடுத்த அழகர்சாமி எழுந்து பேசத் தொடங் கினார். இறுதியில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அன்று இரவு சிங்காரவேலரைச் சந்தித்துச் சமாதானம் கூறினார் அழகர்சாமி! அப்போதும் சிங்காரவேலர் அழகர்சாமியைப் பார்த்து, "நீ பேசிய கருத்து முரண்பாடானது. சொன்ன உதாரணங்கள் தப்பு. எனது பேச்சை எதிர்த்து இதுவரை எவரும் பேசியதில்லை. நீ பேசியது எனக்குப் பிடிக்கவில்லை என்ற போதிலும், தலைவர் இல்லாத காலத்தில் கட்சிப் பொறுப்பை எண்ணி எனது கருத்தை முழுவதும் கண்டிக்காமலும் உனது எண்ணத்தை நிறைவேற்றுகின்ற முறையிலும் நீ கையாண்ட முறைகளைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினார்.

1934களில் **'தமிழன்பர் மாநாடு'** என்ற பெயரில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டின் மூலவராகக் **'கல்கி' கிருஷ்ணமூர்த்தி** (பார்ப்பனர்) விளங்கினார். எல்லாவற்றிலும் செல்வாக்குப் பெற்றிருந்த மேல் சாதியினர் பள்ளிப் பாடப் புத்தகங்கள் அச்சிட்டு விற்கும் உரிமையைக்கூட வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்களது மேலாண்மையை இதிலும் நிலைநாட்ட வேண்டு மென்றும் கருதித் தமிழன்பர் மாநாடு கூட்டலாயினர். இது குறித்துச் சுயமரியாதை இயக்கம் எந்த முடிவையும் எடுக்கவில்லை. இத்தகைய முடிவுகளை எதிரிகள் மேற்கொள்கிறபோது, திராவிடர் இயக்கத் தோழர்களே அவற்றைத் தனியாக நின்று எதிர்த்துப் போராடினார்கள்.

தமிழன்பர் மாநாட்டில் வேங்கடஇராம சாஸ்திரி, 'சில்வர் டங்' சீனிவாச சாஸ்திரி, சுதேசமித்திரன் சீனிவாசன் ஆகியோர் பங்கு கொண்டனர். இதனை அறிந்து கொண்ட அழகர்சாமி தமது படையோடு சென்று மாநாட்டு ஆசனங்களில் - மேடை மீது திராவிடர் இயக்கத் தின் சார்பில் டி.வி. சுப்ரமணியம், ஜீவானந்தம், என். தண்டபாணி போன்றோரை அமரச் செய்து, தாமும் எஸ்.வி. லிங்கமும் எஸ். இராமநாதனும் பிரதிநிதிகள் அமர்கிற இடத்தில் இடம் கிடைக்காமல் நின்றனர். அவர்கள் மாநாட்டுத் தலைவரை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் மாநாட்டை நடத்தத் தொடங்கினர். திராவிடர் இயக்கத்தவர்கள் மாநாட்டுத் தலைவரை ஏற்க முடியாதென்று பேசினர்.

உடனே வெள்ளி நாக்குப் படைத்த சீனிவாச சாஸ்திரி, 'இது பார்லிமெண்டரி முறைக்கு உகந்ததல்ல' என்று கூறினார். இருப்பினும், எஸ். இராமநாதனும் தாவுத் ஷாவும் (இவர்கள் சுயமரியாதை இயக்கவாதிகள்) மாநாட்டுப் பிரதிநிதிகளின் கருத்தை ஏற்காமல், தலைமை தாங்குவது எங்ஙனம் சாத்தியமாகும் என்று கூறினர். பிறகு மாநாட்டினர் நமது தோழர்களை அமைதிப்படுத்தித் தலைவரை ஒரு வழியாகத் தேர்ந்தெடுத்தனர்.

திராவிடர் இயக்கத்தவர்கள் பேசிய பேச்சு களுக்கு மாநாட்டில் நல்ல வரவேற்பு இருந்தது. மாநாடு இயக்கத்தார் கைக்கு வந்துவிட்டதில் அழகர்சாமி மகிழ்ந்தார். எந்தத் தீர்மானத்திலும் திராவிடர் இயக்கத்தாருக்கு வெற்றி கிடைக்கும் என்ற சூழ்நிலையும் மாநாட்டில் உருவாகி யிருந்தது.

இந்நிலையைக் கருத்திற்கொண்டே வெங்கட இராம சாஸ்திரியார், பின்வருமாறு பேசினார்:

> "நண்பர்களே, மாநாடு இனிது முடிந்தது. இந்தப் பெருமையாவும் சுயமரியாதைக் காரர்களையே சாரும். உங்களில் பலருக்கு ஈரோடு திரு. இராமசாமி நாயக்கரும், நானும் நெருங்கிய சிநேகிதர்கள் என்று தெரியாது. உங்களைப் பற்றிச் சொன்னவர்கள் தப்பாகச் சொல்லியிருக் கிறார்கள். அதற்காகக் கோபித்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் யாவரும் ஃபூல்ஸ்

(Fools), ரோக்ஸ் (Rogues) என்றே எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது.

இந்த இரண்டு நாள் நடவடிக்கைகளில் - உங்கள் ஒவ்வொருவரின் பேச்சையும், விவாத முறையையும் நான் கவனித்தேன். ஃபூல்சும், ரோக்சும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருந்தால், மாநாடு இவ்வளவு சிறப்பாக நடந்திருக்க முடியாது. தப்பெண்ணங்களை மறந்து, இனி மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதில் ஒன்றுபடுவோம்."

இப்படி வெங்கட இராம சாஸ்திரி பேசியதற்குப் பிறகு கல்கி கிருஷ்ணமூர்த்திக்குப் பொறுக்க முடியவில்லை. மாநாடு முடிந்த பிறகு தனது அடிப்படைத் திட்டம் சுயமரியாதை வீரர்களினால் தகர்க்கப்பட்டதை எண்ணி அவர்,

"மாநாடு முடிந்துவிட்டது. இனி யாரையும் கேட்காமலேயே நான் பேசலாம். மாநாட்டுப் போக்குதான் சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லையே! பின் ஏன் இங்கு வந்தார்கள்? இவர்களை யார் பாக்கு வைத்து அழைத்தார்கள்?" என்று பேசினார். ஆக, அஞ்சாநெஞ்சன் அழகர்சாமி நினைத்ததைச் செய்து முடித்தார். இதுபோலப் பல சிக்கல்கள், வழக்குகள், அடிதடிகள் என்று அழகர்சாமி அவர்களின் பங்களிப்பு இவ்வியக்கத்திற்குப் பலவாகும்.

அதேபோல, அமைப்பை உருவாக்குவதிலும் கட்டமைப்பதிலும் அழர்சாமி முன்னோடியாகத் திகழ்ந்தார். சுயமரியாதை இயக்கம் எனப் பெயர் தாங்கவே பட்டுக்கோட்டை இயக்கத் தோழர்கள்தான் காரணமாக இருந்தனர். இயக்கம் தோன்றி மூன்று ஆண்டுகள் ஆகியும் மாநாடுகள் நடைபெறாமல் இருந்தன. செங்கற்பட்டில் 1929இல் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாநாடு நடத்துவதற்கு அழகர்சாமியின் தீர்மானமே காரணமாக அமைந்தது.

திருச்சியில் நடைபெற்ற தமிழர் மாநாடு கூடுவதற்கு அழகர்சாமி அவர்களும் ஒரு காரணமாக இருந்தார். 1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றபோது, அழகர்சாமி தமிழர் பெரும் படையைத் திருச்சியில் திரட்டினார். இப்பெரும் படையில் மணவை ரெ. திருமலைச்சாமி, எஸ்.வி. லிங்கம், இராமாமிர்தத்தம்மையார், சித்தர்காடு இராமையா ஆகியோர் கலந்து கொண்டனர். இப்படையில் 100 பேரைச் சேர்த்துக் கொண்டு திருச்சியிலிருந்து 60 ஊர்களில் தங்கி, 180 ஊர்களுக்கு மேலாகப் பிரச்சாரம் செய்து கொண்டு, 250 கல் தொலைவு படையை இரண்டு மாதம் நடத்திச் சென்னைக்கு அழைத்து வந்தார். இப்படையை வழி நடத்திய பெருமை, அஞ்சா நெஞ்சன் அழகர்சாமிக்கு உண்டு. இதுமட்டுமின்றி முதல்முதலாகக் காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெருமை - ஏற்பாட்டை மேற்கொண்டு பணியாற்றிய பெருமை அழகர்சாமியையே சாரும்.

பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காரணமாகச் சிறையில் இருக்கும்போது, நீதிக் கட்சியின் மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்குத் தலைவராக இருக்க வேண்டும் என ஒரு பெரிய புள்ளி விரும்பி அழகர்சாமியைச் சென்னைக்கு வரவழைத்துப் பெரிய விருந்து உபச்சாரம் எல்லாம் செய்தார். இச்சமயத்தில் நீதிக்கட்சியின் பொறுப்பை சர். ஏ.டி.பன்னீர் செல்வம் நிர்வகித்து வந்தார். இதனால் பொறுக்காத அப்பெரும்புள்ளி தாம் தலைமையேற்க விரும்பி அவ்வாறு செய்தார்.

மாநாடு நடத்தப்படும் நாள் வந்தது. அந்தப் பெரும்புள்ளி, மேடையில் அழகர்சாமியிடம் தம்மைத் தலைவராக அறிவிக்கும்படி சொல்லி விட்டு வந்தமர்ந்தார். அழகர்சாமி எழுந்து, 'இம்மாநாட்டைத் தோழர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமை தாங்கி நடத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்' என்றார். அப்பெரும் புள்ளி மாநாட்டிலிருந்து வெளி யேறினார். இதுபோலப் பல நிகழ்ச்சிகளைச் சொல்லலாம்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், அரசியலில் வளர்வதற்குக் காரணமாக இருந்தவர்களில் அழகர்சாமி அவர்களும் ஒருவராவார். இவரையே கலைஞர் தமது தொடக்கக்கால வழிகாட்டியாகவும் கொண்டிருக்கிறார். கலைஞரது தொடக்க நாட்களில் அவரைக் கூட்டத்திற்கு அழைப்போர், திருவாரூர் மு. கருணாநிதி என்றே விளம்பரப்படுத்தினர். பிறகு அவர் புகழடையத் தொடங்கியவுடன் மு. கருணாநிதி என்று விளம்பரப்படுத்தப்பட்டார்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போற்றி வளர்த்த இயக்கக் கொள்கைகளை மய்யமாகக் கொண்டு 'தூக்கு மேடை' என்ற நாடகத்தைக் கலைஞர் எழுதினார். அந்த நாடகத்தில், நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்களுடன் முக்கியப் பாத்திரத்தில் நடிக்கவும் செய்தார். முதன்முதலாக இந்நாடகம் தஞ்சையில் அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்திற்கு அழகர்

சாமி தலைமை தாங்கினார். தலைமையுரையின் போது நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்களை உற்சாகமூட்டி - ஊக்கமூட்டிப் பேசியதோடு மு.கருணாநிதி அவர்களின் எழுத்தாற்றலையும், நடிப்பையும் பார்த்து விட்டுக் 'கலைஞர்' என்ற பட்டத்தைத் தம் வாயால் உச்சரித்து வழங்கினார். அது முதல் மு. கருணாநிதி என்ற பெயரோடு கலைஞர் என்ற அடைமொழி சேர்த்து வழங்கப்படுவதாயிற்று. பொது வாழ்வில் அவர் புகழ் சிறக்கச் சிறக்க அவரது இயற்பெயரைப் பெரும்பாலோர் எழுதுவதோ பேசுவதோ கிடையாது. **'கலைஞர்'** என்ற அடைமொழி இன்று தமிழ்நாட்டில் அவரை மட்டுமே குறிக்கின்ற ஒரு சொல்லாகிவிட்டது. லெனின், ஸ்டாலின் போன்ற பெயர்கள் எப்படி இயற் பெயராக இல்லாமல் கட்சிக் காரர்களால் வழங்கப் படும் புகழடைந்த பெயர்களாக விளங்கி வரு கின்றனவோ, அவ்வாறே, கலைஞர் என்ற பெயரும் இன்று நிலைபெற்ற பெயராக ஆகிவிட்டது. இத்தகைய சிறப்புக்குரிய பட்டத்தை வழங்கியவர் பட்டுக்கோட்டை அழகர்சாமி அவர்களாவார்.

அவரது பெயர் 'அழகர்சாமி' என்பதே சரியான உச்சரிப்பாகும். மேடையிலே பேசுகிற போது அவர் பெயர் அழகிரிசாமி எனத் திரிந்துவிட்டது. இக்கட்டுரையில் அவரது பெயர் அழகர்சாமி என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது.

அழகர்சாமியிடம் எவ்வளவு பணமிருந்தா லும் செலவழித்து விடுவார். அவர்தம் தோழர் களுக்குத் தாராளமாகக் கொடுப்பார். எப்போதும் மல்வேட்டியும், ஜிப்பாவும் அணிவார். தம் வாழ்நாள் முழுவதும் மதம், கடவுள், சாதி ஆகிய மூன்றையும் ஒழிக்கப் பாடுபட்டார். எந்நிலை யிலும் அவர் கொள்கையிலிருந்து வழுவாமல் வாழ்ந்தார்.

ஓயாத பேச்சு, சுற்றுப் பயணம் இவற்றுக் கிடையே மூளை உழைப்பு ஆகியவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, அஞ்சாநெஞ்சரை என்புருக்கி நோய் பற்றியது. 1948ஆம் ஆண்டு அழகர்சாமி சேலம் (திராவிடர் கழக) மாநாட்டிற்குச் சென்றார். அப்போது கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைச் சந்தித்துத் தமக்கிருக்கும் கடன்கள் குறித்து வருத்தப் பட்டார். அதற்குக் கலைவாணர், "என்ன அண்ணே இது? கடனைப் பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். நிச்சயம் நான் சொத்துக்களை மீட்டுக் கொடுத்து விடுகிறேன்" என்று உறுதி கூறினார்.

1948ஆம் ஆண்டு ஈரோடு மாநாட்டின் போது அழகர்சாமியின் உடல்நிலை மிக மோசமா யிற்று. இருப்பினும் அம்மாநாட்டில் கலந்து கொண்டு, "நான் கலந்து கொள்ளும் கடைசி நிகழ்ச்சி இதுவாகத்தான் இருக்கும்" (எனது தலைவரிடம் விடைபெறவே வந்திருக்கிறேன்) என்று கூறினார். இவ்வாறு அவர் கூறிய போது, மாநாட்டிற்கு வருகை புரிந்தோர் கண் கலங்கினர்.

மாநாடு முடிந்து பட்டுக்கோட்டைக்கு அவர் திரும்பியதும் படுக்கையில் விழுந்தார். அதன் பிறகு, சி.என். விசுவநாதன் முயற்சியால் திருச்சியில் டாக்டர் ஈனக் என்பவரிடம் பரிசோதிக்கப்பட்டது. அவர் ஆய்வு செய்து பார்த்துவிட்டு, ஒரு வருடத்திற்கு மேல் உயிரோடு இருக்க முடியாது என்ற விவரத்தை அந்தத் தோழரிடம் தெரிவித்தார்.

அவர் அழகர்சாமியை அழைத்துக் கொண்டு பட்டுக்கோட்டை போய்ச் சேர்ந்தார். அணுக்கத் தோழர்களிடம் நிதி திரட்டி, அழகர்சாமி உடல்நிலையைப் பேணி வந்தார். இதற்கிடையில் ஈ.வெ.கிருஷ்ணசாமி அவர்களின் பரிந்துரையின் பெயரில், பெருந்துறை சானிடோரி யத்தில் சேர்க்க முயற்சி நடந்தது. முடியவில்லை, நிதி போதாத நிலையில், 'விடுதலை'யில் வேண்டுகோள்விட அழகர்சாமியிடம் அனுமதி கோரியபோது, அழகிரி அனுமதி வழங்க மறுத்துவிட்டார்.

இந்நிலையில், இயக்கத் தோழர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண் டிருந்தனர். அச்சமயத்தில் நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்கள் ரூ.1,000/- கொடுத்து உதவினார். அதுமட்டுமல்ல, அழகர்சாமி விரும்பிய வெல்வெட் மெத்தை, தலையணை ஆகியவற்றை தைத்து அனுப்பினார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தாம்பரம் சானிடோரியத்தில் சேர்க்கப்பட்டார். பெரியார், அண்ணா, இளம்வழுதி, எஸ்.வி. லிங்கம் ஆகியோர் அழகர்சாமியைச் சென்று பார்த்தனர்.

அறிஞர்அண்ணா கே.ஏ. மதியழகன் மூலமாக ஒரு தொகையை அழகர்சாமிக்குக் கொடுத்தனுப்பினார். அதன் பிறகு ஒரு தொகையை அனுப்பினார். யார் தம்மைக் கூட்டத்திற்கு அழைத்தாலும் ரூ.100/- அழகர்சாமி அவர்களுக்கு பணவிடையின் மூலம் அனுப்பி விட்டு, அதன் இரசீதைக் காண்பித்தால் வரத் தயார் என அறிக்கைவிட்டார். அதன் மூலமாக ரூ. 1,000/- வரை அழகர்சாமி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இவற்றையெல்லாம் கொண்டு தஞ்சையில் சிகிச்சை பெற்று வந்த (49

ஆண்டுகளோடு அவரது வாழ்க்கை முடிந்தது) அழகர்சாமி 28.3.1949இல் இறந்தார்.

நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்களின் முயற்சியால் அவரது மூடுந்தில் (வேனில்) அழகர்சாமியின் உடல் கிடத்தப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதுவரையில் தஞ்சையில் அத்தகையதொரு இறுதி ஊர்வலம் நடைபெற்றதில்லை எனும்படியாக - அவ்வூர்வலம் அமைந்தது. இறுதி நிகழ்ச்சிக்குப் பிறகு - இரண்டு மாதங்கள் கழித்து அழகர்சாமியின் குடும்ப நிதி வழங்கு விழா 29.5.1949இல் தஞ்சை அரண்மனைத் திடலில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கலைவாணர் காந்தி மகான் வில்லுப்பாட்டு, கிந்தனார் கதை ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தினார். அதன் மூலம் ரூ.3,500/- மட்டுமே கிடைத்தது.

ஆனால், அழகர்சாமியின் குடும்பத்திற்கு ரூ.6,000/-க்குக் கடன் இருந்தது. கலைவாணர் திரட்டிய நிதியுடன் தன் சொந்தப் பணத்திலிருந்து ரூ.2,500/-அய்ச் சேர்த்து ரூ.6,000/- குடும்ப நிதியாக வழங்கினார்.

இந்நிதியளிப்பு விழாவிற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், எஸ். குருசாமி, எஸ்.வி. லிங்கம், குடந்தை எஸ்.கே. சாமி, நாகை என். காளியப்பன், டி.கே. சீனிவாசன், நாவலர் இரா. நெடுஞ்செழியன், நாஞ்சில் நாடு எஸ்.கே. சாமி, டி.பி. பொன்னுசாமி, வழக்கறிஞர் வேணு கோபால், சர். ஆர்.எஸ். சர்மா, மருதவனம் பெருநிலக்கிழார் ஏ.டி. சுல்தான், கலைஞர் மு. கருணாநிதி ஆகியோர் வந்து சிறப்பித்தனர்.

அழகர்சாமியின் இறுதிப் பயணத்தின் போது உடல் நலிவுற்றிருந்த கலைஞர் இதில் பங்கு கொண்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் மாணவர் மன்றச் சார்பில் நடைபெற்ற படத்திறப்பு விழா வினுக்குக் கலைஞர் மு. கருணாநிதி அழைக்கப்பட்டு அழகர்சாமியின் படத்தினைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

அறிஞர் அண்ணா அவர்கள், அழகர்சாமி மறைந்த நேரத்தில் 1949ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3ஆம் நாள் 'திராவிட நாடு' இதழில் பின்வருமாறு எழுதினார்.

*"சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கும் முன்னணித் தலைவன்!*

*வைதீகத்தின் வைரி! வருணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற் செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! தன்னலம் மறந்து தன்னாட்டுக்குப் பணியாற்றிய பண்புடையோன்!*

*அறிவுப் பாதையில் அங்கும் இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறிவாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்!*

*'கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க்கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனாதனமா? சாய்ந்து விடாதே! சதியா? சாகடி! மதமா? அதனை மங்க வை! மாசுகளைத் துடை! மன்பதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதையைப் பெறு! சுயமரியாதை பெற்று சுகவாழ்வு வாழ முற்படு! – இது உன்னுடைய குறிக்கோளாக இருக்க வேண்டுமென்று எங்குச் சென்றாலும் எக்காள மிட்டு, மூலைமுடுக்கெல்லாம் முரசொலி கிளப்பித் தன்மான இயக்கத்தின் முன்னணித் தலைவனாக விளங்கி அஞ்சாநெஞ்சுடன் அறிவுப் பணிபுரிந்து வந்த அழகிரிசாமியே நீயா மறைந்தாய்?*

*நின்னை மக்கள் மறந்த போதிலும், நீ அவர்களை மறவாமல் அரும்பணி ஆற்றி வந்தனையே! கைம்மாறு கருதாது கடமையைச் செய்த கருமவீரனே! நீயா மறைந்தாய்! என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதை நடைமுறையில் செய்து காட்டிய செம்மலே! நீயா மறைந்தாய்?*

*எதிர்ப்பையே விருந்தாகக் கொண்டு எண்ணற்ற மக்களின் அறிவுக் கண்களைத் திறந்த ஏந்தலே! நீயா மறைந்தாய்?*

*பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவனே! நீயா மறைந்தாய்?*

*தாயைப் பிரிந்த சேயைப் போல் தனித்து நின்ற தமிழ் மக்களின் தன்மானத்தைக் காக்க வந்த தளபதியே – நீயா மறைந்தாய்?*

*அந்தோ! அழகர்சாமி! நீயா மறைந்தாய்!*

*நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் செய்தி மறக்க முடியாத சம்பவம்! மனத்தைக் குழப்பும் நிகழ்ச்சி!"*

**நன்றி : திராவிடர் இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு தொகுத்த 'வேர்கள்' நூல் தொகுப்பு**

# செம்மொழித் தமிழ் மீது நஞ்சு கக்கும் நாகசாமி [2]

**– ஒ. சுந்தரம்**

**‘மனுநீதி’ கூறும் ‘தர்ம’த்துக்கும் – வள்ளுவர் கூறும் ‘அறம்’ என்ற கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை ஆழமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார், நாவலர் நெடுஞ்செழியன். அவற்றில் சிலவற்றைக் காண்போம்:**

1) எல்லா மக்களுக்கும் பிறப்பு என்பது ஒரே தன்மையதாகத்தான் அமையும்; பிறப்பைப் பொறுத்து ஏற்றத் தாழ்வு இல்லை என்னும் கருத்துப்பட,

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” (குறள். 972) என்று கூறுவது வள்ளுவரின் ‘அறம்’. ஆனால்,

“பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததினாலும், எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்கத் தலைவனாகிறான்.” (மனு. த.சா. அத்தி.1, சுலோகம் (100) என்றும்,

“சூத்திரன் பிராமணனைத் திட்டினால், அவன் தாழ்ந்த இடமான காலில் பிறந்தவனாகையால், அவன் நாக்கை அறுக்க வேண்டும்” (மனு. த.சா. அத்தி.8, சுலோகம் : 270) என்றும் கூறுவது மனுவின் தருமமாகும்.

2) ‘ஒருவர் தாம் தேடிய பொருளைப் பிறர்க்குக் கொடுக்காமல், தாம் மட்டும் தனியாக இருந்து, உண்ணுதல் என்பது, வறுமையால் இரத்தலைக் காட்டிலும் கொடிது ஆகும்’ எனும் கருத்துப்பட

“இரத்தலின் இன்னாதது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். (குறள் - 229)

- என்று கூறுவது வள்ளுவரின் ‘அறம்’ ஆகும்.

“சூத்திரனுக்கு மிஞ்சிய சோற்றையும், ஹோமம் பண்ணிய மிச்சத்தையுங்கூட கொடுக்கலாகாது.” - (மனு. த.சா. அ.4, சுலோ.8)

என்று கூறுவது ‘மனு’வின் ‘தருமமாகும்’.

3) ‘குற்றம் இன்னதென்று ஆராய்ந்து பார்த்து, யார் பக்கமும் சாயாமல், நடுவுநிலைமை பொருந்துமாறு நின்ற, யாரிடத்திலும் குற்றத்திற்கான தண்டனையை ஆராய்ந்து, அதற்கு ஏற்றபடி, நீதி வழங்குவதே, அரசனது செங்கோல் முறையாகும்’ என்றும் கருத்துப்பட,

“ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து
யார்மாட்டும்
தேர்ந்து செய்வஃதே முறை” (குறள் 541)

என்று கூறுவது வள்ளுவரின் ‘அறம்’ ஆகும்.

“பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனைச் சித்திரவதை செய்து கொல்லுக. ஆனால், பிராமணன் சூத்திர னுடைய பொருளை, அவன் விருப்பப்படி, கொள்ளையிடலாம்” (மனு. த.சா. அ.9, சு. 24)

என்று கூறுவது மனுவின் ‘தருமம்’ ஆகும் என்றும் நாவலர் சுட்டிக் காட்டுகிறார்.

இந்த மண்ணின் மைந்தர்களை, வந்தேறி ஆரியப் பார்ப்பனர்கள், ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு வரை, ‘மனுதர்மத்தின்’ படியே அதிகாரம் செலுத்தி, மக்களைக் கொன்றொழித்தும், சொத்துக்களை சூறையாடியதும், ‘ஒரு குலத்துக்கு ஒரு நீதி’ வழங்கி வேட்டையாடிச் செழித்துக் கொழுத்துப் போயிருந்துள்ளனர்.

**‘பிராமி’ எனும் பண்டைய எழுத்து வடிவ முறையை ‘பிராமணர்கள்’ கண்டு பிடித்தார்கள் எனில், அது உண்மை எனில், அவர்கள் ஏன் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்திற்குத் தனியாக வடிவெழுத்துக்களைக் கண்டுபிடிக்கவில்லை?**

பின்னர், ஆங்கிலேயர்கள் நாடு முழுவதற்குமான பொதுவான குற்றவியல் சட்டங்களைப் பிறப்பித்து, ‘குற்றங்கள் எவையானாலும் அனைவருக்கும் தண்டனை’ எனக் கொண்டு வந்த பின்னரே, திராவிட மக்கள் மீதான கொடுமைகள் தடுக்கப்பட்டிருக்கின்றன.

ஆக, நாகசாமி துணைக்கு அழைக்கின்ற, வருணாசிரம, வடமொழிப் பற்றாளரான பரிமேலழகர், திருக்குறளுக்கு உரை எழுதத் துவங்கும்போதே, எடுத்த எடுப்பிலேயே, திருக்குறள் கூறும்,

> **“அறமாவது, மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் ஆம்”**

என்கிறார்.

அதாவது, நாவலர் சுட்டிக்காட்டியுள்ளாரே அந்த வகையான, ‘குலத்துக்கு ஒரு நீதி’ சொல்லும் ‘மனுதருமமே’ அறம் என்கிறார். இது எத்தகைய ‘வருணாசிரமத்தனம்?’ அந்த ‘வருணபேதம்’ கற்பிக்கும் அறத்தையே ‘அறம்’ என நிறுவுக எனக் கூறிடும் பரிமேலழகரின் வருணாசிரம, சனாதனப் பேர்வழியாகத்தான் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார் நாகசாமி. நல்ல வேளையாக, பரிமேலழகரைத் தனக்கு துணையாக அழைத்ததால், நாகசாமிகளை, அடையாளம் காட்டிடும் நமது பணி இலகுவானதாகிவிட்டது.

நாகசாமிகளுக்குத் தெரியாமல் இல்லை; தெரிந்தேதான் செய்கிறார்கள் ‘திருக்குறள்’ சாஸ்திரங்களின் தழுவல் எனும் திரிபுவாதத்தைக் கொஞ்சம்கூட கூச்சப்படாமல்!

‘அறம்’ என்பது பற்றி ஆய்வாளர் வி.இ. குகநாதன் குறிப்பிடுகையில், அறத்திற்கு ஓரள விற்கு நிகரான சொல் - Ethics என்னும் ‘கிரேக்கச் சொல்’ பொருத்தமாயிருக்கும் என்கிறார்.

**‘தர்மம்’** எனும் வடசொல்லுக்கு இணையாக ‘அறத்தைக்’ கூறுவது தவறானது என்கிறார்.

**‘தர்மம்’** என்பது, எமக்கு எது தேவையோ, அதுவே **‘தர்மமாகும்’**. அதனால்தான் மனுஸ்மிருதிகளான மனுதர்மம், மனுநீதி என்றெல்லாம் அழைப்பார்களே தவிர, ‘மனு அறம்’ என அழைக்க மாட்டார்கள்; ஏனெனில், ‘அவாளுக்கு’ நா கூசிடும் என்கிறார்.

பரிமேலழகரோடு நிறுத்தாமல், தனது திருக்குறள் திரிபுவாதத்திற்கு அறிஞர் உ.வே.சா. வையும் துணைக்கு அழைக்கின்றார் நாகசாமி.

சங்க இலக்கிய நூல்களைத் தேடி எடுத்துப் பதிப்பித்த பெருமைக்கு உரிய உ.வே.சாவும், தனது இனப்பற்றின் காரணமாக சங்க இலக்கிய நூற்களைப் பதிப்பிக்கும்போது, ஆங்காங்கு பார்ப்பனருக்குப் பெருமை ஏற்படுத்தும் விதமாக, பாடல்களிலே, இடைபுகுந்து ‘பொடி’ வைத்திருப்பதை ‘ஆரியப் பார்ப்பனர்களின் அளவிறந்த கொட்டங்கள்’ எனும் நூலில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

திரு. நாகசாமி, இந்த நூல் மட்டுமின்றி, கடந்த 2012இல் ‘Mirror of Tamil and Sanskrit’ எனும் நூலையும், ‘Tamil Nadu Land of Vedas’ என்றும் இரண்டு நூல்களை வெளியிட்டு, ‘தமிழ்நாடு என்று ஒன்று இல்லவே இல்லை, இது வேதங்களின் நாடு’ எனவும், ‘பிராமி’ என்பது பிராமணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் ‘அள்ளி’ விட்டிருக்கின்றார். இதற்கான கல்வெட்டு ஆதாரங்களோ, தொல்லியல் சான்றுகளோ இல்லை என்பதுதான் வேடிக்கை. ‘பிராமணர்’ - ‘பிராமி’ என உச்சரிப்புகள் ஒத்து வருவதால் இது பிராமணர்கள் கண்டுபிடித்தது எனக் கூறுவது கேட்டு அறிஞர் உலகம் நகைக்கவே செய்கிறது. என்றாலும், ‘அவாள்’ இதற்கெல்லாம் கூச்சப்படுவதில்லை.

‘பிராமி’ எனும் பண்டைய எழுத்து வடிவ முறையை ‘பிராமணர்கள்’ கண்டுபிடித்தார்கள் எனில், அது உண்மை எனில், அவர்கள் ஏன் தங்கள் வேத மொழியான சமஸ்கிருதத்திற்குத் தனியாக வடிவெழுத்துக்களைக் கண்டுபிடிக்க வில்லை எனும் கேள்வி இயல்பாகவே எழுகிறது.

சமஸ்கிருதத்திற்கு எழுத்து வடிவமே கிடையாது. இன்று சமஸ்கிருதத்தை தேவநாகரி

**திராவிட மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும், பல வெளிநாட்டுத் தமிழறிஞர் பெருமக்களும், ஆய்வாளர்களும் உறுதி செய்துள்ள 'தமிழி அல்லது தமிழ் பிராமி' வடிவெழுத்துக்களையும்கூட 'பிராமி- பிராமணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது' என நாக்கூசாது நாகசாமி கூறுவது, அவரது மனப்பிறழ்ச்சியோ என்ற அய்யம் நமக்கு ஏற்படுகிறது.**

என்றும், கிரந்தம் என்றும் இரண்டு இரவல் வாங்கப்பட்ட எழுத்து வடிவிலேதான் எழுதிப் படிக்கப்படுகிறது. சமஸ்கிருதத்திற்குச் சொந்த மில்லாத எழுத்து வடிவம் அவை.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் சமஸ்கிருதத் திற்குத் தமிழ்நாட்டில் 'கிரந்தம்' என்ற தமிழ் எழுத்துகள் உள்ளடக்கிய எழுத்து வடிவம், தமிழ் சிவாச்சாரியர்களால் பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதனால் அதற்குப் 'பல்லவ கிரந்தம்' என்றே பெயர்.

அதற்குப்பின், பல நூற்றாண்டுகளுக்குப் பின், இந்தி மொழி உருவாகிய பின், வடநாட்டினர் சமஸ்கிருதத்திற்கு எழுத்து வடிவத்தை இந்தி வடிவில் கொடுத்ததுதான் 'தேவநாகரி'! இன்று மக்கள் அன்றாடம் பேசிப் பயன் பெற முடியாத வழக்கொழிந்த மொழியாக சமஸ்கிருதம் ஆகியுள்ளது.

இது இவ்வாறிருக்க, ஹண்டர் மற்றும் ரேமெண்ட் என்ற ஆங்கிலேய அறிஞர்கள் 'பிராமி' எழுத்து முறை முற்றிலும் இந்தியாவி லிருந்தே தோன்றியது எனவும், அது சிந்துவெளி எழுத்துக்களிலிருந்து தோன்றியிருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

சில தமிழ் அறிஞர்கள், 'பிராமி' என்பது தமிழர்களது எழுத்து முறையென்றும், அதையே கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், அசோகர் மாற்றம் செய்து பிராகிருத மொழியை எழுதக் கூடிய எழுத்து முறையாக உருவாக்கினார் எனக் கருதுகின்றனர். மேலும், அவர்கள் 'பிராமி'யைத் 'தமிழி' என அழைக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். பெரும்பாலும், கல்வெட்டுகளிலும், சமய நூல்களை எழுதவுமே இந்த எழுத்து முறை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. (விக்கி பீடியா)

முதன்முதலில், பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுத்து வடிவம் கொண்ட 'தமிழி'யை, வடமொழிக்கு முதன்மையை ஏற்ற வேண்டும் என்பதற்காக, 'பிராமி' எனும் சமஸ்கிருதச் சொல்லை ஒட்டு சேர்த்து 'தமிழ் பிராமி' என ஆக்கிவிட்டனர் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, அசோகரது காலமான கி.மு. 3ஆவது நூற்றாண்டிலேயே எழுந்த **'சமவயங்ககத்தா'** எனும் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட சமண நூலில் பட்டியல் இடப்பட்ட 18 வகையான எழுத்து வடிவங்களைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

அவை : 1. பாம்பி, 2. யவனானி, 3. தோசபுரியா, 4. கரோத்தி, 5. புக்கரசரியா, 6. போகவையா, 7. பகாரியா, 8. உயமித்ரகரியா, 9. அக்கரபுட்டியா, 10. தவனானியா, 11. கிணிகையா, 12. அங்காலிவி, 13. கணிதாவிலி, 14. காந்தவயவிலி, 15. ஆடம்சாலிவி, 16. மகாசனி, 17. தமிழி, 18. பொலிம்னி ஆகும்.

இந்தப் பட்டியலில் எங்கும் 'பிராமி' என்று எந்த எழுத்து வகையும் குறிக்கப்படவில்லை. எனவே, அசோகர் 'பிராகிருத மொழியை' எழுதிட 'தமிழி' வடிவெழுத்துக்களையே பயன் படுத்தினார். இந்த 'தமிழியே' தமிழ் ஆகும் என அறிஞர்கள் நிறுவுகின்றனர். மேலும், இப் பட்டியலை வடநாட்டினரே தயாரித்துள்ளதால் 'தமிழி'யை முதலில் வைக்காது, 17ஆவதாகப் பட்டியலிட்டுள்ளதாகவும் கருதுகின்றனர். ('தெய்வமுரசு' ஆன்மிக மாத இதழ், டிச. 2012 - யாழ் இணையம்)

கடந்த 28.10.2012 அன்று 'தி இந்து' ஆங்கில நாளேடு, 'Poshred with Tamil Brahmi Script Found in Oman' - 'ஓமன் நாட்டில் கண்டெடுக்கப்பட்ட ஓட்டுச் சில்லில் தமிழ் பிராமி எழுத்துகள்' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருக் கிறது.

அக்கட்டுரையில் 'Khor Rori' எனும் ஓமன் நாட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓட்டுச் சில்லில் 'தமிழ் பிராமி' எழுத்துக்கள் கீறப்பட்டுள்ளதாகவும், அதில் "ணந்தைகீரன்" என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

'தமிழ் பிராமி' எழுத்துகள், மத்திய தரைக்கடலின் மேற்குப் பகுதியான எகிப்து முதல்

கிழக்குப் பகுதியில் தாய்லாந்து, வியட்நாம் வரை பல்வேறு இடங்களில் பரவிக் கிடக்கின்றன.(தமிழ் அண்டம் - இணையம்)

நிறைவாக, 'தமிழி' அல்லது 'தமிழ்ப் பிராமி' என்னும் எழுத்து வடிவம் பண்டைக் காலத்தில் தமிழ் எழுத்துக்களை எழுதப் பயன்பட்ட 'ஒலிப்பியல்' எழுத்து முறைமையே ஆகும்.

தமிழ்ப் பிராமி வடிவெழுத்துக்கள் குகைப் படுக்கைகள், மட்கல ஓடுகள், முதுமக்கள் தாழிகள், நாணயங்கள், முத்திரை அச்சுக்கள், மோதிரங்கள் ஆகியவற்றிலிருந்து கண்டுபிடிக்கப் பட்டன.

தற்போதைய தென்னிந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தமிழ்நாடு, கேரளம், இலங்கை, எகிப்து, தாய்லாந்து போன்ற இடங்களில் 'தமிழ் பிராமி' வடிவ எழுத்துக்கள் காணக் கிடைப்பது, பண்டைத் தமிழர்கள் நிலமெங்கும் பரந்து சென்று செம்மாந்து வாழ்ந்திருந்த பெருமையையே காட்டி நிற்கிறது.

திராவிட மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரும், பல வெளிநாட்டுத் தமிழறிஞர் பெருமக்களும், ஆய்வாளர்களும் உறுதி செய்துள்ள 'தமிழி அல்லது தமிழ் பிராமி' வடிவெழுத்துக்களையும்கூட 'பிராமி-பிராமணர்களால் கண்டுபிடிக்கப்பட்டது' என நாக்கூசாது நாகசாமி கூறுவது என்பது, அவரது மனப்பிறழ்ச்சியோ என்ற அய்யம் நமக்கு ஏற்படுகிறது.

தமிழ்ச் செம்மொழி இலக்கியங்கள் குறித்தும், தமிழ்மொழியின் தொன்மை குறித்தும், அதன் ஆதார மையங்கள் குறித்தும் தொடர்ந்து அவதூறான, கற்பனை கலந்த, கட்டுக் கதைகளைப் பரப்பி வரும் இந்த நபரைத்தான் 'தமிழ்ச் செம்மொழி ஆய்வுக்கான குடியரசுத் தலைவர் விருதுக்கானவர்களைத் தேர்வு செய்யும் குழுவில்' மத்திய பா.ஜ.க. அரசு உறுப்பினராக்கவுள்ளது.

இந்தச் செயலானது வடவாரியப் பண்பாட்டுப் படையெடுப்பை, தமிழ் இனத்தின் மீது, காவி மதவாத அரசு மறைமுகமாக நடத்துவதையே காட்டுவதாக அமைந்துள்ளது.

திரு. நாகசாமியின் நூல்களுக்கு மறுப்புத் தெரிவித்து (7.11.2018இல்) நடத்தப்பட்ட கருத்தரங்கில், திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் வீரமணி அவர்கள், 'நாகசாமி தனிப்பட்ட நபரல்ல; அவர் ஒரு நிறுவனத்தின் பிரதிநிதி; பலகோடி ரூபாய்களை இதற்காக ஒதுக்கி, தமிழ் இனத்திற்கு, மொழிக்கு எதிராகப் பரப்புரை செய்திட இவர் களமிறக்கப்பட்டுள்ளார்' என்பதாகத் தெரிவித்த கருத்துகள் ஊன்றி உணரத்தக்கவையாகும்.

காஞ்சி சங்கரமடத்திற்கும், நாகசாமிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை (குமுதம் லைஃப், 27.12.2017), குமுதம் இதழை ஆதாரமாகக் காட்டி, திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், ஆற்றிய உரையில், தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர். இருந்தபோது, 'ஆனந்த விகடன்' மணியன், அவரை வற்புறுத்தி, காஞ்சி பெரிய சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியைச் சந்திக்க அழைத்துச் சென்றதையும், அப்போது சங்கராச்சாரி, முதலமைச்சர் எம்.ஜி.ஆரிடம் அப்போது, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டு, தொல்லியல் துறையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த நாகசாமியை மன்னித்து விடுமாறு கோரிக்கை வைத்ததையும், அது கேட்டு எம்.ஜி.ஆர். அதிர்ச்சியடைந்து, சரியென ஆமோதித்து வந்ததையும் போட்டுடைத்து, நாகசாமியின் வலைப்பின்னல் (நெட்வொர்க்) என்ன என்பதை அம்பலப்படுத்தினார். இவற்றையெல்லாம் நாம் மனதில் கொண்டுதான் நாகசாமிகளை எதிர்கொள்ள வேண்டும்.

இத்தகைய பார்ப்பன ஆதிக்க அதிகார வர்க்கத்தின் கைப்பிள்ளையாக இருந்ததாலேயே 'பத்மபூசன்' விருதையும் பெற்று, இன்று செம்மொழித் தமிழ் இலக்கியங்களைச் சிறுமைப்படுத்திடும் வகையில் நூல்களை வெளியிட்டு, செம்மொழி விருதுக்கான தேர்வுக் குழுவிலும் அங்கம் வகிக்கும் வாய்ப்பையும் பெற்று, இவர் தமிழருக்குக் கேடு செய்ய முனைந்துள்ளார்.

'நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல், மத்திய அரசின் பல்வேறு துறைகளில் ஆதிக்கம் செலுத்தும் வகையில், பதவிகளில் அமர வைக்கப்பட்டள்ள காவி, மதவாத, ஆர்.எஸ்.எஸ். நாகசாமிகளைக் களையெடுக்க, மக்கள் அணியமாக வேண்டும்.

(நிறைவு)



# பார்ப்பனிய பயங்கரவாத அமைப்புகளின் கதை

**துரை**

***கலவரங்கள் படுகொலைகளுக்குப் பயிற்சி தரும் மதவெறிப் பள்ளிகள் மோடி ஆட்சியில் தங்குதடையின்றி செயல்படுகின்றன.***

இந்தியாவைப் பொறுத்தவரை எங்கேனும் குண்டு வெடிப்போ, மத கலவரமோ நடக்கும் போதெல்லாம் அவை தீவிரவாதச் செயல்கள் என்ற அடிப்படையில் மட்டும் நோக்கப்படுவதில்லை. மாறாக எடுத்த எடுப்பிலே இஸ்லாமிய தீவிரவாதம் என்று முத்திரை குத்தப்படுகிறது. குண்டு வெடிப்புகள் அனைத்தும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளால் மட்டுமே நடத்தப்படுகின்றன என்பது முழு உண்மை அல்ல. ஏனெனில் இந்தியாவில் நிகழும் பல்வேறு குண்டு வெடிப்பு, கலவரச் செயல்களில் பின்னணியில் இங்குள்ள சங்பரிவார அமைப்புகளின் பங்கு கணிசமான முறையில் உள்ளது என்பதே உண்மை. சற்றேறக்குறைய 600க்கும் அதிகமான அமைப்புகளாக, சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும், கல்வி அமைப்புகளாக, கலாச்சார அமைப்புகளாக, ஆன்மிக அமைப்புகளாக இயங்கும் சங்பரிவாரங்கள் என்பவை இப்படியான வகுப்புவாதச் செயல்களை தொடர்ந்து நடத்தி வருவதில் இன்றளவும் முயன்று வருகின்றன. அவற்றில் முக்கியமான ஒரு சில அமைப்புகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம். ஏனெனில் தேசபக்தி என்ற பெயரில் இந்து தீவிரவாதம் என்பது எப்படி தங்குதடையின்றி இந்த நாட்டைக் கூறு போடுகிறது என்பதை மக்கள் தெரிந்து கொள்வது அவசியமானது.

**சனாதன் சன்ஸ்தா**

1991 ஆம் ஆண்டு சனாதன் சன்ஸ்தா என்ற அமைப்பு முறையாக தன்னை பதிவு செய்து கொண்டது "சனாதன் பாரதிய சன்ஸ்கிருதி சன்ஸ்தா" என்ற பெயரில் தொண்டு நிறுவனமாகவே பதிவு செய்து கொண்டது என்பது கவனிக்கத்தக்கது. அப்போது அதன் நோக்கமாக அவர்கள் வைத்தது மக்களிடையே ஆன்மிக விஞ்ஞானத்தை பரப்புவது என்பதுதான்.

இந்த அமைப்பைப் பற்றி 2010இல் சேவா காவல்துறை வழங்கிய அறிக்கை என்னவென்றால், "சனாதன சன்ஸ்தா என்ற அமைப்பு தற்போது தீவிரவாத செயல்களை ஊக்கப்படுத்தும் ஒரு அமைப்பாக உள்ளது. மேலும் தொடர்ந்து

இவ்வகையான செயல்களை மாநிலத்தில் நாம் அனுமதிக்கும் பட்சத்தில் இந்த நாட்டின் மத நல்லிணக்கத்திற்கும், மக்களின் உயிர், உடைமை களுக்கும் ஊறு விளைவிப்பதாகவே அமையும்."

மேலும் தியான வகுப்பு முகாம்கள் என்ற பெயரில் அவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளின் முக்கிய நிகழ்வாக தற்காப்புப் பயிற்சியை நடத்துகிறார்கள். தற்காப்புப் பயிற்சி என்பது வேறல்ல துப்பாக்கி சுடும் பயிற்சி என்பதே. இதை அவர்கள் யாருக்கு எதிராக நடத்துகிறார்கள் என்றால், பகுத்தறிவாளர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யாரெல்லாம் இந்துக் களுக்கு எதிரிகளாக அவர்கள் கருதுவோரைத் தான் பல்வேறு வகுப்புவாத செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் சனாதன சன்ஸ்தா அமைப்புதான். நரேந்திர தபோல்கர், கோவிந்த பன்சாரே, எம்.எம். கல்புர்கி, கௌரி லங்கேஷ் போன்றவர்களின் கொலைகளில் தொடர்புடைய முக்கிய அமைப்பாக இருந்து வருகிறது.

### பஜ்ரங் தள் (Bajrang Dal)

1984இல் விசுவஹிந்து பரிஷத்தில் (VHP) இளைஞர் போராளி குழு என்ற பெயரில் தொடங்கப்பட்ட அமைப்புதான் பஜ்ரங் தள். இதன் முதல் நோக்கமாக அப்போது அயோத்தியா இயக்கம் என்ற பெயரில் இந்து இளைஞர்களை ஒருங்கிணைத்து பாபர் மசூதி இடிப்புக்கு தயார்படுத்துவதாகவே இருந்தது. தற்போது மங்களூரில் ஈஸ்வரி மேன் பவர் என்ற பெயரில் சரண் பாம்ப்வெல் என்பவரின் தலைமையில் வேலையில்லா இளைஞர்களைத் திரட்டி இந்துத்துவ இயக்கங்களின் கள வேலை களுக்கு ஆட்களைத் திரட்டும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மங்களூரில் உள்ள பல்வேறு வணிக வளாகங்களிலும், அடுக்குமாடி குடியிருப்புகளிலும் பணியாற்றும் பாதுகாவலர் களில் பெரும்பாலானோர் பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தான். பல்வேறு கலவரங்களின்போது சிறுபான்மையினரின் குறிப்பாக, முஸ்லிம்களின் கடைகளையும் வீடு களையும் அடையாளம் கண்டு தாக்குதல்களில் ஈடுபடுவதற்கு இது அவர்களுக்கு பெரும் வசதியாக இருக்கிறது. 1992இல் டிசம்பர் 6ஆம் நாள் பாபர் மசூதி இடிப்பில் நகரம் சார்ந்த இளைஞர்களை அயோத்தி நோக்கி நகர்த்தியதில் முக்கிய பங்கு வகித்தது. மற்றும் சங்பரி வாரங்களின் முன்னணி அமைப்பாகவும் இருந்தது பஜ்ரங் தள். அதேபோல 2002ஆம் ஆண்டு நடைபெற்ற குஜராத் கலவரத்திலும் பஜ்ரங் தள் அமைப்பின் செயல்பாடுகள் முக்கியமானதாக பல்வேறு காவல்துறை விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த அமைப்பைச் சார்ந்த பாபு பஜ்ரங்கி என்பவரின் வாக்கு மூலமாக "எவ்வளவுக்கு எவ்வளவு முஸ்லிம்களைக் கொல்ல முடியுமோ, அத்தனை பேரை கொல்ல வேண்டும் என்பதே எங்களுக்கு இட்ட கட்டளை" என்று கூறியது காவல்துறையின் அறிக்கைக்கு வலு சேர்ப்பதாக உள்ளது. மேலும் அதிர்ச்சிக்குரிய தகவல் என்னவென்றால், இதன் தொண்டர் களுக்கு பயிற்சி அளிப்பதில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளும், புலனாய்வு அமைப்பைச் சேர்ந்தவர்களும் இருப்பதுதான். 24 ஆகஸ்ட் 2008 அன்று பஜ்ரங் தள் அமைப்பைச் சார்ந்த ராஜீவ் மிஸ்ரா மற்றும் புபேந்தர் சிங் என்ற இருவரும் கான்பூரில் வெடி பொருட்கள் தயாரிக்கும்போது நடந்த விபத்தில் இறந்து போனதாக கான்பூர் காவல்துறையால் அறிவிக்கப் பட்டது. சம்பவத்தைத் தொடர்ந்து விசாரித்த உத்திரபிரதேச சிறப்பு புலனாய்வுத் துறை தெரிவித்த செய்திகள் உண்மையில் பஜ்ரங் தள் அமைப்பு எத்தகைய ஆபத்தானது என்பதை அம்பலப்படுத்தியது. சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இருந்து 3 கிலோ லெட் ஆக்ஸைட், 500 கிராம் ரெட் லெட், 1 கிலோ பொட்டாசியம் நைட்ரேட், 11 கையெறி குண்டுகள் இன்னும் பேட்டரி முதலானவை காவல்துறையால் கைப்பற்றப் பட்டன. இதில் மிக முக்கியமான செய்தி என்ன வென்றால் கைப்பற்றப்பட்ட கையெறி குண்டுகள் அப்படியே இந்திய இராணுவத்தில் பயன்படுத்தப்படும் குண்டுகளை வடிவத்திலும் அளவிலும் ஒத்திருந்தன என்பதுதான்.

ஒருபுறம் வேலை வாய்ப்பின்மை பெருகி வரும் சூழலில் அந்த இளைஞர்களை தேசபக்தி என்ற பெயரால் மூளைச் சலவை செய்து இப்படியான பயங்கரவாதச் செயல்களைத் தொடர்ந்து அரங்கேற்றி வரும் வேலையை செய்வதில் முதன்மை அமைப்பாக பஜ்ரங் தள் இன்றளவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### ஹிந்து யுவவாகினி (Hindu Yuva Vahini)

**தற்போதை உத்திரப்பிரதேச முதல்வராக இருக்கும் யோகி ஆதித்யநாத் தலைமையில் இயங்கும் அமைப்புதான் ஹிந்து யுவவாகினி.** மதக் கலவரங்கள் கோரக்பூர் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் மிகவும் சகஜமாகிப் போனது, ஹிந்து யுவவாகினி 2002இல் உருவாக்கப்பட்டப் பிறகு, 2002க்கும் 2007க்கும் இடையே

சற்றேறக்குறைய 22 பெரிய அளவிலான கலவரங்கள் நடந்தேறியுள்ளன. 1998இல் முதன் முறையாக கோரக்பூர் தொகுதியில் தேர்ந்தெடுக் கப்பட்டது முதல் கடைசியாக முதல்வர் ஆன வரையிலும் யோகி ஆதித்யநாத்தின் ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னும் ஒரு வகுப்புவாதக் கலவரங்களின் சாட்சி உள்ளது. யோகி ஆதித்யநாத் மீது பதியப்பட்ட பல்வேறு வழக்குகளும் யோகி முதலமைச்சரான பின் வாபஸ் பெறப்பட்டுள்ளன. தொடர்ந்து ஹிந்து யுவவாகினி அமைப்பைச் சேர்ந்தவர்கள் உத்திர பிரதேசத்தில் அறிவிக்கப் படாத காவல் துறையைப் போல செயல்பட்டுக் கொண் டுள்ளனர். முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்வைத் தூண்டி கலவரம் செய்யும் வேலையை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

**அபினவ் பாரத் (Abhinav Bharat)**

முதன்முதலாக, இந்த அமைப்பு 1905ஆம் ஆண்டு சாவர்க்கரால் புனேயில் தொடங்கப் பட்டது. ஆரம்பம் முதலே சர்ச்சைக் குரிய அமைப்பாக விளக்கிய அபினவ் பாரத் 1906ஆம் ஆண்டு சாவர்க்கர் (காந்தி கொலையில் குற்றம்சாட்டப்பட்டவர்) இலண்டன் சென்ற பிறகு அவரது சகோதரர் பாபாராவ் என்பவரால் பொறுப்பேற்று நடத்தப்பட்டது.1909ஆம் ஆண்டு வெடிகுண்டு தயாரிக்கும் சில தொழிற்சாலை களையும், இரகசிய ஆயுதக் கிடங்குகளையும் நடத்தி வந்ததாக ஆங்கில அரசால் கண்டு பிடிக்கப்பட்டு, பாபாராவ் கைது செய்யப்பட்டு அந்தமான் சிறைக்கு நாடு கடத்தப்பட்டார். சுதத்திரத்திற்குப் பிறகு செயலற்றுக் கிடந்த இந்த அமைப்பை மீண்டும் 2006ஆம் ஆண்டு ஹிமானி என்பவரால் மகாராஷ்டிராவில் மீண்டும் தொடங்கி இருக்கிறார்கள். இவர் வேறு யாருமல்ல காந்தியடிகள் கொலை வழக்கில் சிக்கிய கோபால் கோட்சேயின் மகள்; சவார்க்கரின் தம்பி மருமகள்.

இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் இந்திய நாட்டை வேத தர்மத்தின் அடிப்படை யிலே மாற்றவேண்டும். ஸ்மிருதிகள்தான் இந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டமாக்கப்பட வேண்டும் என்பதாகும்.

2008இல் நடந்த மாலேகான் குண்டு வெடிப்பின் பின்னணியில் இருந்து செயல்பட்ட அமைப்பு அபினவ் பாரத் மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்த வன்முறையின் மூளையாக இருந்து செயல்பட்டதாக புரோகித் என்ற அபினவ் பாரத் அமைப்பைச் சேர்ந்தவரை அடையாளம் காட்டியது மகாராஷ்டிரா தீவிரவாதத் தடுப்புப் படை (Anti-Terrorist Squad). இதில் அதிர்ச்சியூட்டும் செய்தி என்னவென்றால் இந்த புரோகித் வேறு யாருமல்ல இராணுவத்திலே லெப்டினட் கர்னல் என்ற உயர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரி. வெளிப்படையாக இவர் பேசிய பேச்சுக்கள் இன்றைக்கும் பதிவில் உள்ளது. அதாவது "இந்து இராஷ்டிரத்தை அமைப்பதில், இடையூறு செய்யும் எவரும் அரசியல் ரீதியாக தனிமைப்படுத்தப்படுவார்கள் என்பது மட்டுமல்ல, மாறாக அவர்கள் தயவுதாட்சண்யம் இன்றி கொல்லப்படுவார்கள்" என்று அறிவித்தார்.

தொடர்ந்து மாலேகான் குண்டு வெடிப்பைப் பற்றி விசாரணை செய்த மகாராஷ்டிர தீவிரவாத தடுப்புத் துறையின் தலைவராக இருந்த ஹேமந் கர்கரே என்ற அதிகாரியின் அறிக்கைகள் பல்வேறு மர்மங்களை வெளிக்கொண்டு வந்தன. அதன்படி அதுவரை நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்பு களுக்கும் இஸ்லாமிய இயக்கங்கள் காரணம் என்று கருதப்பட்ட பல்வேறு சம்பவங்களுக்கும் பின்னால் இருந்து செயல்பட்டது. அபினவ் பாரத் போன்ற இந்துத்துவ இயக்கங்கள் என்பது அம்பலமானது. மேலும் இந்த இந்துத்துவ இயக்கங்களின் செயல்பாடுகளில் கணிசமான பங்கு ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளான லெப்டினட் கர்னல் புரோகித், மேஜர் ரமேஷ் உபத்யாயாத்லால் போன்ற பலருக்கு தொடர்பு இருந்தது தெரிய வந்தது. இதில் மிக முக்கியமான செய்தி என்னவென்றால் இந்த விசாரணையைத் தொடர்ந்து நடத்தி வந்த ஏ.டி.எஸ். அதிகாரி ஹேமந்த் கர்கரே 2008 நவம்பரில் நடந்த மும்பை தீவிரவாத தாக்குதலில் கொல்லப்பட்டதாகும். அவர் யாரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது இன்று வரை தொடரும் மர்மம். தீவிரவாத தாக்குதலில் உயிரிழந்தார் என்று பொத்தம் பொதுவாகவே இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. 2011இல் மாலேகான் குண்டு வெடிப்பு பற்றிய விசாரணையை மகாராஷ்டிர ஏ.டி.எஸ்.இல் இருந்து தேசிய புலனாய்வு அமைப்புக்கு மாற்றப்பட்டது. நீதிமன்றத்தில் வழக்கை நடத்தி வந்த மகாராஷ்டிர சிறப்பு அரசு வழக்கறிஞர் ரோகினி சலியன் என்பவர் முக்கியமானவர். இந்த வழக்கைப் பற்றிய பல்வேறு விவரங்களை ஏ.டி.எஸ். அதிகாரியான ஹேமந்த் கர்கரேயுடன் இணைந்து அறிந்து வைத்திருந்தவர். அவர் 2015 ஜூன் மாதம் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்: "2014இல்

மோடி அரசாங்கம் பதவியேற்றது முதல், தேசிய புலனாய்வு அமைப்பில் (NIA) இருந்து இந்த வழக்கில் தீவிரமாக இயங்க வேண்டாம் என்று எனக்கு தொடர்ந்து அழுத்தம் தரப்பட்டது".

**போன்சாலா மிலிட்டரி ஸ்கூல்**
**(Bhonsala Military School)**

1996ஆம் ஆண்டு நாக்பூரில் தொடங்கப் பட்டது இந்தப் பள்ளி. இதன் முக்கிய நோக்கம், மாணவர்களுக்கு இராணுவத்தில் சேர்வதற்கான தேர்வுகளுக்கு சிறப்பாக அவர்களை பிரத்யேக முறையில் தயார்படுத்துவதுதான். ஆனால் உள்ளே நடப்பது மாணவர்களிடையே தேசபக்தி என்ற பெயரில் அப்பட்டமாக ஆர்.எஸ்.எஸ். கருத்துக்களைப் பரப்பி இந்துத்துவ அரசியலுக்கு அவர்களை தயார்படுத்துவதுதான். மேலும் பல்வேறு இந்துத்துவ இயக்கங்களுக்கான பயிற்சி முகாம்களும் இங்கே தொடர்ந்து நடத்தப் படுகின்றன. இவற்றில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளும், புலனாய்வு அமைப்பைச் சேர்ந்தவர்களும் கொடுக்கும் ஆயுதப் பயிற்சியும் அடங்கும். நாம் ஏற்கெனவே பார்த்த அபினவ் பாரத் அமைப்புத் தொடர்புடைய 2008 மாலேகான் குண்டு வெடிப்பின் பெரும்பான்மை திட்டங்கள் அனைத்தும் இங்கே இருந்து தான் திட்டமிடப்பட்டிருக்கின்றன என்று மகாராஷ்டிர ஏ.டி.எஸ்.இல் வாக்குமூலம் அளித்தார், குண்டு வெடிப்பில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ரமேஷ் உபத்யாயா. இதுபோன்ற பள்ளிகளை எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது இந்த அமைப்பு. இப்படியான திட்டம் உருவாக்க மூளையாக இருந்தவர் ஆர்.எஸ்.எஸ்.யை தோற்றுவித்த ஹெட்கேவரின் குருவான டாக்டர் பி.எஸ். மூஞ்சே. அவர்தான் 1937இல் நாசிக்கில் இப்படியான ஒரு பள்ளியை முதன்முதலில் தொடங்கியவர். இதற்கு மூஞ்சேவுக்கு தூண்டு கோலாக இருந்தது, இத்தாலியில் இருந்த முசோலினியின் பாசிசப் பயிற்சி பள்ளிகள் தான் என்று அவருடைய நாட்குறிப்பில் அவரே குறிப்பிட்டுள்ளார். எனவே அதேபோல் இந்தியாவில் சனாதன தர்மத்தை நிலைநாட்ட இப்படியான பள்ளிகளை நாடெங்கும் தொடங்க வேண்டும் என்பதே அவரின் திட்டமாக இருந்தது. 2008 மாலேகான் குண்டு வெடிப்பில் மகாராஷ்டிர ஏ.டிஎஸ். விசாரணையின் கீழ் கொண்டு வரப்பட்ட போன்சாவா மிலிட்டரி ஸ்கூல், 2014க்குப் பிறகு எந்த பிரச்சினைகளும் இன்றி இன்றளவும் இயங்கி வருகிறது. தொடர்ந்து இந்துத்துவ இயக்கங்களின் பயிற்சி வகுப்புகளும் நடந்து கொண்டு தான் இருக்கிறது.

இவை மட்டுமல்ல, கேரளாவில் இந்து ஐக்கிய வேதி, பஞ்சாப்பில் ராஷ்ட்ரிய சீக் சங்கத், கர்நாடகாவில் ராம் சேனா என்பதாக ஒவ்வொரு மாநிலங்களிலும் அங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆன்மிக இயக்கம் என்ற பெயரிலோ அல்லது கலாச்சார இயக்கம் என்ற பெயரிலோ நிறுவி வகுப்புவாத, மதவாத, சாதியவாத வன்முறைகளைத் தொடர்ந்து செய்து வருகின்றன சங்பரிவார அமைப்புகள். **வெறுமனே பேட்டரி வாங்கியதில் உதவினார் என்ற குற்றச்சாட்டிடன் அடிப்படையில் கைது செய்யப்பட்டு 28 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் போராடிக் கொண்டு இருக்கிறார்கள், பேரறிவாளன் உள்பட்டோர். ஆனால் கிலோ கணக்கில் வெடி மருந்துகள், குண்டுகள் என்ற கையும் களவுமாக பிடிபட்ட பின்னரும், குறைந்தபட்சம் அந்த அமைப்புகள்கூட தடை செய்யப்படவில்லை.** கண்துடைப்பாக நடத்தப்பட்ட ஓராண்டு வழக்கு களும் 2014க்குப் பின் வாபஸ் பெறப்பட்டுள்ளன அல்லது கிடப்பில் போடப்பட்டுள்ளன.

தீவிரவாதம் என்றாலே முஸ்லிம்களை நோக்கி விரல் நீட்டும் இந்திய ஊடகங்களும், திரைப்படங்களும் ஒரு போதும் நம் நாட்டிற்குள்ளே செயல்படும் இதுபோன்ற பார்ப்பனிய இந்துத்துவ இயக்கங்களைப் பற்றி வாய் திறக்க மாட்டார்கள். ஒரு புறம் வேலை வாய்ப்பின்மையை உருவாக்கி அதன் பயனாய் மன உளைச்சல் அடையும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இளைஞர்களை மூளைச் சலவை செய்து வகுப்புவாத செயல்களில் இறக்கிவிடும் வேலையை இந்துத்துவ இயக்கங்கள் திட்டமிட்டு செய்து வருகின்றன. குறைந்தபட்சம் இதில் கீழ்மட்டங்களில் களத்தில் வேலை செய்யும் இளைஞர்கள் இந்த இயக்கங்களால் பயன் பெற்றார்களா என்றால், அதுவும் இல்லை. இவை அத்தனையும் யாருடைய நலனுக்காக செயல்படுகிறது என்றால், எந்த சந்தேகமும் இல்லாமல் பார்ப்பன நலன் என்பதே விடையாக இருக்கும்.

(சென்னையில் திராவிடர் விடுதலைக்க கழகம் நடத்திய 'வரலாற்றில் பார்ப்பனிய வன்முறை' கருத்தரங்கில் நிகழ்த்திய உரை)

தகவல்களுக்கு ஆதாரம் :
Book: Shadow Armies (Fringe Organisations and Foot Soldiers of Hindutuva)
by : Dhirendra K. Jha

*அயோத்தியில் இராமன் பிறந்தான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், இன்றைய அயோத்தியில், அவுரங்கசிப் காலத்தில் கட்டப்பட்ட பாபர் மசூதியை இடித்துவிட்டு, அந்த இடத்தில் இராமனுக்கு கோயில் கட்ட வேண்டும் என்று சங் பரிவார் அமைப்பினர் முயன்று வருகின்றனர். இதனால் ஏற்பட்ட மோதல்களிலும், கலவரங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் இறந்துள்ளனர். இத்தகைய சூழலில், அனைத்து கலவரங்களுக்கும் அடிப்படையான, "இராமன் அயோத்தியில் பிறந்தான்" என்ற நம்பிக்கையை ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகிறது.*

# இராமன் அயோத்தியில் பிறந்தானா?



ம.கி. எட்வின் பிரபாகரன்

## முதல் இராமாயணம் எது?

இராமன் அயோத்தியில் பிறந்தான் என்ற நம்பிக்கைக்கு, கிமு 4 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட வால்மீகி இராமாயணமே காரணம். எனவே இராமாயணங்களை ஆராய்வது அவசியமாகிறது. இராமாயணங்கள் மொத்தம் 48. இவற்றுள் புத்த இராமாயணங்கள் மூன்றும், ஜைன இராமாயணங்கள் மூன்றும் அடங்கும். முதலில் தோன்றிய இராமாயணம் வால்மீகி இராமாயணம் என்று தவறாக கருதுவோரே பெரும்பான்மை. ஆனால், முதல் இராமாயணத்துக்கு "தசரத ஜாதகம்" என்று பெயர். இது கிமு 500ஆம் ஆண்டைச் சேர்ந்த புத்தமத இராமாயணமாகும். இதற்கும் பார்ப்பன வேத மதத்துக்கும் தொடர்பில்லை. தசரத ஜாதகத்தின் படி, தசரதன், இன்றைய அயோத்தியில் இருந்து 200 கிமீ தொலைவில் உள்ள வாரணாசியை தலைநகராக கொண்டு ஆண்ட மன்னன். எனவே இவனுடைய மகன் இராமன் பிறந்த இடம் வாரணாசி அரண்மனை என்று கொள்வதே முறையாகும். ஆனால், தசரத ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட வால்மீகி இராமாயணத்தில், தசரதனின் தலைநகரம் அயோத்தி என்று மாற்றப்பட்டுள்ளது.

அதே போல், தசரத ஜாதகத்தில் சகோதரர்களாக காட்டப்பட்டுள்ள இராமனையும் சீதையையும், வால்மீகி, கணவன் மனைவியாக காட்டியுள்ளார். புத்த மத ஜாதகக் கதைகள், புத்த மதக் கட்டுக்கதைகளின் தொகுப்பு. இந்த தொகுப்பில் தசரத ஜாதகமும் ஒன்று. இதில், இராமன் புத்தரின் அவதாரமாக காட்டப்பட்டுள்ளான். ஆனால், தசரத ஜாதகத்தை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்ட வால்மீகி இராமாயணத்தில், அயோத்திய காண்டத்தில், 109ஆவது சர்க்கத்தில், இராமன் புத்தரைத் திட்டுவதாக காட்சியமைக்கப்பட்டுள்ளது. இராமன், புத்தரை திருடன் என்றும், புத்த மதத்தை

நாத்திகவாதம் என்றும் தூற்றி யுள்ளான். எனவே, வால்மீகி இராமாயணம், புத்த மத எதிர்ப்பு பிரச்சாரத்துக்காக, பார்ப்பனர்களால் வடமொழி யில் உருவாக்கபட்ட இதிகாசம் என்பது புலனா கிறது. அதோடு மட்டுமில்லாமல், கிமு 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர், இராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ளதால், இராமாயணக் கற்பனை சம்பவங்கள் நடந்த காலம் என்பது புத்தருக்குப் பிந்தைய காலம் என்பதும், திரேத யுகத்தில் இல்லை என்பதும் தெளிவாகிறது.

**காவிகளுக்குள் கருத்தொற்றுமை உண்டா?**

இது ஒருபுறமிருக்க, வாரணாசி இராமனை அயோத்தி இராமனாக்கிய காவிகளுக்காவது கருத்தொற்றுமை உண்டா? என்றால், அதுவும் இல்லை. ஆர். எஸ். எஸ் சிந்தனையாளர்களாக தங்களை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஒவ்வொரு போலி ஆய்வாளரும் ஒவ்வொரு கருத்தை கூறுகின்றனர். Ancient Geography of Ayodhya (அயோத்தியின் பண்டைய புவியியல்) என்ற புத்தகத்தில் ஷ்யாம் நாராயண் பாண்டே என்பவர், இராமன் பிறந்த இடம் ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள ஹெரத் என்கிறார். அகண்ட பாரதக் கனவு காணும் பாண்டேக்கள், ஆப்கானிஸ்தான் வரை போனதில் நமக்கு ஆச்சரியம் எதுவும் இல்லை. Vedic People (வேத மக்கள்) என்ற நூலில், ராஜேஷ் கவுச்சர் என்பவர், ஆப்கானிஸ்தான் நதியான ஹரியுத் நதியின் கரை தான், வால்மீகி இராமா யணத்தில், இராமன் பிறந்ததாக கூறப்பட்டுள்ள சராயு நதிக்கரை என்கிறார். இன்னொரு காவி ஆய்வாளரான கிருஷ்ணா ராவ், திராவிட நாகரிகமான சிந்து சமவெளி நாகரிகத்தை ஆரிய நாகரிகம் என்றும், சிந்து மக்கள் பேசிய மொழி சமஸ்கிருதம் என்றும் பொய்யுரைப்பதில் வல்லவர். அந்த வல்லமையினால், இராமன் பிறந்த இடம் ஹரியானா மாநிலத்தில் உள்ள பனவாலி என்கிறார். ஆக, இராமன் பிறந்த இடம் இது தான் என்று முடிவு செய்வதில் கூட, ஹிந்துத்துவ வாதிகள் மத்தியில் கருத்தொற்றுமை இல்லாத போது, இராமன் பிறந்த இடம் அயோத்தி தான் என்று நிறுவ முயல்வது, எப்படி நியாயமாகும்?

**இன்றைய அயோத்தி இராமாயண அயோத்தியா?**

அடுத்ததாக, இராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ள அயோத்தியும், இன்றைய அயோத்தியும் ஒன்றா? என்பதை ஆய்வுக்குட்படுத்துவோம்.

**தசரத ஜாதகம் உள்ளிட்ட கற்பனைப் புராணங்களை வைத்து பார்க்கும் போதும், இராமன் பிறந்த இடம் அயோத்தி இல்லை என்பது தெளிவாகிறது.**

இன்றைய அயோத்தியின் பழைய பெயர் "சாகேதா". சாகேதாவில் மனிதன் வாழ்ந்ததற்கான அடையாளங்கள், கிமு 8ஆம் நூற்றாண்டில் இருந்து தான் பதிவாகியுள்ளன. கிமு 8ஆம் நூற்றாண்டில், வால்மீகி இராமாயணத்தில் சொல்லப்பட்ட அளவுக்கு நகரக் கட்டமைப்புகள் சாகேதாவில் இல்லை. சாகேதா சரியாக எந்த இடத்தில் இருக்கின்றது என்பதற்கான குறிப்புகள் எந்த ஹிந்துமத நூலிலும் இல்லை. புத்த மத நூல்களில் தான் அதை பற்றிய துல்லியமான குறிப்புகள் உள்ளன. "ஸம்யுக்த நிகா" என்ற புத்தமத நூலில், சாகேதா இருக்குமிடம் குறிக்கப் பட்டுள்ளது. மேலும், சாகேதா, கி.மு. 6ஆம் நூற்றாண்டுக்கும் கிமு 5ஆம் நூற்றாண்டுக்கு நடுவில், இக்சுவாகு (கரும்பு) பேரரசின் தலைநகராகவும் இருந்துள்ளதாக இந்நூல் கூறுகிறது. தசரதன்இக்சுவாகு மன்னன் என்று ஹிந்துமத நூல்களும் கூறுவதிலிருந்து, புத்த மத கதையை மட்டுமல்ல, புத்தமத பேரரசுப் பெயரையும் பார்ப்பனர்கள் திருடியிருக்கிறார்கள் என்று புரிந்து கொள்ள முடிகிறது. மேலும், மனிதன், கரும்பு (இக்சுவாகு) பயிரிட ஆரம்பித்து 6000 ஆண்டுகள் தான் ஆகிறது என்று Archaeology in Oceania என்ற ஆய்விதழில், ஜான் டேன்ஸ் என்ற ஆய்வாளர் ஆய்வறிக்கையை எழுதியுள்ளார் (1993). எனவே மறுபடியும், திரேத யுகத்தில் இராமாயணம் நடக்கவில்லை என்பது உறுதியா கிறது.

அதே போல், இன்னொரு புத்தமத நூலான "அட்டகதா"வில், பிரசனஜித் என்ற புத்த மன்னன், தனஞ்சயா என்ற வணிகனிடம், சாகேதா நகரத்தை உருவாக்கச் சொன்னதாக குறிப்புகள் உள்ளன. அப்போது பேரரசின் தலைநகரம் ஷ்ரவதி தானேயன்றி, சாகேதா இல்லை. இரண்டு நகரங்களுக்கும் 100 கிமீ இடைவெளி உண்டு. கிமு 5ஆம் நூற்றாண்டில், சாகேதா, புத்த மகத பேரரசின் கீழ், ஒரு இரண்டாந்தர நகரமாகவே இருந்துள்ளது. மற்றுமொரு புத்த நூலான "டிகா நிகயா"வில், ஆறு முக்கிய நகரங்களில் ஒரு நகரமாக சாகேதா குறிப்பிடப்பட்டுள்ளது.

*கிமு 3ஆம் நூற்றாண்டில், மவுரியப் பேரரசர் அசோகர் பல புத்த விகாரங்களை சாகேதாவில் அமைத்தார். பிற்கால மவுரியப் பேரரசு, புஷ்யமித்ர சுங்கன் என்ற பார்ப்பன படைத் தளபதியின் துரோகத்தால் வீழ்ந்தது. அரியணையை கைப்பற்றிய புஷ்யமித்ர சுங்கனின் ஆட்சி காலத்தில் தான், பார்ப்பனியம் மீண்டும் உயிர் பெற்றது. இந்த காலகட்டத்தில், சாகேதாவிக்கு ஒரு ஆளுநரை நியமித்த தகவல், தானதேவா கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன்பின், ஆதிகிரேக்க குஷன் பேரரசின் படையெடுப்பால், சாகேதாவில் பல புத்த அடையாளங்கள் அழிக்கப்பட்டன. கிபி.100இல் நடந்த கிரேக்க படையெடுப்பை பற்றிய தகவல்கள், யுக புராணத்தில் உள்ளன. கிபி 300இல் எழுதப்பட்ட "விஷ்ணு ஸ்மிரிதி"யில், 52 வைணவ புனித ஸ்தலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் ஒரு இடமாகக்கூட "அயோத்தி" அங்கீகரிக்கப்பட வில்லை.*

**சாகேதா பெயர் மாற்றம்**

*சாகேதா நகரத்தை "அயோத்தி" என்று மாற்றிய சிறுமை குப்தர்களையே சாரும். குப்தர் ஆட்சி (கிபி 320-550) பார்ப்பனர்களின் பொற் காலமாகத் திகழ்ந்தது. புத்த மதத்தில் ஊடுருவிய பார்ப்பனர்கள், அதை தங்களுக்கு ஏற்ற வகையில், சனாதன மதமாக மாற்றிக்கொண்டனர்.* ***பாசர், காளிதாசர் போன்ற பார்ப்பன கவிஞர்கள், சாகேதாவை, இராமயண அயோத்தியோடு தொடர்புப்படுத்தி பல பொய் சமஸ்கிருத பாடல்களை இயற்றினர்.*** *பார்ப்பன சூழ்ச்சியால், சாகேதா "அயோத்தி" ஆனது. கரண்டண்டா கல்வெட்டில் (கிபி 436), அயோத்தி, கோசல மாகாணத்தின் தலைநகரமாக பொறிக்கப்பட் டுள்ளது. ஸ்கந்த குப்தா ஆட்சிகாலத்தில், அயோத்தி ஒட்டுமொத்த குப்த பேரரசின் தலைநகரமாக மாறியது. சாகேதாவை அலுவல்பூர்வமாக, "அயோத்தி"யாக மாற்றியதும் ஸ்கந்தகுப்தா தான்.*

*குப்தர் ஆட்சி முடிந்தபின் கூட, "சாகேதா" இராமபக்தர்களின் நகரமாக மாறவில்லை. கிபி ஏழாம் நூற்றாண்டில், சுவான் ஜாங்க் என்ற சீனப் பயணி சாகேதாவுக்கு வந்து, பல குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறார். அதில், அவர் அயோத்தியை ஒரு புத்த நகரமாகவே குறிப்பிட் டுள்ளார். சாகேதாவை அயோத்தி என்று மாற்றியதன் விளைவாக, எட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ஜைன புராணமான "ஆதி புராணத்தில்" சாகேதா என்ற சொல்லோடு, அயோத்தி என்ற சொல்லும் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 13ஆம் நூற்றாண்டில், வைணவத்தில், "இராமநந்தி" என்ற பிரிவு உருவான பின் தான், சாகேதாவில் இராமப் பக்தி பரவ ஆரம்பித்தது. இந்தி மொழி இலக்கணமும், இலக்கியங்களும் இந்த காலகட்டத்தில் தான் வளர ஆரம்பித்தன. இதன் விளைவாக, சமஸ்கிருத வால்மீகி இராமாயணம் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டது. இராமபக்தியும் மென்மேலும் வளர்ந்தது. ஆனாலும், 15ஆம் நூற்றாண்டிலும், 16ஆம் நூற்றாண்டிலும்கூட, சாகேதா சைவ சமய நகரமாகவே இருந்தது. இதே காலகட்டத்தில், 1574இல் துளிதாசரால் எழுதப்பட்ட "இராமசரித மனாஸ்" என்ற நூலிலும் அயோத்தி, புனித ஸ்தலமாக குறிப்பிடப்படவில்லை. இத்தனைக்கும், துளசிதாசர் இந்த நூலை எழுதியதே அயோத்தியில் இருந்து தான்! இவ்வாறாக, 16ஆம் நூற்றாண்டிலும் கூட இராமபக்தர்களின் நகரம் என்ற நிலையை அடையாத அயோத்தி, 18ஆம் நூற்றாண்டில் தான் நயவஞ்சகமாக இராமபூமி யாக மாற்றப்பட்டுள்ளது. திட்டமிட்டு, இந்தியா முழுவதும் இருந்து, பல இராமநந்தி பார்ப்பன துறவிகள் அயோத்தியில் குடியமர்த்தப்பட்டனர். மதவெறியும் தூண்டிவிடப்பட்டது. இறுதியாக, பல கலவரங்களையும் நடத்தி, உயிர் பலிகளையும் வாங்கி, மசூதி இடிப்பு வரை இந்த சிக்கல் வளர்ந்துள்ளது (வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது).*


*ஆக,* ***தசரத ஜாதகம் உள்ளிட்ட கற்பனைப் புராணங்களை வைத்துப் பார்க்கும் போதும், இராமன் பிறந்த இடம் அயோத்தி இல்லை என்பது தெளிவாகிறது.*** *ஒரு பேச்சுக்கு இராமன் பிறந்த இடம் அயோத்தி என்று வைத்துக் கொண்டாலும் கூட, அந்த இராமாயண அயோத்திக்கும், தற்போதுள்ள அயோத்திக்கும் (சாகேதா) எந்த தொடர்பும் இல்லையென்பதும், ஆதாரங்களின் மூலம் தெளிவாகிறது. எனவே, சங் பரிவார் அமைப்பினரின் திட்டமிட்ட பொய் பிரச்சாரங்களை முறியடிக்க, இந்த வரலாற்று ஆதாரங்களையும், புராண குறிப்புகளையும் துணையாகக் கொள்வோம். மதவெறி பரவலைத் தடுப்போம்.*

(வரலாற்றில் பார்ப்பனிய வன்முறை எனும் தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் பிப்.24, 2019இல் நடத்திய கருத்தரங்கில் ஆற்றிய உரை)



# மருத்துவமனை சிகிச்சையிலிருந்து கூட்டம் பேசச் சென்ற பெரியார்

புலவர் கோ.இமயவரம்பன்



**ஒப்புக் கொண்ட கூட்டத்துக்குச் சென்றாக வேண்டும் என்ற கடமை உணர்வும் சமுதாயக் கவலையும் கொண்ட தலைவராகப் பெரியார் வாழ்ந்தார்.**

பெரியார் அவர்கள் சென்னையில் ஒரு தடவை கடுமையான வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டார்கள். அந்த காலத்தில் பெரியார் அவர்களுக்கு வழக்கமாக சிகிச்சை அளித்து வந்தவரான பிரபல நிபுணர் டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் அழைக்கப்பட்டார்.

டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் பெரியார்பால் பெரும் மதிப்பும் மரியாதையும் கொண்டவர். மேலும் பார்ப்பனர் அல்லாத மக்கள் நலனில் மிக்க அக்கறை கொண்டவரும் ஆவார்.

பார்ப்பனர் அல்லாத மக்களுக்கு வழிகாட்டவல்ல ஒரே தலைவர் பெரியார் அவர்களே ஆவார் என நம்பி தமது இறுதி மூச்சு அடங்கும் வரை வாழ்ந்த மாமனிதர் அவர் ஆவார்.

பெரியார் அவர்களும் சென்னைக்கு வந்தால் டாக்டர் அவர்களைச் சந்தித்து தமது உடல்நிலைக்கு சிகிச்சையும் மருந்தும் பெறுவ தோடு அவர்களோடு அளவளாவுவதையே தமது வாடிக்கையாகக் கொண்டவர் ஆவார்.

இந்த முறை டாக்டர் குருசாமி முதலியார் அவர்கள் பெரியார் அவர்களுடைய உடல்நிலை யினை சோதனை செய்து பார்த்துவிட்டு, 'அதிகப்படியான வயிற்றுப் போக்குப் போனது காரணமாக உடல்நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே தகுந்த சிகிச்சைக்காக அரசு பொது மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்' என்று கூறினார்.

டாக்டரின் ஆலோசனைப்படியே பெரியார், சென்னை அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்.

டாக்டர் முதலியார் அவர்கள் உடனடியாக 'செலைன்' ஏற்றும்படி பணித்து தீவிர சிகிச்சையினை அளிக்கத் தொடங்கினார்.

தம் கீழ் பணியாற்றும் ஒரு டாக்டரை, பெரியாருக்குப் பக்கத்திலேயே இருந்து கவனித்துக் கொள்ளும்படி உத்தரவும் இட்டார்.

இரவெல்லாம் 'செலைன்' ஏற்றப்பட்டது. மருந்துகள் ஊசி மூலமாகவும், மாத்திரை களாகவும் நான்கு மணிக்கு ஒரு தடவை அளித்த வண்ணமாகவே இருந்தார்கள்.

டாக்டர் அவர்களும் இரண்டொரு தடவைகள் நேரில் வந்து பெரியார் அவர்களைப்

பார்த்ததும், போன் மூலமாகவும் விசாரித்து அறிந்த வண்ணமாகவே இருந்தார்.

இரண்டொரு நாளில் பெரியார் சற்று குணமாகி சிறிது எழுந்து உட்காரும் நிலையினை அடைந்தார்.

எனினும் டாக்டர் மேலும் சில நாட்கள் பெரியாருக்குப் பூரண ஓய்வும், சிகிச்சையும் தேவை எனக் கருதினார்.

பெரியார் அவர்கள் ஒரு நாள் டைரியை எடுத்து புரட்டிக் கொண்டு இருந்தார். அன்றைய தினம் சென்னை தியாகராய நகர் 'பனகல் பார்க்கில்' தமக்குக் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று இருப்பது கண்ணில் பட்டது.

அய்யா அவர்கள் இன்றைக்கு பொதுக் கூட்டம் உள்ளதே. எப்படிப் பேசுவது? உடல்நிலை சிறிது குணம் அடைந்து இருந்த போதிலும் டாக்டர் அனுமதி அளிக்க மாட்டாரே என்று எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்.

பத்திரிகையில் பெரியார் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உள்ளார் என்ற செய்தியைக் கண்டு கூட்டத்தினை ஏற்பாடு செய்திருந்த இரண்டு முக்கிய தோழர்கள் மருத்துவமனைக்கு பெரியார் அவர்களைக் கண்டு உடல் நலம் விசாரிக்க வந்திருந்தார்கள்.

பெரியார் உடல்நிலையினைக் கண்ட தோழர்கள் கண்கலங்கியவர்களாக "அய்யா தங்கள் உடல்நிலை நன்கு குணமான பிறகு கூட்டத்தினை வேறு ஒரு தேதியில் வைத்துக் கொள்கிறோம். தங்களிடம் இதனைத் தெரிவித்து விட்டுப் போகவே வந்தோம்" என்றனர்.

பெரியார் அவர்களோ தாம் ஒத்துக் கொண்ட நிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் போய்ச் சேர்வதையே வழக்கமாகக கொண்டவர். எனவே வந்திருந்த கழகத் தோழர்களைப் பார்த்து "அய்யா மன்னிக்க வேண்டும். பணச் செலவு செய்து மிக்க பிரயாசை எடுத்துக் கொண்டு கூட்டம் ஏற்பாடு செய்துள்ளீர்கள்.

குறிப்பிட்ட தேதியில் கூட்டம் என்றும் விளம்பரப்படுத்தி விட்டீர்கள். தங்களுக்கும் பொது மக்களுக்கும் ஏமாற்றத்தினை உண்டு பண்ண நான் விரும்பவில்லை.

இப்போது எனக்கு உடல்நிலையே சற்று குணமாகி உள்ளது. வயிற்றுப் போக்கும் நின்று விட்டது. கொஞ்ச நேரம் பொதுக் கூட்டத்தில் பேசும் அளவிற்கு எனது உடல்நலம் இடம் தரும் என்றே நினைக்கிறேன். உடல்நலம் இடம் கொடுத்தாலும் டாக்டர் அனுமதி அளிக்க வேண்டுமே. அதுதான் கவலையாக உள்ளது" என்று கூறினார்.

வந்த தோழர்களோ கண்கள் குளமாக, "அய்யா தயவுசெய்து தங்கள் உடல்நிலையினைப் பார்த்துக் கொள்ளுங்கள். கூட்டம் வேறு ஒரு சமயம் வைத்துக் கொள்ளுகிறோம்" என்று எவ்வளவோ மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லியும் அய்யா கேட்கவில்லை.

தோழர்களைப் பார்த்து, "அய்யா நீங்கள் போய் கூட்ட ஏற்பாடுகளைச் செய்யுங்கள். எப்படியும் டாக்டரிடம் அனுமதி பெற்றுச் சிறிது நேரம் வந்து பேசி விட்டுத் திரும்பி விடுகிறேன்" என்று தோழர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்கள்.

எப்படி டாக்டரிடம் பொதுக் கூட்டத்திற்குச் சென்று வர அனுமதி கேட்பது என்று சிந்திக்கத் தொடங்கினார் அய்யா.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு முடிவுக்கு வந்தவராய் தம்மைக் கவனித்துக் கொள்ள டாக்டர் முதலியார் அவர்களால் நியமிக்கப்பட்டு இருந்த டாக்டரிடம் மெதுவாகப் பேச்சுத் தொடங்கினார்.

"டாக்டர் அய்யா இன்னும் எத்தனை நாளைக்கு ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டி இருக்கும்" என்று கேட்டார்.

டாக்டர் : "இன்னும் இரண்டொரு நாட்களில் முற்றிலும் குணமாகிவிடும். பிறகு சீஃப் எப்போது போகலாம் என்று சொல்லுகின்றாரோ அப்போது போகலாம்" என்றார்.

அய்யா அவர்கள் "டாக்டர் அய்யா ஒரு சின்ன உதவி. நான் திடீர் என்று மருத்துவமனைக்கு வந்துவிட்டபடியால் வீட்டில் சில பொருள்களைப் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிட்டு வர இயலவில்லை.

தயவு செய்து இரண்டு மணி நேரம் மாலை 6 மணி அளவில் அனுமதி அளித்தால் வீட்டுக்குச் சென்று அவைகளை எல்லாம் சரி செய்து விட்டு வந்து விடுகின்றேன்.

நமது டாக்டர் முதலியார் எப்போது டிஸ்சார்ஜ் செய்வாரோ, இல்லையோ, சொல்ல முடியாது. எனவே தாங்கள் தான் பெரிய மனது

பண்ண வேண்டும்" என்று இதமாகப் பேசினார்கள்.

அந்த டாக்டரும் பெரியார் அவர்களின் கூற்றினை உண்மை என்று கருதி விட்டார். சீஃப் மறுநாள் காலை தானே வரப்போகின்றார். பெரியார்தான் போய்விட்டு இரவு எட்டு மணிக்கெல்லாம் வந்து விடுவதாகக் கூறுகின்றாரே என்று எண்ணி அனுமதியும் அளித்து விட்டார்.

பெரியார் தாம் வெற்றி பெற்றுவிட்டதை எண்ணி மகிழ்ந்தார். மருத்துவமனையில் இருந்து நேரே வீடு போகாமல் பொதுக் கூட்டம் நடைபெறும் பனகல் பார்க்கை அடைந்தார்.

பெரியாரைக் கண்டதும் கூட்டம் நடத்துபவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஒரே மகிழ்ச்சி. தாம் ஒரு மணி நேரம் மட்டும் பேசிவிட்டு வந்து விடலாம் என்று எண்ணி போனவர் இரவு 10 மணி வரை பேசிக் கொண்டே இருந்து விட்டார்.

பிறகு கடிகாரத்தினைப் பார்த்த உடன் தூக்கிவாரிப்போட்டது. இரவு 8 மணி அளவில் மருத்துவமனைக்கு வந்துவிடுவதாக உறுதி கூறிவிட்டு வந்தோமே முடியாமல் போய்விட்டதே என்று வருந்தியவராய், கூட்டத்தை முடித்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்து தாமதமாக வந்தமைக்கு மன்னிக்க வேண்டும் என்று டாக்டரிடம் கூறிவிட்டு படுக்கையில் படுத்துக் கொண்டார்.

மறுநாள் காலை "இந்து" பத்திரிகையில் பனகல் பார்க்கில் திராவிடர் கழகத் தலைவர் ஈ.வெ.இராமசாமி நாயக்கர் உரை நிகழ்த்தினார் என்று செய்தி பிரசுரமாகி இருந்தது.

டாக்டர் முதலியார் இந்த செய்தியினைப் பத்திரிகையில் கண்டுவிட்டார். அவரால் முதலில் நம்ப முடியவில்லை. "இது உண்மைக்கு மாறான செய்தி. நாயக்கர்தான் மிகவும் மோசமான உடல்நிலைக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அல்லவா இருக்கின்றார். அவர் வீடு திரும்ப நான் அனுமதி அளிக்க வில்லையே.

குறைந்தது ஒரு வாரமாவது அவரை மருத்துவமனையிலேயே ஓய்வாக வைத்து விடுவது என்று அல்லவா எண்ணிக் கொண்டு இருக்கின் றேன்" என்று தனக்குத்தானே முனகிக் கொண்டார்.

பிறகு பனகல் பார்க் பகுதியில் இருந்து தம்மிடம் வந்த சிலரிடம் கேட்டு உண்மையினை உணர்ந்துகொண்டார்.

அடங்காச் சினம் கெண்டார். "இந்த நாயக்கர் என்ன விஷயம் புரியாதவரா? படிக்கத் தெரியாத பட்டிக்காட்டு ஆசாமியா?

கடுமையான வயிற்றுப் போக்குக் காரணமாக உடல்நலம் மிக மிகப் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த நிலையில் இவருக்கு என்ன கூட்டம் வேண்டிக் கிடக்கின்றது?

நான் அவரது உடல்நலம் குன்றிப் போய் உள்ளது கண்டு எவ்வளவு கவலை உள்ளவனாக இருக்கின்றேன். அது அவருக்கே தெரியும்.

தெரிந்தும் என்னை ஏமாற்றிவிட்டு என் அனுமதி இன்றி எப்படிப் போனார். நாயக்கர் உயிர் எவ்வளவு விலை மதிப்பற்றது! இவர் நீண்ட நாள் வாழ்ந்து பார்ப்பனர் அல்லாத தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும், வழிகாட்ட வேண்டும் என்பதுதானே என்னுடைய விருப்பம். அது மட்டுமா, எல்லாத் தமிழர்களின் விருப்பமும் அதுதானே" என்று தனக்குக் கீழ் பணியாற்றக் கூடிய டாக்டர்களிடமும், தம்மைக் காண வந்த பிரமுகர்களிடமும் கூறி ஆத்திரப்பட்டார்.

அன்றைக்குக் காலை சற்று முன்னதாகவே மருத்துவமனைக்கு வந்து விட்டார்.

அய்யா அவர்கள் தங்கி இருந்த வார்டிற்கு நேரே வந்தார். டூட்டி டாக்டர், நர்ஸ் முதலானவர்கள் பரபரப்புடன் காணப்பட்டனர்.

பெரியார் அவர்களைத் தான் டிஸ்சார்ஜ் செய்வதற்காக சற்று முன்னதாகவே டாக்டர் வந்து உள்ளார் போலும் என்று முதலில் எண்ணிக் கொண்டனர்.

ஆனால் டாக்டர் கடுகடுப்பான முகத்துடன் காணப்பட்டதால் ஏதேனும் நிகழப் போகின்றது என்றும் எண்ணி அஞ்சினர்.

டாக்டர் முதலியார் அவர்கள் பெரியார் அவர்களைக் கவனித்து வந்த டாக்டர். நர்ஸ் முதலானவர்களைக் கூப்பிட்டு இரவு பெரியார் எங்கு போனார்? எப்படி அனுமதி அளித்தீர்கள்? என்று கடுமையாகக் கடிந்து கொண்டார்.

எல்லோரும் நடுநடுங்கிப் போனார்கள். 'ஸ்பெஷல்' வார்டே அமர்க்களப்பட்டது.

டாக்டர் முதலியார் அவர்கள் வழக்கமாக காலை ஆஸ்பத்திரிக்கு வந்த உடன் முதலில் அய்யா அவர்களைப் பார்த்து விட்டுத்தான் மற்ற நோயாளிகளைப் பார்க்கச் செல்வது வழக்கம்.

ஆனால் அன்று டாக்டர் முதலியார் அவர்கள் பெரியார் அவர்கள் தங்கி இருந்த அறை பக்கமே திரும்பவில்லை. மற்ற நோயாளிகளைப் பார்த்துக் கொண்டு போய்க் கொண்டு இருந்தார்.

பெரியார் அவர்கள் தமது செயல் காரணமாகத் தானே டாக்டர்கள், நர்சுகள் முதலானோர் டாக்டர் முதலியார் அவர்களின் கோபத்திற்கு ஆளாக நேர்ந்தது என்று எண்ணி மனம் வருந்தினார்கள்.

டாக்டர் அவர்கள் தமது வேலைகளை எல்லாம் முடித்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பும் போது மதியம் 2 மணி அளவில் பெரியார் தங்கி இருந்த அறைக்கு வந்தார்கள்.

சற்று சினம் தணிந்து உள்ளவராகக் காணப்பட்டார். அய்யா அவர்கள் கவலை தோய்ந்த முகத்தவராய் 'டாக்டர் மன்னிக்க வேண்டும். தப்பு என்னுடையது. டாக்டர், நர்ஸ்கள் உடையது அல்ல.

நான்தான் வீட்டுக்குப் போய்விட்டு வந்து விடுவதாகக் கூறிவிட்டுப் பொதுக் கூட்டத்திற்கு போய் வந்தேன். கூட்டம் முதலிலேயே ஒப்புக் கொள்ளப்பட்ட கூட்டம்.

மேலும் அதிகப்படியான செலவும் அதற்குச் செய்துவிட்டார்கள். அவர்களுக்கு ஏமாற்றமும் பொருள் நட்டமும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதற்காக சிறிது தலையைக் காட்டிவிட்டு வந்து விடலாம் என்றுதான் வீட்டுக்குப் போய்விட்டு வந்து விடுவதாகக் கூறி விட்டுக் கூட்டத்திற்கு போய் வந்து விட்டேன். தங்கள் அனுமதி இன்றி போனது தப்புதான் மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

**உங்கள் வாழ்வுதான் எங்கள் வாழ்வு!**

டாக்டர் அவர்களும் முற்றிலும் கோபம் தணிந்த நிலையில் இருந்தமையால் அய்யா அவர்களைப் பார்த்து "அய்யா நீங்கள் சாதாரண மனிதர் அல்ல. தமிழ்நாட்டு மக்களுக்கு வழிகாட்ட வேண்டியவர். பார்ப்பனர் அல்லாதாரின் நல்வாழ்வு தங்கள் கையில்தான் உள்ளது.

உங்கள் உடல்நலம் நன்றாக இருந்தால் தானே நீண்ட நாள் பாடுபடமுடியும். உங்கள் உடல்நிலை கண்டு கலக்கம் உடையவனாக நான் இருக்கிறேன்" என்று தழுதழுத்தக் குரலில் கூறினார்.

அய்யா அவர்களும் டாக்ரின் சீற்றத்தில் இருந்து விடுபட்டதை எண்ணி உள்ளூர மகிழ்ச்சியும் மன நிம்மதியும் அடைந்தார்கள்.

பொதுவாகவே டாக்டர்கள் தங்களிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் நோயாளிகள் தங்களின் அறிவுரைகளைக் கடைபிடிக்கத் தவறினால் நோயாளிகளிடம் கடிந்து கொள்வது உண்டு. அதற்குக் காரணம் தங்களுடைய சிகிச்சை நல்ல பலனை அளிக்கவில்லையானால் தங்களின் பெயருக்கும் புகழுக்கும் களங்கம் வந்து விடுமே என்ற அவர்களது கவலையேயாகும்.

ஆனால் டாக்டர் குருசாமி முதலியார் பெரியார் அவர்களிடம் சினம் கொண்டது தமது சிகிச்சை பலனளிக்காமல் போய் தமது நற்பெயருக்கு குறை வந்து விடுமே என்ற தன்னல ஆசையினால் அல்ல; பெரியார் வாழ்ந்தால்தான் தமிழர் சமுதாயத்திற்கு வாழ்வு உண்டு. அவருக்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டால் தமிழர் சமுதாயம் நாதியற்றப் போகுமே என்ற பொதுநலக் கண்ணோட்டம் அவரின் உள்ளத்தில் மேலோங்கி யிருந்ததே அவர்தம் சீற்றத்திற்குக் காரணம்.

தமிழகம் கண்ட தலைசிறந்த மருத்துவ மேதைகளில் ஒருவரான டாக்டர் குருசாமி முதலியார் போன்றவர்கள் அய்யா அவர்களின் ஆயுள் அதிகரிப்பு தமிழர் சமுதாயத்தின் நல்வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை எந்த அளவிற்கு உணர்ந்திருந்தார் என்பது இந்நிகழ்ச்சியால் விளங்குகிறது. இது இன்றைய இளைய தலைமுறையினர் பெரியாரின் தொண்டு எத்தகையது என்பதை உணரச் செய்யவல்ல நிகழ்ச்சியுமாகும்.

அது மட்டுமா? இந்நிகழ்ச்சி இன்னொரு செய்தியையும் நமக்கு உணர்த்துகின்றது. சமுதாய மருத்துவரான பெரியார் ஒரு கூட்ட நிகழ்ச்சிக்கு ஒத்துக் கொண்டால் குறிப்பிட்ட நேரத்தில் மேடைக்கு வந்து சேர்ந்து விடுகின்ற வழக்கத்தினை உடையவர். அவருடைய 60 ஆண்டுகால பொது வாழ்வில் ஒப்புக் கொண்ட நிகழ்ச்சிக்கு செல்லாமல் கூட்டத்தை ஒத்தி வைத்ததாக இரண்டொரு சம்பவத்தைத் தவிர வேறு காண முடியவில்லை.

– 'விடுதலை' பெரியார் பிறந்த நாள் மலரிலிருந்து,
கட்டுரையாளர் : பெரியாரின் தனிச் செயலாளராகப் பணியாற்றியவர்

# லெமூரியா (குமரிக் கண்டம்) என்பது ஒரு கற்பனை

**நக்கீரன்**

சார்லஸ் ராபர்ட் டார்வின் (Charles Robert Darwin - 1809-1882) என்பவர் ஓர் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் ஆவர். இவர் முன்வைத்த உயிரினங்களின் படிமலர்ச்சிக் கோட்பாடு (Theory of Evolution) அதுவரை நம்பி வந்த படைப்புப் பற்றிய கோட்பாட்டைப் புரட்டிப் போட்டது. படிமலர்ச்சிக் கோட்பாடு என்பது ஓர் அடிப்படையான புரட்சிகரமான அறிவியற் கொள்கை ஆகும். டார்வின் தாம் கண்டுபிடித்த உண்மைகளையும், கோட்பாடுகளையும், 1859 ஆம் ஆண்டில் உயிரினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இவர் கடல் வழியே, எச்எம்எஸ் பீகிள் (HMS Beagle) என்னும் கப்பலில், உலகில் பல இடங்களுக்கும் சென்று, குறிப்பாக காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று நிகழ்த்திய உயிரினங்கள் பற்றி ஆராய்ந்தார்.

படிமலர்ச்சிக் கருதுகோள் (Theory of Evolution) நீர்வாழ்வன, நிலத்தில் ஊர்வன, மேலே பறப்பன போன்ற உயிரினங்கள் தாமாகவே தோன்றின, அவை இன்றுள்ளது போல யாராலும் படைக்கப் படவில்லை என்பதை நிறுவியது. குரங்கில் இருந்து மனிதன் மேலும் நாம் காணும் உயிரினங்களின் உருவம் தொடக்க காலத்தில் இருந்தே வரவில்லை. அவை ஒற்றைக் கலம் (Single cell) உயிரியிற் தொடங்கி இடையறாத மாற்றம், படிமுறை வளர்ச்சி, மலர்ச்சி, இனப் பெருக்கம், இடப் பெருக்கம், இயற்கைத் தேர்வு (Natural Selection) நிலத்தின் தன்மை, சூழல் முதலியவற்றுக்கு ஏற்ப வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்தல் காரணமாக உருமாற்றம் அடைந்து வந்துள்ளன.

இன்று நாம் காணும், மரம், செடி, கொடிகள் கடலில் இருந்து கரையில் விழுந்த சிறு சாதாளையின் படிமலர்ச்சி ஆகும். மனிதனை எடுத்துக் கொண்டால் அவன் "முழுசாகக் கடவுளால் படைக்கப்படவில்லை, மண்ணின் செழுமையால் ஒன்று கூடி உண்டான உயிரணுக்களின் படிமலர்ச்சியே மனிதன். அதாவது பூச்சியாய், புழுவாய், நத்தையாய், மீனாய், பறவையாய், குரங்காய் வளர்ந்து இறுதியில் அவற்றின் திருத்த உருவமாய் மனிதன் தோன்றினான் என டார்வின் படிமலர்ச்சிக் கோட்பாடு மூலம் நிறுவினார்.

மனிதன் ஊர்வன நிலையைக் கடந்து நாலு காலால் நடக்கும் குரங்கு நிலை எய்திப் பின்னர் வளைந்த முதுகை நேர் நிமிர்த்தி நாலு கால்களில் இரண்டைக் கைகளாகப் பயன்படுத்தி மீதி இரண்டு காலால் நடக்கக் கற்றுக் கொண்டு மரக் கொப்புகளுக்குப் பதில் குடிசை கட்டி சிற்சில கருவிகளைச் செய்து வாழப் பல இலட்சம் ஆண்டுகள் எடுத்தது என டார்வின் விளக்கினார்.

உலகத்தையும் அதிலுள்ள உயிர்களையும் கடவுள் படைத்தார், அரைகுறையாக அல்ல ஒவ்வொன்றையும் முழுதாகவே படைத்தார், அதே போல் ஆறறிவு படைத்த ஆணையும் பெண்ணையும் கடவுளே படைத்தார் என்றும் மதங்களும் மதவாதிகளும் சொல்லி வந்த படைப்புக் கோட்பாட்டை டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு தகர்த்து எறிந்தது.

டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு உயிரினங்கள் தம் நிலை பேற்றுக்காகப் போராடுகின்றன, இறுதியில் தகுதியுள்ளவை மட்டுமே தப்பிப் பிழைக்கின்றன (The Struggle for Existence of the Fittest) எனக் கூறியது.

டார்வினது படிமலர்சிக் கோட்பாடு பல அறிவியல்வாதிகளின் சிந்தனையில் பலத்த மாற்றத்தை உண்டாக்கியது. அதில் ஒருவர் விலங்கியல் அறிஞர் பிலிப் சிலேட்டர் (Philip Sclater) ஆவர்.

1860களில் தனது கள ஆராய்ச்சியில் ஒரு புதுமையைக் கண்டார். மடகஸ்க்கரில் காணப்

பட்ட குரங்கு இனத்தை ஒத்த இனம் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் காணப்படவில்லை.

ஆனால் அந்தக் குரங்கு இனத்தின் தொல்லுயிர் எச்சங்கள் இந்தியா, இன்றைய பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் காணப்பட்டன. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளில் காணப்பட வில்லை. இந்த முரண்பாட்டின் அடிப்படையில் பிலிப் சிலேட்டர் 1864 இல் ஒரு கோட்பாட்டை முன்மொழிந்தார். 'மடகஸ்கரின் பால்குடிகள்' என்ற அவரது கட்டுரை காலாண்டுக்கு ஒரு முறை வெளிவரும் அறிவியல் ஏட்டில் (Journal of Science) வெளிவந்தது. அதில் இந்தியாவில் இருந்து மடகஸ்க்கர் வரை இந்திய சமுத்திரத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்திருக்க வேண்டும் என எழுதியிருந்தார். அவரால் அனுமானிக்கப்பட்ட அந்தக் கண்டத்துக்கு லெமூரியா எனப் பெயர் இட்டார். அது அறிவியல் சமூகத்தில் ஓரளவு ஒப்புதலைப் பெற்றிருந்தது.

பிலிப் சிலேட்டர் காலம் இந்தப் புவித் தட்டுக் கட்டுமானவியல் மற்றும் கண்டங்களின் நகர்வு பற்றி யாரும் அறிந்திராத (During his time the scientific concepts of plate tectonics and continental drift were not known) காலம்.

பிலிப் சிலேட்டரின் முன்மொழிவு அறிவியல் கற்பனைக் கதைகள் எழுதுவோர் மத்தியில் பிரபலமானது. அப்படியான கற்பனைக் கதைகளைப் படிக்கும் வாசகர் மத்தியிலும் பெரிய வரவேற்பைப் பெற்றது.

லெமூரியாக் கண்டம் அமானுசிய சோதிடரான மடாம் ஹெலனா பிலேவற்ஸ்கி (Madame Helena Blavatsky) அவர்களாலும் பிரபல்யம் அடைந்தது. அவர் லெமூரியா கண்டத்தின் வரைபடத்தைக் கண்டதாகவும் சொன்னார்.

விஞ்ஞானி வில்லியம் ஸ்கொட் எலியட் என்பவர் 'அட்லாண்டிஸ், அழிந்த லெமுரியாவின் கதை' ('The Story of Atlantis and Lost Lemuria') என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலில் விரிவாக இந்தியா மற்றும் பசிபிக் கடல் தொடக்கம் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள் வரை நீண்டுள்ள லெமூரியா கண்டத்தின் புவியிலை விளக்கி எழுதியிருந்தார். ஸ்கொட் எலியட் ஒரு அறிவியலாளர் அல்லது புவியியலாளர் அல்லது தொல்பொருள் நிபுணர் அல்லர்.

லெமூரியா என்ற எடுகோள் நிலவியல் மற்றும் புவித்தட்டுக் கட்டுமானவியல் பற்றிய நவீன புரிந்துணர்வு மூலமாக இன்று வழக்கற்றுப் போய்விட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய அறிவியலாளர்கள் மற்றும் புவியியலாளர்கள் லெமூரியா பற்றிய எடுகோளை முற்றாக நிராகரித்தார்கள். இந்தியா மற்றும் அண்டார்டிகா இடையே புவித்தட்டுக் கட்டுமானம் இருப்பது இயற்பியல் அடிப்படையில் சாத்தியமற்றது என்றார்கள். 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மடகஸ்க்கர் இந்தியாவோடு இணைந்திருந்த போது குரங்கின விலங்கு இருக்கவில்லை.

அதீத ஆர்வம் காரணமாகச் சில தமிழ் ஆர்வலர்கள் குமரிக் கண்டம் (லெமூரியா) தமிழர்கள் வாழ்ந்த இடம் அங்கிருந்து அவர்கள் இன்றைய தமிழ்நாடு முதற் கொண்டு பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தார்கள் என்று எழுதியும் காணொளி வாயிலாக ஒளிபரப்பியும் வருகிறார்கள்.

குமரிக்கண்டம் என்பது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்தியாவின் தெற்கே இருந்ததாகக் கருதப்படும் ஒரு புராண கண்டத்தைக் குறிக்கிறது. இன்றைய குமரிமுனையின் தென்பகுதி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற்கோள்களால் விழுங்கப்பட்டது என்பது தமிழ் இலக்கியங்களால் தெரிய வருகிறது.

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது, பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" எனச் சிலப்பதிகாரத்தில் தென்னவன் வாழ்த்தப்படுகிறான்.

பாண்டிய பேரரசு கடல்கோளால் அழிந்தது பற்றிய குறிப்புகளை இறையனார் அகப் பொருளில் காணமுடிகிறது. இதில் தமிழகத்தை ஆண்ட அரசர்களின் வரிசை, தமிழ் அவையில் இருந்த புலவர்களின் வரிசை முதலியன குறிக்கப் பெற்றுள்ளன. இதுபோன்ற செய்திகள் தமிழ் இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை. நக்கீரரால் கூறப்பட்டிருந்த இந்தக் கருத்து முதல் நூற் றாண்டைச் சேர்ந்தது என்று அறியப்படுகிறது.

தமிழ்மொழி அல்லது தமிழர் சிறப்பு தொன்மையில் அல்ல தொடர்ச்சியில் இருக்கிறது. முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்று நிறுவ முயற்சிப்பதில் மகிமை இல்லை. ●

# காதலில், கவனம் தேவை



பத்மா

> “ உங்கள் மகளுக்கு இப்படி வன்கொடுமையோ பாலியல் தொல்லையோ நிகழ்ந்திருந்தால், அதை அவள் உங்களோடு பகிரத் துணிந்தால், எந்தவிதமான குற்றம்சாட்டுதலும் இல்லாமல் அவளுக்குத் துணை நில்லுங்கள். ”

பொள்ளாச்சி சம்பவத்திலிருந்து நாம் பல பாடங்களைக் கற்க வேண்டியுள்ளது. நாம் ஏன் ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறு விதமாக வளர்க்கிறோம்? பெண்களைத் தைரியம் இல்லாதவர் களாகவும் ஆண்களைக் கோளாறு நிறைந்தவர் களாகவும் வளர்க்கிறோம்.

பாதிக்கப்பட்ட பெண்களின் பெற்றோர்கள் அடையாளத்தை மறைத்து நிற்கிறார்கள். பாதிப்பைத் தந்த பையனின் தாயோ வீராவேசமாக வாதாடுகிறார். பெண்ணை மட்டுமே அவமான உணர்வோடு வளர்க்க வில்லை. பெண்ணைப் பெற்றதாலேயே அவமானப் பட்டு நிற்க நினைக்கிறோம். ஏன் சமூகம் இப்படி இரண்டு மதிப்பீடுகளோடு தொடர்ந்து இயங்கி வருகிறது?

ஏழு வருடங்களாக எத்தனையோ பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓரிருவர் புகார் அளித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் மௌனம் காத்து நிற்கிறார்கள். ஒரு பெண்ணுக்குக் குடும்பம் ஆதரவாக நிற்க, அவர்கள் காவல் நிலையத்தை அணுகியிருக் கிறார்கள்.

இப்போதுதான் நமக்குப் பிரச்சினையின் “பூதாகாரம்” தெரிய ஆரம்பித்திருக்கிறது. ஆனால், ஓரிரண்டு நாட்களில் பாலியல் “பூத”ச் செய்தியை வேறு “பூத”ச் செய்தி வந்து சாப்பிட்டுவிடும். நாமும் அதைக் கவனிக்கப் போய்விடுவோம். ஆனால், பாதிக்கப்பட்ட பெண்களின் மௌனமான துயரம் தொடரும். யோசித்துப் பாருங்கள்; எத்தனை பெண்கள் வெளியே சொல்ல முடியாமல் உள்ளுக்குள்ளேயே பதற்றத்தோடு மருகிக்கொண்டு இருப்பார்கள்?

ஏனென்றால், கயவர்கள் கையில் மாட்டியிருந்த வீடியோ படங்கள், இப்பொழுது எங்கே எப்படி வெளியே வருமோ என்ற பதற்றமும் விசாரணையில் தனது அடையாளம் தெரிந்துவிடுமோ என்ற பயமும் அவர்களைத் துரத்தும். இழந்ததை அவமானமாகக் கருதாமல் கடந்து போ என்று சொல்லிவிடுவது சுலபம். ஆனால், பல வருடங்களாக மண்டைக்குள் ஏற்றப்பட்டிருக்கும் அவமானம் என்ற துருவைத் துடைத்துவிட முடியுமா என்று தெரியவில்லை. இதைப் படிப்பவர்களில் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம்; பாதிக்கப்பட்டது தெரிந்த குடும்பங்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் இருக்கலாம். இப்போது இந்தப் பெண்களுக்கும் குடும்பங்களுக்கும் தேவைப் படுவது சரியான ஆற்றுப்படுத்துதல்.

ஒரு நாளில் மன மாற்றம் நிகழ்ந்துவிடாது. பாதிக்கப்பட்டவர்கள் தனக்கு நிகழ்ந்தது ஒன்றுமில்லை என அதைக் கடக்க வேண்டும். வாழ்க்கையின் பயணம் இன்னும் நீளும் என்ற மன உணர்வையும் உறுதியையும் பெற ஆற்றுப்படுத்துதல் தேவைப்படும். தயவுசெய்து இந்தத் தேவையை உணருங்கள்; சேவைகளை நாடுங்கள்.

உங்கள் மகளுக்கு இப்படி வன் கொடுமையோ பாலியல் தொல்லையோ நிகழ்ந்திருந்தால், அதை அவள் உங்களோடு பகிரத் துணிந்தால், எந்தவிதமான குற்றம்சாட்டுதலும் இல்லாமல் அவளுக்குத் துணை நில்லுங்கள். உங்களுக்கும் உங்கள் பாரம்பரிய பார்வையி லிருந்து வெளிவருவது கடினமாகத்தான் இருக்கும். ஆனால், இதற்கெல்லாம் உயிரை மாய்த்துக்கொள்ளுதல் தீர்வாக முடியாது. நம் முன் நிற்பது, மேலே செல்வது என்ற வழிதான். அதை உறுதி யோடு செய்யுங்கள். அதற்கு நீங்களும் தொடர்ந்து உங்களுக்குத் தைரியம் அளிக்கக்கூடிய பலமாக நிற்கக்கூடியவர்களோடு கைகோத்துக் கொள்ளுங்கள்.

இன்னும் எவ்வளவு காலம்தான் இப்படிக் கொம்பு சீவிவிட்டு ஆண் பிள்ளைகளை வளர்க்கப் போகிறீர்கள்? உங்கள் வீட்டுப் பையனைப் போலவே திமிர்த்தனத்துடன் இன்னொருவரின் வீட்டுப் பையனும் வளர்க்கப்பட்டிருந்தால், பாதிக்கப்படப் போவது உங்கள் வீட்டுப் பெண்ணாகக்கூட இருக்கலாம்.

அனைவரும் பொறுப்பாகச் செயல்பட வேண்டிய விஷயம் இது. பாதிப்புக்குள்ளான பெண்ணோ அவளுக்கு வேண்டியவர்களோ புகார் கொடுக்க முன்வந்தால் பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை சொல்வதை விட்டுவிட்டு, பண பலத்துக்கும் அதிகார பலத்துக்கும் அஞ்சாமல் நேர்மையோடு செயல்படுங்கள்.

பாதிக்கப்பட்ட பெண்கள் போலீஸிடம் சொல்ல வேண்டுமென்று இல்லை. உங்களுக்குச் சரியாகப் பட்டால் உங்கள் பெற்றோர் உங்களோடு துணை நிற்பார்கள் என்று பட்டால் அவர்களிடம் பகிருங்கள். அப்படியான நம்பிக்கை அவர்களிடம் தோன்றாவிட்டால், நீங்கள் கடந்து வந்த பாதையில் உங்களின் நம்பிக்கைக்குரிய பெரிய வயதுப் பெண்கள் (டாக்டர், டீச்சர், அத்தை) யாரிடமாவது சொல் லுங்கள். எவ்வளவுதான் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தாலும் ஆண்கள் வேண்டாம். இது ஆண்கள்மீதான விமர்சனமல்ல. உடல் ரீதியான, மனரீதியான உளைச்சல்களைப் பகிர தற்சமயம் சரியான துணை, வழிகாட்டக் கூடிய பெண்கள்தாம்.

வாழ்க்கை வாழ்வதற்குத்தான். துணிச்ச லோடு கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் துயரத்திலிருந்து வெளிவரப் பாருங்கள். ஆக்கப்பூர்வமான இலக்கு ஒன்றை வகுத்துக் கொண்டு, அதில் உங்கள் முழு ஆற்றலையும் நேரத்தையும் செலுத்துங்கள். நடந்ததை விபத்தாகப் பார்க்கப் பழக ஆரம்பியுங்களேன்.

**மற்ற இளம் பெண்களுக்கு**

நம்முடைய முன் யோசனையற்ற, பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாத தன்மையால் என்ன நேரிடும் என்பதற்கு பொள்ளாச்சி சம்பவங்களே பெரிய பாடம். இந்த வயதில் ஆண்களுடன் பேசவும் நேரம் செலவழிக்கவும் தோன்றும். காதலிக்க யாராவது கிடைத்தால் காதலிக்கவும் தோன்றலாம்.

யாரைக் காதலிக்கிறோம், எதற்காகக் காதலிக் கிறோம் என்ற கேள்விகளை உங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்ளுங்கள். என்னுடைய ஒரு பயிலரங்கில் மாணவி ஒருவர் என்னிடம், “காதலிக்கும் ஆண் சரியானவன்தானா என்று எப்படிக் கண்டுபிடிப்பது” எனக் கேட்டார்.

நீங்கள் காதலிக்கும் ஆண் உங்களிடம் -

1. உங்கள் அழகைப் பற்றியும் உடலைப் பற்றியும் மட்டுமே பேசுகிறாரா?

2. உங்கள் படிப்பு, வேலை, வாழ்க் கையில் உங்களுக்கான கனவுகள் ஆகியவை பற்றிக் காதுகொடுத்துக் கேட்பதில்லையா?

3. தனியிடங்களில் சந்திப்பது பற்றி மட்டுமே ஆர்வம் காட்டுகிறாரா?

**ஒரு பயிலரங்கில் மாணவி ஒருவர் என்னிடம், “காதலிக்கும் ஆண் சரியானவன்தானா என்று எப்படிக் கண்டுபிடிப்பது” எனக் கேட்டார்.**

4. மணந்துகொள்ளப் போகிறோமே; அதனால் கொஞ்சம் நெருங்கிப் பழகினால் என்ன தவறு என்று கேட்கிறாரா?

5. உடல் ரீதியான இச்சைக்குக் கொஞ்சமாவது ஈடுகொடுக்காவிட்டால் உங்களை விட்டுப் போய்விடுவாரோ, காதலும் முறிந்து விடுமோ என்ற பயம் வருகிறதா?

மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் ஆம் என்றால், இந்த நட்பு/உறவு அல்லது காதல் பற்றி நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். காதலிக்கும் ஆண்கள் எல்லோரும் மோசம் என்பதில்லை. அவர்களை வளர்த்த விதத்தில் உடல்ரீதியான இச்சை என்பதை அவர்கள் இன்பமாகப் பார்க்கிறார்களே தவிர அந்த இச்சையின் அளவு எதுவரை நீளும் அல்லது நீளலாம் என்பது பற்றிய முழுமையான புரிதல் இல்லை. ‘இதுக்குப் போய் அலட்டிக்கலாமா’ என்ற பார்வைதான் அவர்களிடம் மேலோங்கி இருக்கும்படி அவர்கள் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

உங்கள் உறவின் விழைவும் உடல் ரீதியான இச்சையும் உங்களுக்கும் வலியாகக் கூடாது; இன்னொருவருக்கும் வலியாகக் கூடாது. ஏமாற்றுமொழிக்கு மயங்கவும் வேண்டாம்; ஏமாற்று நம்பிக்கையையும் தர வேண்டாம்.

இறுதியாக முக்கியமான ஒன்று, நாங்கள் பாலியல் தொழில் செய்யும் பெண்களிடம் சொல்வது உண்டு. “தெரியாத வாடிக்கையாளர் என்றால் அவர்கள் கூப்பிடும் இடத்துக்கு நீ போகாதே; உனக்குப் பழக்கம் இருக்கும் இடத்துக்கு அவர்களை அழைத்துச் செல்” என்போம். ஏனென்றால், பாலியல் தொழிலில் ஒருவருக்கு என்று கூப்பிட்டு, கூட்டுப் பாலியல் வன்முறையில் ஈடுபடுத்தி கொடுமைப்படுத்து பவர்களும் உண்டு. பாலியல் தொழிலாளர் களுக்கே இப்படியான எச்சரிக்கை தேவை என்றால், காதலிப்பவர்கள் இன்னும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. காதலிக்கும் யாரையும் தனி இடங்களில் உங்களுக்கு அறிமுகம் இல்லாத இடங்களில் சந்திப்பதைக் கண்டிப்பாகத் தவிருங்கள். பொது இடங்களில் தனியாக உட்கார்ந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை நீங்கள் கையாளக் கற்றுக் கொண்டேதான் ஆக வேண்டும்.

**கட்டுரையாளர், எழுத்தாளர், செயற்பாட்டாளர்.**

**(தோழர் பத்மா ‘தமிழ் இந்து’வில் எழுதிய தொடரிலிருந்து)**

# ‘அன்னவர்கள்’ வாழி! வாழி!!

பாவலர்

**தமிழேந்தி**



நரியார்கள், ‘புரி’யார்கள், நல்லனவே
தெரியார்கள் நம்பும் வண்ணம்
திரிபான ஒருகருத்தை – திராவிடத்தில்
குறைகாணும் கருத்தை, உண்மை
புரியாத சிலபேர்கள் பொழுதெல்லாம்
உரைக்கின்றார்; பொதுவாய் யாவும்
பெரியார்தான் கெடுத்தாராம்; பெருமையெலாம்
சிதைத்தாராம் பிதற்று கின்றார்.

‘மொழிப்போரில் பெரியார்க்கு முற்றாகப்
பங்கில்லை’ என்றுஅ வர்பேர்
கழிக்கின்றார்; தமிழினத்தைக் கருவறுத்த
கன்னடரே அவர்தான் என்று
பழிக்கின்றார்; பகுத்தறிவுக் கனிதந்த
பயன்மரத்தின் வேரைத் தோண்டி
அழிக்கின்றார்; ஒவ்வொன்றாய்க் குற்றங்கள்
அவர்மீதில் அடுக்கு கின்றார்.

‘தமிழகமா? திராவிடமா?’ சொல்லாய்வுச்
சண்டைஅவர் அறியார்; இங்கே
நமதுழைப்பை உறிஞ்சுகிற நால்வருணச்
சாதிமுறை ஒழித்தல் ஒன்றே
தமதுபணி என்றெடுத்தார்; சலியாமல்
போர்தொடுத்தார்; தன்மானத்தைச்
சுமந்தபடி முதுகொடியச் சூத்திரர்க்கும்
பஞ்சமர்க்கும் தொண்டு செய்தார்.

அடுக்குமொழித் தமிழறியார்; அகம்புறமா
ஒன்றறியார்; ஆனால் சாதி
அடுக்குமுறைக் கருத்தியலின் இலக்கியங்கள்
ஆதரியார்! என்ற போதும்
கெடுக்கவந்த வடமொழியை இந்தியினை
எதிர்த்திட்ட கிளர்ச்சிப் போரில்
நடுப்பரணாய் நின்றவர்யார்? தனிச்சிறையில்
நொந்தவர் யார்? மறத்தல் நன்றோ?

பிறவியினால் தாழ்வுயர்வு பேசுகின்ற
மடமையினைத் தொலைத்தல் வேண்டி
வரைமுறை இலாச்செல்வம் வாய்த்திருந்தும்
மக்களுக்காய் வாழ வந்த
துறவிமனம் கொண்டவரைத் தொண்டிலின்பம்
கண்டவரைத் தூற்றித் தூற்றி
நிறைவடைவர்சில நல்லார்; அன்னவர்கள்
நெடுங்காலம் வாழி! வாழி!

மே 5, 2019இல் முடிவெய்திய
பாவலர் தமிழேந்தியின் கவிதை –
அவரது நினைவாக...




Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at
BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29,
New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN